மஞ்சரி

APRIL. '48

பங்குனி

1-5

கத்தி விளையாட்டு

★

மிருகங்களின் கூத்து

★

கல்யாண வேடிக்கை

★

வியாபார யுக்தி

★

இந்தியாவின் பிஸ்மா

★

சுகப் பிரசவம்

★

முயல்: சிறுகதை

-6-
அணா

தூற்றிய மணிகள்

செழிப்பான கதிரிலே நெல்லும் இருக்கும், பதரும் இருக்கும். ஆனால் நமக்கு மணிமணியான நெல்லே வேண்டும். அதைத் தூற்றித் தருபவள் குடியானவ மங்கை. (அட்டைப் படம்.) இதேபோல், சொற்களின் செழிப்புக்கு நடுவே மணியான சில விஷயங்கள் புதைந்து கிடைக்கும். அவற்றைப் பிரித்தெடுத்து மாசுமறு நீக்கிக் கொடுக்கிறது மஞ்சரி.

நமது புராதனக் கலைவாழ்வின் சின்னமான தென்னிந்திய விக்கிரகங்களைப்பற்றிய கட்டுரை 37-ஆம் பக்கத்திலும், இன்று மௌலானா ஆஜாத் கூறும் கட்டாய ஆசிரியர் சேவையைப் பற்றி ராஜாஜி முப்பது ஆண்டுகளுக்கு முன்பே எழுதிய கட்டுரை 52-ஆம் பக்கத்திலும் இருக்கின்றன. இவை யாவரும் படிக்கவேண்டியவை. சுகப் பிரசவம் (பக். 48) எவ்வளவு சுலபமானது என்பதை எந்தப் பெண்மணியும் அறிந்துகொள்ள வேண்டும். ஆஸ்திக நாஸ்திகக் கருத்துக்களை விளக்கும் டாவோ, சார்வாக மதங்களின் சாரத்தை இரு கட்டுரைகளில் காணலாம். இன்னும் பல பல விஷயங்கள்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாலை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. குமாரஸ்வாமி
குமுதினி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
கௌரி அம்மாள்
டி. வி. பரமேசுவரன்
மோ. ஸ்ரீ. செல்லம்
ச. கு. கணபதி ஐயர்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை, 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை "ஸர்குலேஷன் மானேஜர்" என்று விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 1] [இதழ் 5

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

இந்தியாவில் நான் கண்டது

டாக்டர் பட்டாபி சீதாராமையா

எகிப்தில் இந்திய ஸ்தானிகராக இருக்கிறாரே டாக்டர் சையத் ஹுசேன், அவர் ஒரு சமயம் என்னைப் பார்த்து, "நீங்கள் ஏன் அமெரிக்காவை ஒரு தடவை கூடப் போய்ப் பார்க்கவில்லை? அது கிடக்கட்டும்; இங்கிலாந்துக்காவது போயிருக்கிறீர்களோ?" என்று கேட்டார்.

"அதுவும் இல்லை."

"ஏன்?"

"ஏனென்றால், நான் இந்தியாவையே முழுவதும் பார்த்தாகவில்லை."

"ஓஹோ! இந்தச் சமாதானம் சற்று விசித்திரமாக இருக்கிறது. ஆனால், மிகப் பொருத்தமாகவும் தான் தோன்றுகிறது. இதுவரையில் இருபது வருஷகாலம் நான் இந்தியாவை விட்டு வெளியே போயிருக்கிறேன். இந்த நாட்டின் நிலைமையில் என்ன என்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றே எனக்குத் தெரியவில்லை. உங்கள் விசித்திர சமாதானத்தைக் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்களேன்."

"ஆஹா! சொல்லுகிறேன், கேளுங்கள்" என்றேன்.

இந்தியா பரந்த தேசம்; பழமையான அழகிய கலைச்செல்வமும் சிற்பமும் பாசனமும் நாடும் நகரமும் நிறைந்த தேசம்.

இதில் நான் எங்கேயிருந்து தொடங்குவேன்?

கடல் மட்டத்துக்கு 8,100 அடி உயரத்தில் இருப்பது உதகமண்டலம். சிம்லாவும் இதே உயரத்தில் தான் இருக்கிறது. ஆனால், சிம்லாவைப் போல் அல்லாமல், உதகமண்டலத்தில் கார்கள் போகலாம். சர்க்கார் மாளிகையைவிட உயரமான கட்டிடங்கள் இருக்கின்றன. சர்க்காரின் தோட்டங்கள் அற்புதமாக இருக்கின்றன. இங்கே கோடையில் செல்வர்கள் வந்து தங்குகிறார்கள். கோடைக்கானலும் இதே உயரத்தில்தான் இருக்கிறது. கூனூர், கோட்டகிரி இரண்டும் 4,000 அடி உயரத்தில் இருக்

மகாத்மா காந்திக்கு மாகாணத்துக்கு ஒரு 'லெப்டினண்ட்' உண்டு. ஆந்திரத்தில் அப்படிப்பட்ட 'லெப்டினண்ட்' ஆக விளங்கியவர் பட்டாபி சீதாராமையா. அதிகார பூர்வமாகக் காங்கிரஸ் சரித்திரத்தை எழுதியவர். தேசமெங்கும் சுற்றிப் பார்த்துள்ள பிரபல தலைவர்.

காப்பிரைட்: காரவான் (ஆங்கிலம்: ஜனவரி '48), டெல்லி பிரெஸ், கனாட் ஸர்க்கஸ், த.பெ. 17, புது டெல்லி.

கின்றன. அந்த மூன்றிலும், உதகமண்டலத்தைப் போல் இவ்வளவு குளிர் இல்லை.

குற்றாலம் நீர்வீழ்ச்சி மகா அற்புதம். இது திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. இதோடு போட்டி போடக்கூடியது மைசூரில் உள்ள கெர்ஸப்பா நீர்வீழ்ச்சி.

மைசூர் சமஸ்தானத்தில் ஷிமோகா ஜில்லாவில் உள்ள சிரவணபௌகொளத்தில் அபூர்வமான ஜைன தீர்த்தங்கரர் சிலை ஒன்று இருக்கிறது. அதன் உயரம் 67 அடி; ஆள்காட்டிவிரல் நீளம் 40 அங்குலம்! மலையின் ஒரு பக்கத்திலே இந்தச் சிலையைச் செதுக்கி யிருக்கிறார்கள். பாவன் கஜ் (52-கெஜம்) என்று பெயர் பெற்ற மற்றொரு தீர்த்தங்கரர் சிலை, இதையும்விட அபூர்வம். அது 87 அடி உயரம். நாம் அதன் பக்கத்தில் நின்றால், அதன் முழங்கால் உயரத்தில் கால்பாகங்கூட இருக்கமாட்டோம். சிலையின் பாதம் 14 அடி நீளம். கால்விரல்கள் 16 அங்குல நீளம். இதை எப்படித்தான் ஆசுபோட்டுச் செதுக்கினார்களோ!

திருவனந்தபுரம் பத்மநாபஸ்வாமி கோயிலில் உள்ள சிலை இங்கே ஞாபகம் வருகிறது. அது 40-அடி நீளம் சயனித்துக்கொண்டிருக்கிறது. ஒரே சமயத்தில் ஸ்வாமியை முழுவதும் தரிசிக்க முடியாது. கோயில் நிறையப் புராண விளக்கமான சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன.

மதுரைக் கோயில்கள் பிரம்மாண்டமானவை; சிற்பங்கள் நிறைந்தவை. தஞ்சாவூர்க் கோயிலின் கோபுரம், அடிப்பரப்புக்கேற்ற உயரம் வாய்ந்து மிக அழகாய் அமைந்திருக்கிறது. ஒரு பாறைக் கல்லைச் செதுக்கி, கோபுரத்தின் ஸ்தூபியை அமைத்திருக்கிறார்கள். பல டன்கள் நிறையுள்ள இந்தப் பிரம்மாண்டமான பாறையை எப்படித்தான் 280 அடி உயரத்துக்கு ஏற்றினார்களோ! ஆச்சரியமாயிருக்கிறது. தஞ்சாவூர்க் கோயில் நந்தியையும் ஒரே பாறையில்தான் செதுக்கியிருக்கிறார்கள். அது சுமார் 20 அடி நீளமும், 8 அடி அகலமும், 12 அடி உயரமும் இருக்கிறது. நந்தியின் திமில், முகம், காது, பிற அங்கங்கள் ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று ஏற்ற பரிமாணங்களுடன் அமைந்திருப்பது காண்போரைப் பிரமிக்கச் செய்கிறது.

மைசூர் சாமுண்டி மலை, பேலூர் ஹளேபிட், அனந்தபூர் ஜில்லாவிலுள்ள லேபாட்சி ஆகிய இடங்களிலுள்ள நந்திகளும் இதேமாதிரி சிறப்பு வாய்ந்தவை. லேபாட்சி கோயிலில் பல அற்புதச் சிற்பங்களும் ஓவியங்களும் இருக்கின்றன. மண்டபத்திலிருந்து ஒரு தூண் தொங்குகிறது. பார்ப்பதற்குத் தரையில் ஊன்றியதுபோல அது தோன்றினாலும், தரையில் படாமலே தொங்குகிறது. மேலே மண்டபத்தில் உள்ள ஓவியங்கள் 450 ஆண்டுகளுக்குப் பின்னும் புதுக் கருக்கு அழியாமல் அப்படியே இருக்கின்றன. கோவில் பிராகாரங்களில் புராணக் கதைகளைச் சித்திரிக்கும் சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன.

ராயல்சீமையிலுள்ள அஹோபில மடமும் அதன் கற்சுவர்களிலுள்ள ராமாயண மகாபாரதக் காட்சிச் சிற்பங்களும் யாவரும் பார்க்கவேண்டியவை. இவையெல்லாம் மனிதன் கட்டிய கோயில்கள். மலைகளையும் குகைகளையும் வெட்டிக் குடைந்து அவன் அமைத்த கோயில்கள் அஜந்தாவும் எல்லோராவும். அவை ஹைதராபாத் நிஜாமுக்குச் சொந்த

மானவை. அவற்றை நன்ருகப் பாதுகாத்து வருகிருர்கள். அஜந்தாவின் 27 குகைகளேயும் வெட்டிச் செதுக்கி முடிக்க 700 வருஷங்களாயின. அதில் செதுக்கப் பெற்றிருக்கும் தோரணங்கள், மேல் தளங்கள், 16 அடி உயரமுள்ள புத்தர் விக்கிரகம், ஸ்தூபிகள், இருண்ட மச்சு, அடியிலுள்ள அற்புத ஓவியங்கள் இந்த அனைத்தும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. 2000 வருஷங்களுக்கு முன்னே நம் நாட்டு ஓவியர்கள் அழியாத மங்காத வர்ணங்களேக் கொண்டு, அழகிய இந்தச் சித்திரங்களே எப்படித்தான் அந்த மையிருட்டில் வரைந்தார்களோ! குகைக்கு அருகில் வெளியே தேங்கியிருக்கும் நீரோடைகளிலிருந்து பிரதிபலித்த வெளிச்சத்தை உபயோகித்தே அவர்கள் இவற்றை வரைந்திருக்க வேண்டும் என்று தற்கால நிபுணர்கள் ஊகிக்கிருர்கள். களிமண், காவி, மலேயில் கிடைத்த மூலிகைகள் இவற்றைக் கொண்டே இங்கே மணியாசி செய்து, அற்புதமான ஓவியங்களேயும் தீட்டியிருக்கிருர்கள், நம் 'அநாகரிக' முன்னேர்கள்!

செங்கற்பட்டுக்குச் சமீபத்தில் உள்ள மகாபலிபுரத்தில் குன்றுகளேக் குடைந்த கற்கோயில்கள் இருக்கின்றன. எல்லோராவின் கைலாசநாதர் கோயிலேப் போன்ற மாணிக்கங்களாகவே இவையும் அமைந்திருக்கின்றன. என்ன அபூர்வமான கற்பனே! என்ன ஆச்சரியமான வேலேப்பாடு! பெல்லாரி ஜில்லாவில் ஆந்திரத்துக்கும் கர்நாடகத்துக்கும் சொந்தமான ஹம்பியில் மிஞ்சி நிற்கும் புராதனச் சின்னங்களும் இப்படியே நம் மனத்தைக் கவர்கின்றன. இங்கே நானூறு ஆண்டுகளுக்கு முன்னே கட்டிய விட்டல் ஆலயத்தின் தூண்கள் இன்னிசை போல் எழில் சொரிகின்றன. பொய்கைகள், யானேக் கொட்டில்கள், சிலம்பக் கூடங்கள், தசரா மண்டபங்கள் ஆகியவை எல்லாம் சூழ்ந்திருக்கின்றன.

இந்த இடத்தை விட்டு மத்திய இந்தியாவுக்குச் செல்வோம். அங்கே இருக்கும் மாண்ட்வா கோட்டையை அற்புதமான அகழ் சூழ்ந்திருக்கிறது. கோட்டையின் எதிரொலியும் இன்னும் நூற்றுக்கணக்கான சிறப்புக்களும் சிற்ப அதிசயங்களாக இருக்கின்றன.

மைசூரில் காவேரி நதி சூழ்ந்த ஸ்ரீரங்கபட்டணத்தில் மகத்தான தரியா தெளலத் கட்டிடத்தைக் காணலாம். அதன் பிரம்மாண்டமான தூண்களே வெண்மையும் கருமையுமான சலவைக் கற்களால் அமைத்திருக்கிருர்கள். ஹைதர், திப்பு ஆகிய இருவருடைய பராக்கிரமச் செயல்களேயும் சித்திரித்த அழகிய ஓவியங்களே அதன் சுவர்களிலே தீட்டியிருக்கிருர்கள். பழமையான ஆடும் பாலம் ஒன்றும் சமீபகாலம் வரையில் இங்கே இருந்தது. செங்கல்லும் சுண்ணும்பும் கொண்டு அதைக் கட்டியிருந்தார்கள். பூமிக்கு இருபதடி உயரத்தில் அதன் நடுவேளவு இருந்தது. ஒரு மனிதன் அந்தப் பாலத்தின் மீது ஏறி நின்றுகொண்டு எழும்பிக் குதித்தால், பாலம் மேலும் கீழும் 6 அங்குலம் முதல் 9 அங்குலம் வரைக்கும் ஆடும். 140 வருஷ காலமாய் இருந்துவந்த இந்தப் பாலம் இப்போது இடிந்து போனதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது.

முஸ்லிம்களும் இந்தியக் கலேச் செல்வத்துக்கும் சிற்பச் செல்வத்துக்கும் உதவியிருக்கிருர்கள். உயர்ந்து வளேந்த மண்டபங்களும்

நீண்ட தூண்களும் அவர்களுடைய சிருஷ்டி. உலகத்திலேயே மிக நேர்த்தியான சிற்ப அற்புதம் தாஜ் மஹல். புஷ்பக் கோலங்கள், வர்ணங்களின் இழைப்பு முதலிய அழகுகளைப் பெற்றுப் பொலிவது தாஜ்.

பீஜப்பூரில் உள்ள கோல்கும்பஸில் அதிசயமான சுழன்றொலிக்கும் மண்டபம் இருக்கிறது. இந்த அதிசயத்தைத் தெரிந்தே அமைத்தார்களா? அல்லது இது அகஸ்மாத்தாக அமைந்ததா? அதை யாரும் சொல்ல முடியவில்லை. தஞ்சையிலுள்ள அழகான பீரங்கிகளைப் போலவே, பீஜப்பூரிலும் சில பீரங்கிகள் இருக்கின்றன. டில்லி செங்கோட்டை, ஆக்ரா கோட்டை, பதேப்பூர் சிக்ரி ஆகிய சிற்ப அற்புதங்களை எவரும் பார்க்கத் தவறலாகாது. டில்லி ஜும்மா மசூதியும் இப்படியே அற்புதமாக இருக்கிறது.

முஸ்லிம் கட்டிடங்களைச் சூழ்ந்திருக்கும் தோட்டங்கள் ஒரு விசேஷமாகும். லாகூரிலும் ஸ்ரீநகரிலும் உள்ள ஷாலிமார் தோட்டங்கள் படிப்படியாய் அமைந்திருக்கின்றன. இந்த ஷாலிமார் தோட்டங்களுக்கு இணையான தோட்டங்களை இப்போது மைசூரில் உள்ள கண்ணம்பாடி அணைக்கட்டில் அமைத்திருக்கிறார்கள். இவற்றில் மின்சார விளக்குகள் ஜொலிப்பதால், ஷாலிமாரை விட இவை இன்னும் அதிகச் சிறப்பாய் விளங்குகின்றன.

டில்லியில் நாஜிமுத்தீன் என்ற மகானுக்கு ஒரு கோரி கட்டியிருக்கிறார்கள். யமுனையின் மறு கரையில் ஷாஜஹானின் மாமனார் இத்மதுத்தௌலாவுக்கு வைர மணிபோல் ஒரு கோரி அமைத்திருக்கிறார்கள். இவை அழகு வாய்ந்திருக்கின்றன. அகமதாபாதில் சிதிலமான ஒரு மசூதி இருக்கிறது. குலுங்கும் ஸ்தூபிகள் இரண்டு இதில் கட்டியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் எஞ்சினீர் கை வைத்ததால், ஒரு ஸ்தூபி இந்தச் சிறப்பை இழந்துவிட்டது. மற்ற ஸ்தூபியின் உட்புறச் சுவரிலே ஒருவர் தம் கையால் ஒரு தட்டுத் தட்டினால் போதும்; உடனே அந்த ஸ்தூபி குலுங்குகிறது.

வட இந்தியாவில் கோயில்கள் குறைவு. என்றாலும், பிருந்தாவனத்து ராதாகிருஷ்ணன் கோயிலைக் குறிப்பிடத்தான் வேண்டும். அதன் அழகிய சலவைக் கல் தூண்கள் திருகாணிபோல் சுழன்றிருக்கும்.

கிழக்கே ஒரிஸ்ஸாவில் உள்ள புவனேசுவரர் ஆலயம், இனி இந்த யௌவன மாகாணத்தின் தலைநகரை அணி செய்யும் பெருமை பெற்று நிற்கும்.

ஜுனகட் குன்றுகளிலும் புது டில்லியிலுள்ள கொத்லா பிரோஸ்ஷா தூணிலும் உள்ள சிலா சாஸனங்கள் மூவாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்பு செதுக்கப் பெற்றவை. இவற்றை எந்த யாத்திரிகனும் பார்க்கத் தவறலாகாது.

புத்தகயாவில் உள்ள புனிதமான ஆலயம் காலத்துக்குக் காலம் பல மாறுதல்களை அடைந்து வந்திருக்கிறது. காசிக்கு அருகே சாரநாத்தில் உள்ள ஆலயத்தையும் புராதன சின்னங்களையும் போல என் மனத்தைக் கவர்ந்த கட்டிடங்கள் இந்தியாவிலேயே வேறு எவையும் இல்லை.

சில கோயில்களுக்கு ஏதோ மந்திர சக்தி இருப்பதாக ஓர் ஐதிகம் இருந்துவருகிறது. மங்களகிரியில் உள்ள நரசிம்ம விக்கிரகத்தின் வாயில் பானகத்தை ஊற்றினால், ஊற்

றிய அளவில் பாதியை அது வெளியே உமிழ்ந்துவிடுகிறது. ஆந்திர நாட்டைச் சேர்ந்த கர்நூல் ஜில்லாவில் மகாநந்தி என்னும் இடத்தில் செயற்கையாய் வெட்டிய ஒரு குளத்தின் நடுவே ஒரு சிறிய கோயில் அமைந்திருக்கிறது. அதன் நீர்ஸ்படிகம் போலத் தெளிந்திருக்கிறது. அதில் நீங்கள் இறங்கி நின்ருல், உங்கள் கால்நகம் மேலே தெரியும். நீருக்கடியிலே இரண்டணுக் காசு கிடந்தாலும் அப்படியே தெரியும். இந்தக் குளத்தின் நீர் எங்கேயிருந்து வருகிறது என்று யாருக்கும் தெரியவில்லை. எப்போதும் ஒரே சீராக 5-அடி 3-அங்குல ஆழமே இந்த நீர் இருந்துவருகிறது. அதிகப்படியான நீர் குளக்கரையில் உள்ள இரண்டு குழாய் வடிகால்களின் வழியாக வடிந்துவிடுகிறது.

ஒரு சிற்பத்தைப்பற்றிக் குறிப்பிடாமல், நமது இந்தத் தேசியச் செல்வ ஜாபிதாவை நான் முடிக்க முடியாது. இருநூற்றுப் பத்து வருஷங்களுக்கு முன்பு ஜயபூர் ராஜா ஜயசிங் வான சாஸ்திர ஆராய்ச்சிக்குரிய சில கட்டிடங்களைக் கட்டியிருக்கிருர். இம்மாதிரி நாலு கட்டிடங்களை அவர் கட்டியிருக்கிருர். ஒன்று புது டில்லியிலும், மற்ருென்று உஜ்ஜயினியிலும், மீதி இரண்டும் வேறு இடங்களிலும் இருக்கின்றன.

நான் பார்க்காத சில இடங்களையும் இங்கே குறிப்பிடவேண்டும். அவற்றைப் பார்க்காததில் எனக்கு வருத்தந்தான். ஸாஞ்சி ஸ்தூபமும், பில்ஸா ஸ்தூபமும் பௌத்தச் சிற்பத்துக்கு ஞாபகச் சின்னங்களாய் நிற்கின்றன. ஆனால், இவை போன்ற சலவைக்கல் சிற்பங்களைக் குண்டூர் ஜில்லாவில் உள்ள அமராவதியில் நான் கண்டிருக்கிறேன்.

பாதாமியில் உள்ள மலைக் குகைகள் பார்க்கவேண்டியவை என்று சொல்லுகிருர்கள். பெஜவாடாவுக்கு அருகே உந்தவல்லியில் சில சிறு குகைகள் இருக்கின்றன. அவற்றை நான் பார்த்திருக்கிறேன். கர்நாடகத்தில் உள்ள சூரியபகவானின் ஆலயமும், ஆபு மலையிலும் கிர்நாரிலும் உள்ள ஜைன ஆலயங்களும் காட்சிக்கும் அறிவுக்கும் விருந்தாகும்.

பீரேயிலும் வால்டேருக்கு அருகில் உள்ள சிம்மாசலத்திலும் இருக்கும் கோயில்கள் குறிப்பிடத்தக்கவை. சோமநாதர் ஆலயத்தை நான் கடந்து சென்றிருக்கிறேன். ஆனால், அங்கே சென்று வணங்கவில்லை. இது எனக்கு வருத்தமே. இப்போது இந்தப் புராதன ஆலயம் தன் பழம் பெருமையை அடையப் போகிறது.

உண்மையிலே இந்தியாவில் இன்னும் நான் பாராத எத்தனையோ அழகிய இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன; கலைச் செல்வங்கள் இருக்கின்றன. அயல் நாட்டில் யாத்திரை செய்தால், ஒரு தேச பக்தனின் மனம் விரிவடையும் என்பது வாஸ்தவந்தான். ஆனால், நம் முன்னோர் எட்டியுள்ள கலைச் சிகரங்களைப்பற்றியும், சந்ததி சந்ததியாகக் காப்பாற்றிவரத்தக்க எத்தகைய பிதுரார்ஜிதத்தை அவர்கள் நமக்கு வைத்துச் சென்றிருக்கிருர்கள் என்பது பற்றியும் நாம் அறிந்து கொள்வதன்ருே நமது முதல் கடமை?

பெண்கள் படிக்கவும் வேண்டும், சம்பாதிக்கவும் வேண்டும். அப்போது குடும்பம் எவ்வளவு அழகாக இருக்கும்!

படித்த பெண்கள் சம்பாதிக்கலாமா?

வஸுந்தரா

பெண்களின் படிப்பு, குழந்தையின் நடை வண்டிபோலவா?

பெண்கள் அறிவிலும் செயல் திறமையிலும் எவ்வளவுதான் மேம்பட்டவர்களாக இருந்தாலும், சமையலையும் குழந்தையையும் விட்டு அவர்கள் வெளியுலகத்திலே தலைநீட்ட வேண்டிய அவசியமே இல்லை என்னும் எண்ணம் இன்றுகூடப் பல பேர்களுடைய மூளையிலே அழுந்திக் கிடக்கிறது. எனவே, பெண்களின் படிப்பைப் பற்றிப் பெற்றோர்கள் சரிவரக் கவனம் செலுத்துவதில்லை. 'கல்யாணம் ஆகும்வரையில் பெண் சும்மா வீட்டிலே குந்தியிருப்பானேன்? பள்ளிக்கூடத்துக்காவது போய் வரட்டும்' என்ற நோக்கத்தோடு பெண்களைப் படிக்க அனுப்புகிறார்கள். முன்போலச் சிறுவயதிலேயே விவாகம் நடப்பதாக இருந்தால், பெண்கள் படிப்பது சந்தேகந்தான். விரைவிலேயே தங்கள் பெண்ணுக்கு விவாகம் செய்துவிடவேண்டும் என்று விரும்பும் பெற்றோர்கள்கூட, அந்த வயதிலே அவளைக் கட்டிக்கொள்ளும் பிள்ளை கிடைக்காததனால் வேறு வழியின்றி அவளைப் படிக்க அனுப்பவேண்டியிருக்கிறது. நிலையான வருமானத்துக்கு வழி ஏற்பட்டாலொழிய, இந்தக் காலத்திலே ஆண்கள் ஆசையிருந்தும் மணந்துகொள்வதில்லை. ஆதலால் பெண்களின் வயது இயல்பாக ஏறிக்கொண்டே போகிறது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அவர்களின் கூட்டம் அதிகரிக்கிறது. ஆனால் பெண்கள் என்னதான் பி. ஏ. யும் எம். ஏ. யும் ஆகிவிட்டாலும் அடுப்பையும் குழந்தையையும் பார்த்துக்கொள்ளத்தான் அவர்கள் பிறந்திருக்கிறார்கள் என்ற கொள்கை இன்னமும் பெரும்பாலும் மாறவில்லை.

தாய்தந்தையர், கணவன், குழந்தைகுட்டிகள் ஆகிய பந்தங்களே பெண்களுக்கு வேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லை. சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் - ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி - பந்தங்கள் இருக்கத்தான் வேண்டும். ஆனால், ஒருவருடைய தனிப்பட்ட முன்னேற்றத்துக்கு எந்தக் கட்டும் தடையாக இருக்கலாகாது. பந்தங்களினால் ஒருவரை அசையாமல் கட்டிப் போட்டுவிட்டால், அவருடைய மனிதத்தன்மை போய்விடுகிறது; அந்தப் பந்தம்

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: பிப்ரவரி-மார்ச் '48), பம்பாய் 4.

என்றாலே அவர் என்று அர்த்தமாகி விடும். மனிதப் பிறவி எடுத்தும் கூட நம்மை யந்திரமாக்கும் இந்த முறை ஒழியவேண்டும். ஆண்களைப் போலவே பெண்களும் சுதந்தரமாக வாழ வேண்டும். ஒரு பெண் படித்தால் அவளுடைய பெற்றோருக்குப் பெருமை, அவள் படித்துப் பெறும் பட்டங்கள் ஜரிகைச் சேலையைப் போல அவளுடைய அழகை மேம்படுத்துபவை, கல்யாணச் சந்தையிலே அவளுக்கு விலை அதிகம் என்னும் இன்றைக் கொள்கைகள் மறையவேண்டும்.

படித்த பெண் ஒருத்தி பழைய வழக்கங்களுக்கு மாறாக ஏதாவது ஒரு சிந்தனை செய்து அதை வெளியிட்டால் உடனே, 'அவள் பெண்மைக்கு உரிய எல்லையைத் தாண்டி விட்டாள், மத உணர்ச்சிகளை அசட்டை செய்துவிட்டாள், குடும்பத்துக்கும் அதனால் சமூகத்துக்கும் விநாசகாலம் வந்துவிட்டது!' என்று யாவரும் கூச்சல் போடுகிறார்கள். 'இந்தக் காலத்துக்கேற்றபடி நாலு புத்தகங்களைப் படித்துவிட்டதனால் மட்டும் பெண்கள் தங்கள் சுய சிந்தனையைப் பயன்படுத்திவிடலாமா?' என்பது அவர்கள் கேள்வி. சிறு குழந்தை நடைவண்டியைப் பிடித்துக்கொண்டு நாலு அடி நடந்தாலோ, இரண்டு மழலைச் சொற்களைச் சொன்னாலோ நாம் மகிழ்ச்சியடைந்து அதைத் தட்டிக் கொடுப்பதில்லையா? அதுபோலவே பெண்களின் படிப்பைக் கண்டு நாம் வியந்து மகிழவேண்டும் என்பதே இன்று மக்களின் கொள்கை. பெண்கள் தத்துவஞானத்தைப்பற்றிக் கட்டுரைகள் எழுதினால், இன்றுவரையிலுள்ள நம் பழக்கவழக்கங்களைத் தழுவி அவர்கள் பிரசங்கம் செய்தால், அப்பொழுது நாம் அவர்களைப்

அவள் இப்படிப் பணம் மிச்சப்படுத்தலாமே.

பண்டிதைகள் என்று போற்றுவோம். படிப்பினால் அவர்களுடைய மூளையிலே புதிய சிந்தனைகள் கிளம்பி, அவர்கள் பழமையினால் தாங்கள் படும் துன்பங்களை உலகுக்குக் காட்டத் துணிவோடு முன்வந்துவிட்டால், அப்பொழுது அவர்களுக்கு விடுதலை அளிக்க நமக்கு விருப்பம் இருப்பதில்லை; அவர்களும் மனிதப் பிறவிகள் என்பதையே நாம் கவனிப்பதில்லை.

பெண்களின் படிப்பு அவர்களுடைய வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும். இன்றுள்ள பொருளாதார நிலையில் ஆண்களோடு பெண்களும் உழைத்துச் சம்பாதித்தாலொழியக் குடும்பம் நடக்காது. நூறு ரூபாய் வருமானமுள்ள ஒருவன், நாலைந்துபேர் கொண்ட தன் குடும்பத்தைக் கடன் வாங்காமல் இந்தக் காலத்திலே நடத்துவது கஷ்டம். அவன் மட்டும் ஓடி ஓடி எத்தனை இடங்களிலே எத்தனை நாளைக்கு வேலை செய்ய முடியும்? அவனுடைய சம்பாத்தியம் போதவில்லையென்றால் வீட்டிலே எல்லோரும் அரைப் பட்டினி இருப்பதும், நோய் வந்தால் மருந்து வாங்காமல் இருப்பதும் சரியான வழிக

ளல்ல. வீட்டிலே எலிகள் அதிகமாகித் துணிகளைக் கொந்திக் கடித்துவிட்டால், அந்தத் துணிகளுக்குத் தக்கை போட்டுத் தைப்பது சரியான வழியல்ல; எலிகளையே பிடித்து அடித்து அப்புறப்படுத்த வேண்டும். பெண்கள் உழைத்துச் சம்பாதிப்பதனால் அவர்களுடைய மதிப்புக் குறைந்துவிடாது. தேவை ஏற்பட்டால் நாமும் நாலு காசு சம்பாதித்துக் குடும்பத்தைத் தாங்க முடியும் என்ற தன்னம்பிக்கை அவர்களுக்கு அதிகப் பெருமையைத் தரும்.

பெண்கள் வீட்டிலே செய்யும் வேலைகளுக்கு ஆண்கள் மதிப்பு வைப்பதில்லை. கணவன் தன் உறவினருக்கோ ஏதாவது ஸ்தாபனத்திற்கோ மனைவியைக் கேளாமலே பண உதவி செய்யலாம்; ஆனால் மனைவி மட்டும் கணவனைக் கேளாமல் யாருக்கும் காலணாக் கொடுக்க முடியாது. வீட்டில் வரும் பணம் தன்னால்தான் வருகிறது என்று கணவன் நினைக்கிறான். வீட்டிலே ஓயாமல் உழைத்து, குழந்தைகளைப் பராமரித்துக் கணவனுக்குப் பணிவிடை செய்வதற்கு ரூபாய் அணா பைசாவில் எவ்வித மதிப்பும் இருப்பதில்லை. இது தவறு. பெண்கள் சமையல், தையல் முதலிய வீட்டு வேலைகளைச் செய்து ஆண்களின் சம்பாத்தியத்தை மிச்சப்படுத்துகிறார்கள். இல்லாவிட்டால் வேலைக்காரர்களுக்கு அதற்கும் மேலே செலவழியும். தான் வீட்டுவேலை செய்து இப்படி மிச்சப்படுத்திய பணம் தனக்கே உரியது என்பதை ஒவ்வொரு பெண்ணும் தெரிந்துகொள்ளவேண்டும். படித்துச் செயல் திறமையை வளர்த்துக் கொண்டாலொழிய, எந்த மங்கையும் கணவனுக்குத் தக்க உதவி செய்ய முடியாது.

வருஷக்கணக்காக மனைவி நோயாளியாகப் படுத்திருந்தும், ஆபீஸ் வேலையோடு வீட்டு வேலையையும் செய்துகொண்டு மகிழ்ச்சியோடு சில புருஷர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சமையல் செய்கிறார்கள், குழந்தைகளைக் குளிப்பாட்டி அவர்களுக்கு வீட்டிலே பாடம் சொல்லிக்கொடுத்துப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்கள், மனைவிக்கும் பரிமாறித் தாமும் சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப் போகிறார்கள். இவ்வளவுக்கும் அவர்கள் முகத்தைத் துளியும் கடுத்துக்கொள்வதில்லை. இம்மாதிரியே சமயம் வரும்போது கணவனுடைய வேலைகளையும் தான் சமாளித்துக்கொள்ளும் திறமை மனைவிக்கு இருப்பதுதான் நல்லது. இதனால் கணவனுக்கு மதிப்புக் குறைவோ, மனைவிக்குக் கர்வமோ ஏற்படக் காரணம் இல்லை.

ஆணுக்குச் சரியாகச் சம்பாதிக்கும் பெண் கணவனை மதிக்காம விருப்பதை நாம் சில இடங்களிலே பார்க்கிறோம். சில இடங்களிலே கணவன் அவளை எதிர்த்துப் பேசுவதையும் காண்கிறோம். நம் நாட்டிலே ஆணும் பெண்ணும் சேர்ந்து

பெண் தொழிலாளி குழந்தையை அழகாக வளர்க்கிறாள்.

சம்பாதிக்கும் பழக்கம் போதிய அளவுக்கு இன்னும் வளராததுதான் இதற்குக் காரணம்.

பெண்கள் சம்பாதிக்க ஆரம்பித்தால் வீட்டைக் கவனிக்கமாட்டார்கள் என்று கருதுவதும் தவறு. குழந்தைகளிடத்தில் அன்பும், குடும்பப் பற்றும், சம்சார ஆசையும் பெண்களுக்கு இயல்பாகவே ஆண்களைவிட அதிகம். அறிவுள்ள எந்தப் பெண்ணும் தன் பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றத் தவறமாட்டாள். ஆலைகளிலும் குடிசைத் தொழில்களிலும் நாள்தோறும் எட்டு மணி நேரம் உழைத்துச் சம்பாதிக்கும் பெண்மணிகள், வீட்டைக் கவனிப்பதில்லையா? சமையல் செய்வதில்லையா? குழந்தைகளை வளர்ப்பதில்லையா? தங்கள் குடும்பத்துக்குப் பண உதவி தேவையாக இருக்கும்போது உயர் வகுப்புப் பெண்களும் இவ்வாறே உழைப்பதால் யாதொரு தீமையும் நேர்ந்துவிடாது; குடும்பத்தில் அவர்களுக்குள்ள அக்கறை சிறிதும் குறையாது.

வெளியே வேலைக்குப் போகும் பெண்கள் தம் குழந்தைகளை யாரிடமாவது ஒப்பித்துச் சென்றால், அவர்கள் அன்போடு குழந்தைகளை வைத்துக்கொள்வார்கள் என்பது நிச்சயமில்லை. குழந்தைகளை நன்றாக வளர்க்க நிறைய ஸ்தாபனங்கள் ஏற்படவேண்டும். அதனால் எத்தனையோ பெண்கள் உழைத்துச் சம்பாதிக்க முடியும்; குழந்தைகளைப் பற்றிய கவலையின்றி வேலை செய்யவும் முடியும். குழந்தைகளும் தக்க பாதுகாப்பில் ஆரோக்கியமாக வளரும்.

வெளிநாடுகளிலே படித்த பெண்கள் வீட்டு வேலைகளையும் வெளி வேலைகளையும் திறமையாகவும் செம்

படித்த பெண்களின் வீடும் கண்ணாடி போல் சுத்தமாக இருப்பதுண்டு.

மையாகவும் செய்கிறார்கள். 'அவள் படித்த பெண்ணாச்சே! அவளுக்குச் சமைக்கத் தெரியுமோ?' என்ற கேள்வி நம் ஊரிலேதான் காதில் விழுகிறது. படித்துச் சம்பாதிப்பதனாலே, பெண்கள் தங்கள் வீடுகளைத் தர்மசத்திரமாக்கிவிட மாட்டார்கள். வீட்டை ஒழுங்காகவும் கவர்ச்சிகரமாகவும் வைத்துக்கொள்வது பெண்ணின் இயல்பு. வேலைக்குப் போகும் எத்தனையோ படித்த பெண்கள் தங்கள் வீட்டைக் கண்ணாடியைப் போலப் பளபளப்பாகவும் மிகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். சோம்பேறித்தனம் இல்லாமல் உத்சாகம் மிகுந்த எந்தப் பெண்ணும் - அவள் படித்தவளாயினும் சரி, படிக்காதவளாயினும் சரி; சம்பாதிப்பவளாயினும் சரி, சம்பாதிக்காதவளாயினும் சரி - வீட்டை அழகாக வைத்துக்கொள்ளத்தான் பாடுபடுவாள். ஆனால் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளும் பொறுப்பு, படித்த பெண்களுக்குத்தான் அதிகம். ஆதலால் எந்தப் பெண்ணும் படிப்பினால் தன் செயல்திறமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். வீட்டு வேலையிலே எந்தப் பகுதியிலும் அவளை யாரும் ஏதும் குறை சொல்ல இடம் இருக்கக்கூடாது.

இந்தியக் கப்பல்

★

ஜல உஷா

சில வாரங்களுக்கு முன், 'ஜல உஷா என்ற, இந்தியாவிலேயே கட்டிய முதல் இந்தியக் கப்பலை இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித நேரு வெகு வைபவமாக விசாகப்பட்டினத்தில் மிதக்கவிட்டார். இந்தக் கப்பல் பிறந்த வரலாற்றை, பம்பாய் 'போரம்' பத்திரிகை விரிவாய் வர்ணித்திருப்பது இந்த விவரம்.

ஜவாஹர்லால் நேரு தேங்காயை உடைத்த போது ஜனங்கள் ஆரவாரம் செய்தார்கள்; ஜலஉஷா நீர்த்துளி சிதற மெல்ல இனிதாக வங்காளக் குடாக்கடலில் இறங்கி மிதந்தது. முதல் முதலில் இந்தியாவில் கட்டிய 8000 டன் கொள்ளும் கப்பல் அது. இந்த வியாபாரக் கப்பல் நீரில் அசைந்தாடி மிதந்தபோது பிரதம மந்திரி பண்டித நேருவின் கவலை தேங்கிய முகத்தில் திருப்தியின் ரேகை ஒளிர்ந்தது. கனவு நனவாயிற்று; விருப்பம் நிறைவேறியது; புதிய யுகம் தோன்றியது; ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. முப்பது வருஷங்களுக்கு முன் நரோத்தம மொரார்ஜி போட்ட திட்டம் கடைசியில் இப்போது உருவாயிற்று. இந்தியக் கப்பல் தொழிலின் பிதாவாகிய அவருக்கு மேலும் மேலும் புகழ் உண்டாயிற்று. விசாகைத் துறைமுகத்தை அகல மனமில்லாமல் சூழ்ந்து சுழன்ற அந்த வியாபார மன்னனுடைய ஆவி இப்போது ஆறுதல் பெற்று அமைதியை நாடிச் சென்றிருக்க வேண்டும்.

21 வருஷங்களுக்குமுன் மோதிலால் நேரு ஸிந்தியா கம்பெனிக் கப்பல்களில் ஒன்றைக் கிளாஸ்கோவில் மிதக்கவிட்டார். அப்போது ஜவாஹர்லால் இளமைப் பருவத்தினர்; உத்ஸாகத்தோடு அந்த வைபவத்தைப் பார்த்தவர். இப்போது இந்தியத் துறைமுகங்களில் முக்கியமான ஒன்றில் நிகழ்ந்த விசேஷ நிகழ்ச்சியின் பிரதான புருஷர் அவர். இந்த இருபது வருஷங்களாக எவ்வளவோ கஷ்டங்களும் சோதனைகளும் இந்தியாவின் வாழ்க்கையில் வந்தன. "இந்தியக் கொடி பறக்க, நெடுந்தூரத்து நாடுகளுக்கு நம் நாட்டுக் கப்பல்கள் போவதைக் காணவேண்டுமென்று தீவிரமாக நான் ஆசைப்படுகிறேன்" என்று பல வருஷங்களுக்கு முன் நேரு சொன்னார். இப்போது அந்தத் தீவிர ஆசை நிறைவேறியது. ஜல உஷாவை மிதக்கவிட்ட இந்த வைபவம், பல வருஷங்களாக இந்தியக் கப்பல் தொழிலுக்கு வந்த இடர்ப்பாடுகளுக் கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. ஜல உஷாவைக் கட்ட 40 லட்ச ரூபாய் செலவாயிற்று. 8000 டன் பாரம்

சுமக்கும் ஆற்றலுடையது இது.

இந்தியாவில் பழங்காலத்தில் கப்பல் தொழில் நன்றாக நடை பெற்றது. கி.மு. ஏழாவது நூற்றாண்டிலே இந்தியக் கப்பல்கள் திரைக்கடலில் நெடுந்தூரங்களுக்குச் சென்று வந்தன. அயலவர் ஆட்சியினால் எத்தனையோ நல்லவையெல்லாம் போனது போல அதுவும் மறைந் தொழிந்தது. 150 வருஷங்களுக்கு முன்பு லண்டன் துறைமுகத்துக்குப்பாரமேற்றிய இந்தியக் கப்பல்கள் சென்ற பொழுது அங்குள்ள கப்பல்காரர்கள் பிரமாதமாகக் கூக்குரல் போட்டார்களாம். 'பகைவருடைய கப்பற்படை வந்தால்கூட அவ்வளவு கூக்குரல் இருந்திராது' என்று ஒரு சரித்திரக்காரர் எழுதுகிறார். அதுமுதலே நம் நாட்டுக் கப்பல் தொழில் மங்கி மறைந்து மடிந்தது. காந்தியடிகள் சொன்னது போல், பிரிட்டிஷ் கப்பல் தொழில் வளர்வதற்காக இந்தியக் கப்பல் தொழில் நசிக்க நேர்ந்தது; இந்த நாட்டுக் கப்பல் தொழிலின் சின்னங்களைக் கீழ்நாடுகளில் இன்றும் காணலாம். 40 வருஷங்களுக்கு முன் வ. உ. சிதம்பரம் பிள்ளை சென்னை மாகாணத்தில் கப்பலோட்ட முயன்று சிறு கப்பல்களை ஓட்டினார். தேசபக்தி, தீர்க்க தரிசனம் ஆகிய இரண்டு குற்றங்களுக்கும் உரிய தண்டனை அவருக்குக் கிடைத்தது. ஆனால் சேட் நரோத்தம், வால்சந்த் என்ற இருவருடைய தலைமையின் கீழ் ஸிந்தியா கம்பெனியார் சங்கடத்துக்கிடையேபல வருஷங்களாக விடாமல் பாடுபட்டு வந்தனர். அத்தகைய காலத்தில் 1941- ஆம் வருஷம் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் விசாகையில் ஸிந்தியா கப்பல் கட்டும் சாலைக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். அப்போது தீர்க்கதரிசனத்தோடு அவர், "இந்த நாட்டுக்கு வருங்காலத்தில் ஒளி சூழ்ந்த நாள் ஒன்று உதயமாகும் என்பதில் தடையில்லை" என்றார். அந்த நாள்தான் இன்று வந்தது போலும்.

நரோத்தம் மொரார்ஜி போர் பந்தரில் ஒரு பிரமுகர். புலாபாய் தேசாய்க்கு இரண்டு வயசு பெரியவர் அவர். பம்பாயில் எல்பின்ஸ்டன் காலேஜில் படித்தார். வியாபாரத்திலும் தொழிலிலும் அவருக்கு ஆர்வம் அதிகமாக இருந்தது. அவரிடம் தொழிலாளிகள் பிரியமாக இருந்தார்கள். அதனால் அவருடைய தொழிற்சாலையில் (மொரார்ஜி கோகுல்தாஸ் கம்பெனி) உற்பத்தி பெருகிற்று. அவர் அப்போது நெசவாலையளவிலே நின்றார். முதல் உலகப் போர் முடிந்து ஒரு வருஷமான பிறகு அவர் கப்பல் தொழிலில் நாட்டம் கொண்டார். பிரிட்டிஷ் ஆட்சியில் அயலாருடைய சுயநலம் காரணமாக இந்த நாட்டின் பொருள்நிலை தட்டுக் கெட்டுப் போயிருந்தாலும், இந்தியக் கப்பல் தொழிலை ஆரம்பித்தால் என்றைக்காவது ஒரு நாள் வெற்றி கிடைக்குமென்று அவர் எண்ணினார். புது ஊக்கம் உண்டாயிற்று. நரோத்தம்பாய், சிலாசந்த் தேகிசந்த், லாலுபாய் சாமல்தாஸ், இப்போதைய தலைவர் வால்சந்த் ஹீராசந்த் என்ற நால்வரும் சேர்ந்து 'லாயல்டி' என்ற கப்பலை வாங்கினர். பம்பாய்க்கும் லண்டனுக்கும் இடையே கப்பல் போக்குவரத்தைத் தொடங்கினர். இவ்வாறுதான் 27-3-1919- இல் 45,000,000 மூலதனத்தோடு ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி உருவாகிப் பதிவாயிற்று. பிரிட்டிஷ் அதிகாரமும் பிரிட்டிஷ் கப்பல்காரர்களின் கூக்குரலும் இந்த

ஸ்தாபனத்துக்கு வரும் லாபத்துக்கு இடையூறாக இருந்தன. ஆனாலும் அந்த நால்வரும் தளர்ச்சியடையாமல் புதிய புதிய முயற்சிகளைச் செய்தனர். கம்பெனியின் அக்கிராசனராக நரோத்தமர் 10 வருஷங்கள் இருந்து இடையூறுகளையெல்லாம் எதிர்த்துப் போராடினார். அரசாங்கத்தையும் அயல் நாட்டுச் சுயநலக்காரர்களையும் எதிர்த்து நின்றார். 52ஆவது வயதில் அவர் காலமானார். 14-11-1929 அன்று யங் இந்தியாவில் மகாத்மா காந்தி, "சேட் நரோத்தம மொரார்ஜியின் துயர் தரும் மரணம் நம்மிடமிருந்து ஒரு வியாபார மன்னரைப் பறித்து விட்டது. அவர் தேசபக்தியும் வியாபார ஆர்வமும் இணைந்தவர். வேலைக்காரர்களைத் தயையோடு நடத்துவதிலும் வேலை வாங்குவதிலும் அவர் கெட்டிக்காரர்" என்று எழுதியதைக் காட்டிலும் வேறு சிறப்பு அவர் பெருமைக்குத் தேவையில்லை.

நரோத்தமருக்குப் பின் இப்போது உள்ள வால்சந்த் ஹீராசந்த் தலைவரானார். முன்னவரைப் போலவே இவரும் சிறந்த தேசபக்தர்; சாமர்த்தியமான வியாபாரி. இவர் கம்பெனியை நன்றாக நடத்தி வந்தார். ஜல உஷாவின் ஒவ்வோர் அங்குலத்திலும் அவருடைய அபாரமான முயற்சியின் வெற்றியைக் காணலாம். பம்பாயில் பல்லார்டு எஸ்டேட்டில் உள்ள தொழில் நிலையங்களும் இவருடைய சாமர்த்தியத்தைப் புலப்படுத்தும்.

வட கூர்ஜரத்தில் திகம்பர ஜைனர்கள் வகுப்பில் பிறந்தவர் வால்சந்த். இவருடைய முன்னோர்கள் ஷோலாப்பூரில் வந்து வாழ்ந்தவர்கள். 1882 - இல் வால்சந்த் பிறந்தார். ஔரங்காபாதிலும், ஷோலாப்பூர், புனா, பம்பாய் நகரங்களிலும் இவர் கல்விகற்றார். பள்ளிக்கூடத்துக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு இரண்டு சிநேகிதர்களோடு திரிவார். சாகசமும் புரட்சி இயல்பும் படைத்தவராதலால் வாத்தியார்களை எதிர்ப்பதில் இவர் இன்பம் காணுபவராக இருந்தார். இவருடைய சகோதரர் இருவரும் இறந்து விடவே படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டார்! அப்போதுதான் பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். காலேஜை விட்டுவிட்டுத் தந்தையாராகிய ஹீராசந்துடன் சேர்ந்து குடும்பத்துக்குரிய வியாபாரத்தை நடத்தத் தொடங்கினார். தந்தையார் தனயரைத் தம் முறையில் பயிற்சி செய்வித்தார். வால்சந்த் தொழில் நுட்பங்களையெல்லாம் உணர்ந்தார். காலேஜ் படிப்பைவிட அது இவருக்கு உத்ஸாகத்தை அளித்தது.

பழைய பாதையிலே போவதைவிடப் புதிய துறைகளிலே புக வேண்டுமென்ற பரபரப்பு இவருக்கு இருந்தது. காலேஜில் படித்தவற்றுக்கு இணங்கப் பிடிவாதமாக எதையாவது சாதிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். ஒரு சின்ன விறகுக் கண்டிராக்டில் வேறொருவருடன் அவர் கூட்டுச் சேர்ந்தார். அதிலிருந்துதான் அவருக்கு அத்துறையில் பெரிய லாபம் இருப்பது தெரிய வந்தது. பிறகு ஏற்பட்ட அநுபவங்களிலிருந்தும் கட்டிடக் காண்டிராக்டில் இவருக்குப் பழக்கம் உண்டாயிற்று. பல காண்டிராக்டுகள் எடுத்து லாபம் சம்பாதித்தார். இவர் நிறுவின கம்பெனிகள் பல பல. டாடா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியின் நிர்வாக டைரெக்டராக இருந்து இவர் செய்த வேலை பெரிய வெற்றியை அளித்தது.

1919-ஆம் வருஷத்திலேயே இவர் விந்தியா கம்பெனியில் கூட்டாளியானாலும் பிறகுதான் இவரது செல்வாக்கு உயர்ந்தது. கப்பல் தொழிலுக்குத் துரைத்தனத்தார் காட்டின பட்சபாதத்தால் இவர் தளர்வடையவில்லை. "இந்த அரசாங்கத்தார் தெரிந்தோ தெரியாமலோ, நம்முடைய தொழிலுக்கு ஆதாவளிக்கும் பிழையைச் செய்தாலுங்கூட, இப்போதுள்ள அரசியல் திட்டமானது அவர்கள் இந்திய ஆட்டுக்குட்டிக்கு இரைதரும் ஒவ்வொரு தடவையும், தின்று கொழுத்துத் திணறும் பிரிட்டிஷ் சிங்கத்துக்கும் இரை போடும்படியாக வற்புறுத்தும். அதன் பயன் என்ன தெரியுமா? சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒருங்கே வளர்வதற்கு மாறாக ஆட்டுக் குட்டி சிங்கத்தின் வயிற்றுக்குள்ளே போய் விடும்! கப்பல் தொழிலுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார சுதந்தரம் இதுதான்" என்று ஒரு முறை இவர் சொன்னார்.

இவர் தொழிலின் மதிப்பை உணர்ந்தவர். சாதிக்க இயலாத பெரிய காரியமென்பதும் அவருக்கு இல்லை. எந்த விதமான சோதனையும் இவர் முன்னேற்றத்தைத் தடைப் படுத்த முடியாது. வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் சுதந்தரத்தை விரும்புபவர் இவர். நன்றாகவும் வெற்றிகரமாகவும் முடிக்கக் கூடிய எந்தக் காரியத்தையும் இவர் கௌரவக் குறைவாக நினைப்பதில்லை. ஜல உஷாவின் உதயமும், இந்தியக் கப்பல் தொழிலின் புனர்நிர்மாணமும் தேசபக்தராகிய வால்சந்தின் தாளாண்மைக்கு அடையாளம். இந்த முதல் கப்பலை மிதக்க விட்டபோது நம் பிரதம மந்திரி, "இனி வரப்போகும் பல கப்பல்களுக்குப் பிள்ளையார் சுழி போட்டதுபோல இந்தக் கப்பல் விளங்குக! அவை இந்தியாவின் உபதேசத்தை உலகத்தின் மூலைமுடுக்குகள் எங்கும் கொண்டு செல்லட்டும்" என்று சொன்னார். நாமும் அவ்வாறே விரும்புகிறோம்.

பிள்ளையின் கம்பெனி

வெள்ளையருக்குப் போட்டியாக முதல்முதலிலே கப்பல் கம்பெனி அமைத்து நடத்தியவர் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை. அந்தக் கம்பெனியின் இந்த ஷரத்துக்கள் பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகையில் 3-11-1906-இல் வெளியானவை.

வந்தே மாதரம்.

சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட், தூத்துக்குடி.

1882-ம் வருஷத்து இந்தியன் கம்பெனிஸ் ஆக்டுப்படி 1906-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ந் தேதியில் ரிஜிஸ்டர்செய்யப்பெற்றது

மூலதனம்

கம்பெனியின் மூலதனம் ரூபா 10,00,000. இது பங்கு ஒன்றுக்கு ரூபா 25 வீதம் 40,000 பங்குகளாக இந்தியர், இலங்கையர் முதலிய ஆசியா கண்டத்தாரிடமிருந்து சேர்க்கப்படும்.

அக்கிராசனர்

பாலவநத்தம் ஜமீன்தாரவர்களும் மதுரைத் தமிழ்ச் சங்க

அக்கிராசனரவர்களுமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரை சாமித் தேவரவர்கள்.

டைரக்டர்கள்

1. மெஸர்ஸ் யச். ஏ. ஆர். ஹாஜி பக்கீர் முகமது சேட் அன் சன்ஸ். மிஸ்டர் முகம்மது ஹாசிம் சேட் அவர்கள்.

2. பொ. பாண்டித் துரைசாமித் தேவரவர்கள்.

3. சி. வ. நல்லபெருமாள் பிள்ளை அவர்கள்.

4. அ. மு. ம. அருணசலம் பிள்ளை அவர்கள்.

5. சி. சு. வ. கிருஷ்ண பிள்ளை அவர்கள்.

6. பி. வெங்கிட ராமானுஜலு நாயுடு அவர்கள்.

7. சி. த. ஆ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.

8. அ. சு. வெ. வேலாயுதம் பிள்ளை அவர்கள்.

9. வ. அ. ஆ. ஆதிநாராயணன் செட்டியார் அவர்கள்.

10. வ. அ. வெ. சு. வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள்.

11. ஏ. சி. வ. திருச்சிற்றம்பலம் செட்டியார் அவர்கள்.

12. ஏ. ஆ. ஆ. ஆறுமுகம் செட்டியார் அவர்கள்.

13. ந. சு. தெய்வநாயகம் பிள்ளை அவர்கள்.

14. மா. வெ. மாய நாடார் அவர்கள்

15. இஸ்மால் ஹாஜி அப்துல் ரகிமான் சேட் அவர்கள்.

இவர்களும் 1-வது பொதுச் சட்ட சபைக் கூட்டத்தில் (1-st ordinary meeting) தெரிந்தெடுக்கப் படும் 20- மெம்பர்களும்.

காரியதரிசிகள்

மெஸர்ஸ் யச். ஏ. ஆர். ஹாஜி பக்கீர் முகமது சேட் அன் ஸன்ஸ்- கௌரவ காரியதரிசிகள். மிஸ்டர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் - துணைக் காரியதரிசி.

சட்ட ஆலோசனையதிபர்கள்

மிஸ்டர் சி. விஜயராகவாசாரியார் அவர்கள், டிஸ்டிரிக்ட் கோர்ட்டு வக்கீல், சேலம்.

ஆனரெபில் மிஸ்டர் கே. ஆர். குருசாமி ஐயரவர்கள், பி. ஏ., பி. எல்., ஹைகோர்ட்டு வக்கீல், திருநெல்வேலி.

ஆனரெபில் மிஸ்டர் யம். கிருஷ்ணன் நாயர் அவர்கள், பி. ஏ., பி. எல். ஹைகோர்ட்டு வக்கீல், கள்ளிக்கோடு.

மிஸ்டர் பி. எல். வெங்கு ஐயரவர்கள், பி. ஏ., பி. எல்., டிஸ்டிரிக்ட் கோர்ட்டு வக்கீல், தூத்துக்குடி.

பொக்கிஷதார்கள்

இந்தியா நாஷனல் பாங்கு, தூத்துக்குடி.

ரிஜிஸ்டரான ஆபீஸ்

நெ. 85. காட்டன் ரோடு, தூத்துக்குடி.

நோக்கங்கள்

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கம்பெனியார் தீர்மானிக்கும் மற்ற இடங்களுக்கும் ஸ்திரமாகவும் சவுகரியமாகவும் ஸ்டீமர்கள் நடைபெறச் செய்து பிரயாணத்தையும் வியாபாரத்தையும் சவுகரியப்படுத்தல்.

இந்தியர்களையும் இலங்கையர்களையும் ஆசியா கண்டத்து ஜாதியார்களையும் கப்பல் நடாத்துந் தொழிலில் பழக்குவித்து அதன் மூலம் வரும் லாபத்தை அடையும்படி செய்தல்.

இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களுக்கும் கப்பல் நடாத்துந் தொழிலையும் கப்பல் நிர்மாணம் செய்யும் தொழிலையும் செய்து காட்டிக் கற்பித்தல்.

இந்தியா இலங்கை மாணவர்க்கும் மற்றும் ஆசியாகண்டத்து மாணவர்க்கும் கப்பலோட்டுந் தொழிலையும் கப்பல் நிர்மாணம் செய்யும் தொழிலையும் சாஸ்திர சம்பந்தமாகக் கற்பிக்கும் கலாசாலைகளை ஏற்படுத்தல்.

கப்பல் நடாத்துந் தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள் இலங்கையர்கள் முதலிய ஆசியா கண்ட வாசிகளுக்குள் ஐக்கிய பாவனையை உண்டுபண்ணி ஒற்றுமையாக உழைக்கச் செய்தல்.

பற்பல வியாபார ஸ்தலங்களில் உள்ள வியாபாரங்களுக்கு அடுத்த கொள்வன, கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக இந்தியா இலங்கை முதலிய ஆசியா கண்டத் தேசத்தார்களை ஏஜெண்டுகளாக நியமித்தல்.

ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள், படவுகள் முதலியன நிர்மாணம் செய்வதற்கும், அவைகளைச் செப்பனிடுவதற்கும், சுத்தப்படுத்துவதற்கும் துறைகள் ஏற்படுத்தல்.

கம்பெனியார் தீர்மானிக்கும் சுதேசியக் கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் செய்தல்.

பங்குகட்கு மனுக்கள்

பங்குகளுக்காக அனுப்பப்படும் மனுக்கள் இதனடியிற் சேர்க்கப்பட்டிருக்கும் மாதிரியில் எழுதிப் பங்கு 2-க்கு ரூபாய் 5-வீதம் சேர்த்து அனுப்பப்பட வேண்டும். பாக்கித் தொகை கம்பெனியார் கேட்குங்காலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

டைரக்டர் ஆவதற்குரியவர்

10-அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்ட பங்காளிகளில் ஒவ்வொருவரும் டைரக்டராவதற்கு அருகராவர்.

ஈவுத் தொகை

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் வியாபாரமும் பிரயாணமும் நல்ல அபிவிர்த்தியான நிலைமையில் இருக்கின்றன. அதனால் கம்பெனியின் செலவுக்கும் ரிசர்வ் பண்டுக்கும் வேண்டுவன கழித்துக் குறைந்தது நூற்றுக்கு நூறு வீதம் ஈவுத் தொகை கிடைக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

மிமோரண்டமும் ஆர்ட்டிகிளும்

கம்பெனியின் மிமோரண்டமும் ஆர்ட்டிகிள்களும் அடங்கிய புத்தகங்கள், பங்குகளுக்கு அனுப்பப்பட வேண்டும். மனுப்பிரதிகள் முதலியவைகளைத் தூத்துக்குடிக் கம்பெனி ஆபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மிமோரண்டமும் ஆர்ட்டிகிள்களும் அடங்கிய புத்தகம் 1-க்குக் கிரயம் ரூபா 0-8-0.

கரேஸ்பாண்டேன்ஸ் வகையரா

சகல கடிதங்களும், பங்கு மனுக்களும், மணியரார்டர்களும் தூத்துக்குடியிலிருக்கும் கம்பெனியின் செக்ரிட்டெரி அவர்களுக்கு அல்லது அசிஸ்டண்டு செக்ரிட்டெரி அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

சுதேசாபிமானமுள்ள இந்தியர்களும் இலங்கையர்களும் மற்றும் ஆசியா கண்டத்து வாசிகளும் சுதேச நன்மை ஒன்றையே கருதி ஏற்படுத்தப் பெற்றிருக்கும் இக் கம்பெனியில் மிகுதியான பங்குகள் எடுத்தும் மற்றும் வேண்டுவன செய்தும் கம்பெனியைச் சீக்கிரம் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமெனப் பிரார்த்திக்கலாயிற்று.

இந்தியாவின் பிஸ்மார்க்

வி. சுப்பிரமணியன்

மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதில் 'இரும்பும் உதிரமும்' இணையற்றவை என்றவர் பிஸ்மார்க். பல துண்டுகளாகச் சிதறிக் கிடந்த ஜெர்மனியைப் படைப் பலங்கொண்டு ஐக்கியப்படுத்தி, நவீன ஜெர்மன் வல்லரசை உருவாக்கியவர் அவரே. அவரைப் போலவே, இன்று இந்தியாவை ஐக்கியப்படுத்தி வரும் 'இரும்பு மனிதர்' படேல். இந்த உண்மையைக் கட்டுரையாளர் நேர்த்தியாக விளக்குகிருர்.

சர்தார் படேலை இந்தியாவின் பிஸ்மார்க் என்று கே. எம். முன்ஷி ஒரு சமயம் கூறினர். இந்த இரண்டு ராஜ தந்திரிகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை மேற்போக்கானதல்ல; ஆழமானது; நுணுக்கமாய் ஆராயத் தக்கது.

உடல் தோற்றத்தில், படேல் பெரிதும் பிஸ்மார்க்கைப் போலவே இருக்கிருர். நடுத்தர உயரத்துக்குச் சிறிது அதிக உயரம்; நல்ல பருமன்; திரண்ட மார்பு; சதுர மோவாய்; தடித்த கழுத்து. சர்தார் ஒரு காலத்தில் அடர்த்தியான மீசை வைத்துக்கொண்டிருந்தார். அந்த மீசை இருக்குமானல், அவர் முகத்திலே பிஸ்மார்க்கின் சாயல் அப்படியே இருக்கும். இருவருக்கும் உள்ள இந்த அங்கலட்சணங்களைப் பார்த்தால், இருவரும் பிரத்தியட்ச நிலைமைகளை அநுசரித்தே செயல் புரிவோர் - கர்ம வீரர் - என்று தெளிவாய்த் தெரியும்.

வாலிபத்திலே பிஸ்மார்க் மிகுந்த குறும்பும் கலகமும் புரிந்துவந்தார்; நாற்பது வயதான பிறகே அவர் அரசியலில் பிரவேசித்தார். படேலும் குறும்புத்தனம் நிறைந்த மாணாக்கராகவே இருந்தார்; நாற்பதாவது வயதில் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டார். இருவரும் நெஞ்சழுத்தம் கொண்ட குடியானவர் குலத்தில் பிறந்தவர்கள்; குடியானவர்களுக்கு இயற்கையாக உள்ள லௌகிக ஞானமும் சூனித்தனமும் இருவரிடமும் நிறைய உண்டு.

பற்பல துண்டு ராஜ்யங்களாகச் சிதறிக் கிடந்த ஜெர்மனியை ஐக்கியப்படுத்தி, வலிமை மிகுந்த ஒரு நவீன ராஜ்யமாகச் செய்ததுதான் பிஸ்மார்க் சாதித்த உன்னதமான காரியம். பலாத்காரத்தை உபயோகித்தும், வாதத்தால் வற்புறுத்தியும், இந்தக் காரியத்தை இறுதியிலே அவர் சாதித்து முடித்தார். என்ருலும், பற்பல துண்டு ராஜ்யங்களுக்கும் ஏதோ கொஞ்சம் பெயரளவில் அதிகாரத்தை விட்டுக்கொடுத்தார். இந்தக் குட்டி ராஜ்யங்களுக்கெல்லாம் ஆஸ்டிரியா முகாமை வகித்தவரையில், ஜெர்மனியின் ஐக்கியம் பலிக்கவில்லை. ஆனல், ஆஸ்டிரியாவை முறியடித்து ஒதுக்கிய பிறகு, பிஸ்மார்க் தமது மதியூகம்மிக்க ராஜதந்திரத்தைக் கொண்டு வெகு விரைவிலே இதைச் சாதித்துவிட்டார். இதேபோல, பிரிட்டிஷ் மேலதிகாரம் விலகிப்போன உடனே, இந்தியாவின் சிறிய சம்ஸ்

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 6-3-'48),
156, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

தானங்களை இந்திய யூனியனுக்குள் சேர்த்து இந்தியாவை ஐக்கியப் படுத்துவதற்கு வழி திறந்துவிட்டது படேலின் பெருமை. அவருக்கு முன்னே எவராலும் முடியாத ஒரு காரியத்தை அவர் சாதித்தது மட்டும் அல்ல; சிறிது பலாத்காரமும் இல்லாமலே, பிஸ்மார்க்கையும் விட அதி சீக்கிரத்திலே, இதை அவர் சாதித்து முடித்தது அவருக்கு இன்னும் பெருமையாகும். அவர் மதி நுட்பம் வாய்ந்த பிரத்தியட்சவாதி. சுதேச மன்னர்களுக்குத் தாம் விரோதி யென்றோ நண்பனென்றோ பொதுப்படையாக அவர் சொல்லிக்கொள்ளவில்லை. அந்த அந்தச் சம்ஸ்தானத்தின் விஷயத்தை அது அதன் தனி அம்சங்களை அநுசரித்து அவர் முடிவு செய்தார். துளிச் சிதைவுக்கு இடங்கொடுத்தால், மேலும் மகத்தான சிதைவு ஏற்படும்; துளி ஐக்கியத்தை ஏற்படுத்தி வைத்தால் மேலும் மகத்தான ஐக்கியம் ஏற்படும். இதைப் படேல் அறிவார். முதல் முதலில் ஒரிஸ்ஸா சம்ஸ்தானங்களை இந்தியாவில் அவர் இணைத்தார். அதன் பின்பு, ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பல சம்ஸ்தானங்கள் இந்தியாவில் இணைந்துகொண்டன; அல்லது காட்டியாவாட் சம்ஸ்தானங்களைப் போலத் தங்களுக்குள்ளே ஐக்கியம் அடைந்தன. நிஜாம் ஒருவர்தாம் கொஞ்சம் முரண்டுகிறார். பிற சம்ஸ்தானங்களின் விஷயத்தில், பிஸ்மார்க்கையும் விட மிகப் பெரிய வெற்றியைப் படேல் அடைந்துள்ளார்.

அரசியலில், பிஸ்மார்க்கைப் போலவே படேலும் முற்றும் பிரத்தியட்ச நிலைமைகளை அநுசரித்தே செயல் புரியும் ராஜதந்திரி. தமக்குப் பிடிக்காத பொருள்களையும் மனிதர்களையும் பிஸ்மார்க் பகிரங்கமாகப் பழித்துரைப்பார். படேல் நீண்ட காலம் காந்திஜியிடம் பழகியிருக்கிறார்; ஆகையால், ஜனக் கும்பலிடமும் அநுபவசாத்தியமில்லாத லட்சியங்களிடமும் படேலுக்கு இருந்த வெறுப்பு மாறிவிட்டது. படேலும் பிஸ்மார்க்கைப் போலவே, பரிபக்குவமடைந்த ஒரு தேசபக்தர். உன்னதமான சர்வ தேசிய லட்சியங்கள் பொதுப்படையாக அவர் மனத்தைக் கவர்வதில்லை. நேரடியான குறிப்பிட்ட முக்கிய விஷயங்கள் பற்றி, மனிதர்களிடமும் சரி, தேசங்களிடமும் சரி, ஏற்றபடி நடந்துகொள்வதிலேதான் அவருக்கு விருப்பம்.

பொருளாதாரப் பிரச்னைகளில், அவரும் பிஸ்மார்க்கைப்போலவே திட்டமான ஏற்பாடுகளையும் சாதனைகளையுமே விரும்புகிறார்; அபேதவாத ஜனநாயகம் என்பது அராஜக ஜனக் கும்பலின் அட்டகாசமாகவே முடியும் என்று அவர் நினைக்கிறார் எனத் தோன்றுகிறது. பொது மக்களுக்குப் பற்பல சௌகரியங்களையும் சமூகப் பாதுகாப்பு முறைகளையும் ஏற்படுத்தி, அபேதவாத ஜனநாயகவாதிகளின் செல்வாக்கைப் பிஸ்மார்க் குலைத்துவிட்டார். சோஷலிஸ்டுகள் வெறும் வார்த்தைப்பந்தல் போடுகிறவர்கள் என்று படேல் பழிப்பது எல்லோரும் அறிந்த விஷயந்தான். ஆனால், பொருளாதாரத் துறையில் பிஸ்மார்க்கைப்போல் வெற்றிபெறுவது படேலுக்கு அவ்வளவு எளிதாக இராது.

முற்றும் பிஸ்மார்க்கைப் போலவே படேலும், உள்ளத்தை ஒளிக்காமல் பேசுவார்; அவருடைய நகைச்சுவையில் கடுமை கலந்திருக்கும். ஆஸ்டிரியா மீது பிஸ்மார்க் போர் தொடுக்கச் சில வருஷங்களுக்கு முன்பு, டிஸ்ராலியுடன் பேசிக்கொண்டிருந்தார்.

அந்தப் பேச்சுக்கு நடுவிலே ஏதோ தமாஷாக, "நான் முதல் முதலில் செய்யப்போகிற காரியம் என்ன தெரியுமா? ஆஸ்டிரியாமீது போர் தொடுப்பதுதான்" என்றார். பின்னால் டிஸ்ராலி தம் நண்பர்களிடம் அதைப்பற்றிக் குறிப்பிட்டு, "இந்த மனிதனைக் கொஞ்சம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருங்கள். இவன் சொன்னதைச் செய்துதான் தீருவான்" என்றார். 1870-ஆம் ஆண்டு பாரிஸ் நகரை ஜெர்மன் சேனை ஆக்கிரமித்துக்கொண்டது. அப்போது, தியேர் என்ற பிரபல பிரெஞ்சு ராஜதந்திரி, "நகரைக் காலி செய்துவிடுங்கள்; பிரான்ஸின் மானத்தைக் காப்பாற்றுங்கள்" என்று உருக்கமாகப் பிஸ்மார்க்கைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். வாக்கு வன்மை மிகுந்தவர் தியேர். ராஜதந்திர ரீதியான வார்த்தைகளை விட்டு, பொதுக் கூட்டப் பிரசங்க நடையில் மெல்ல மெல்ல அவர் இறங்கிவிட்டபோது, அவரைப் பிஸ்மார்க் சட்டென்று தடுத்து நிறுத்தி, புரியாத ஜெர்மன் பாஷையில் என்னவோ பதில் சொன்னார். தியேருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் திகைத்து நின்றார். "இதோ பாரும்; என் பாஷை உமக்கு எப்படிப் புரியவில்லையோ, அப்படித்தான் உமது பாஷையும் எனக்குப் புரியவில்லை" என்று அவருக்கு விஷயத்தை விளக்கினார் பிஸ்மார்க். இந்திய யூனியன் அசெம்பிளியில் ஒரு கேள்வி வந்தபோது, படேலும் இதேமாதிரி ஒரு கடுமையைத் தம் நகைச் சுவையில் காண்பித்தார். "சீக்கியரைப்போலவே, முஸ்லிம்களும் கிர்பான் வைத்துக்கொள்ள அநுமதி கிடைக்குமா?" என்று ஒரு வீகர் கேட்டார். "ஆஹா, கிடைக்கும், அவர்களும் சீக்கிய மதத்தைத் தழுவிவிட்டால்" என்று பதில் அளித்தார் படேல்.

'இந்தியாவின் இரும்பு மனித'ரான படேல், ஜெர்மனியின் 'இரும்பு சான்ஸல'ரான பிஸ்மார்க்கைவிட அதிக அதிருஷ்டசாலி. பிஸ்மார்க் காலத்தில் அவர் ஆட்டிவைப்பதற்குக் கிடைத்த ஜெர்மன் மக்கள் நாலுகோடிப் பேர் தாம்; யுத்தத்துக்கு முந்தி இந்தியா எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலையில்தான் அப்போது ஜெர்மனி இருந்தது. படேலுக்கோ முப்பது கோடி மக்கள் இருக்கிறார்கள்; பிரமாதமான அபிவிருத்திகளுக்கு இடமுள்ள ஒரு நாடு இருக்கிறது. இந்த நாட்டையும் மக்களையும் கொண்டு வலிமை மிக்க ஒரு ராஜ்யத்தை உருவாக்கும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்திருக்கிறது. காந்திஜி, நேரு, ராஜேந்திரப்பிரஸாது ஆகியவர்களுடனெல்லாம் படேல் நெருங்கிப் பழகியிருப்பதால், அவருடைய கல்நெஞ்சு இளகிப் பதமடைந்திருக்கிறது. அது தவிர, மகத்தான லட்சியங்கள் தமக்கு அசாத்தியமாகவும் தம்மால் ஜீர்ணித்துக் கொள்ள முடியாதவையாகவும் இருந்தாலும், அவற்றை அவர் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார். என்றாலும், பொருளாதாரத் திட்டம் போடுவதுதான் அவருக்குக் கொஞ்சம் சிரமம். அமுங்கிக் கிடக்கும் மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய ஒரு பொருளாதாரத் திட்டத்தை அவர் தயாரித்துவிட்டால் போதும். அது ஓர் ஆதர்சத் திட்டமாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை; காரியசாத்தியமான திட்டமாயிருந்தாலே போதும். அவர் இதைச் சாதித்துவிட்டாரானால், அவருக்கு ஏற்கனவேயுள்ள புகழைவிட, அதிகமான புகழை வருங்காலத்தில் அவர் பெற்றுவிடுவார்.

பாபுராவ் பதில் சொல்லுகிருர்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிருர். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாய்ப் பதில் தருகிருர்.

கே: மரியாதைக்கும் பண்பாட்டுக்கும் வேறுபாடு என்ன?

ப: மரியாதை முகமூடி; அதன் பின்னே இருக்கும் முகம் பண்பாடு.

* *

கே: தென்னிந்தியர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ஆயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிற வரையில் நல்ல மனிதர்களே.

* *

கே: நாளைக்கே சூரியனைக் கடவுள் மறைத்துவிடுகிருர் என்று வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்?

ப: உலகத்தில் பாவமே இராது. இருட்டைப் பாவம் செய்யும் காலமாகச் செய்வது வெளிச்சமே.

* *

கே: வாழ்வைக் காட்டிலும் மரணம் வேதனை தருவதா?

ப: வேதனையைப் போக்குவது என்ற சாவாத புகழை உடையது சாவு. வாழ்வுதான் வேதனை நிரம்பியது; சாவோ எல்லா வேதனைக்கும் சிறந்த மருந்து.

* *

கே: ஓர் இளமங்கை ஓர் இளைஞனை நன்ருகத் தெரிந்துகொண்டால் என்ன நடக்கும்?

ப: அவன் கையில் குழந்தையைக் கொடுத்துவிட்டு, அவள் கடையில் சாமான் வாங்கப் போவாள்.

* *

கே: ஒரு நடிகர் தாம் நடித்த படத்தைத் தாமே பார்க்கிருரே, அப்போது அவருடைய மன உணர்ச்சி எப்படி இருக்கும்?

ப: எறும்பை யானையாகக் காட்டும் பூதக்கண்ணடியின் முன் இருப்பது போன்ற உணர்ச்சி உண்டாகும்.

* *

கே: சில படித்த பெண்களும் படித்த வாலிபர்களும் நெருங்கிப் பழகுகிருர்கள்; என்ருலும் கல்யாணம் செய்துகொள்ள மறுக்கிருர்களே! ஏன்?

ப: கல்யாணமா! ஒரு வேலை, குடியிருக்க இடம், தொட்டில், பால் புட்டி இன்னும் என்ன என்னவோ இருந்தால்தானே கல்யாணம் செய்துகொள்ளலாம்? இந்தப் பொருளுக்கெல்லாம் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்தக் காலத்தில் யுவர்களும் யுவதிகளும் கல்யாணத்துக்குத் தப்பிக்கொள்வதுதானே நியாயம்?

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: பிப்ரவரி, மார்ச் '48), பம்பாய்.

கே: இல்லற இன்பத்தில் முக்கியமான விஷயம் எது?

ப: விருப்பு வெறுப்புக்களில் ஒற்றுமை.

* *

கே: பஸ்ஸிலோ ரெயில்வண்டியிலோ போகும்போது பெண்களுக்கு நாம் இடங்கொடுக்கவேண்டுமா? உங்கள் கருத்து என்ன?

ப: நின்றுகொண்டுபோக வண்டிக்காரர் அநுமதிப்பாரானால், வயசான பெண்மணிகளுக்கு நாம் இடம் கொடுக்க வேண்டியதுதான். இந்தக் காலத்திலெல்லாம் பஸ்ஸில் பெண்களுக்கு மரியாதை காட்டுவதானால், நாம் ஆபீசுக்கே போக முடியாதே.

* *

கே: அற்புதங்களை நீங்கள் நம்புகிறீர்களா?

ப: அற்புதங்களை நம்புவது கஷ்டத்திலே சிக்கிய மனிதர்களின் சுபாவம்.

* *

கே: நீங்கள் ஹிந்துவாயிருந்தும் பசுவை வளர்க்காமல் நாயை வளர்க்கிறீர்களே; பசு இருந்தால் தினம் கறந்த பால் கிடைக்குமே!

ப: பாலை விலைக்கு வாங்கலாம்; விசுவாசத்தை வாங்க முடியாதே!

* *

கே: ஆண்பிள்ளைகளின் பாடங்களில் சமையலைக் கூடக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நவீனப் பெண்களின் போக்கைப் பார்த்தால் சமையலைக் கட்டாய பாடமாகவும் செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

* *

கே: பணக்காரனுக்கும் ஏழைக்கும் என்ன வித்தியாசம்?

ப: பணக்காரனுக்கு ஆசை இருக்கிறது; ஏழைக்கு நம்பிக்கை இருக்கிறது.

* * *

கே: மதத்திற்கும் பண்பாட்டுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

ப: மதமென்பது ஆத்மாவின் பண்பாடு.

* *

கே: ஒரு படத்தில் எது மிகவும் முக்கியமான விஷயம்?

ப: படம் எடுக்கும் முதலாளியின் அதிருஷ்டம்.

* * *

கே: என் நண்பன் ஒருவனுடைய மனைவி அவனை அவன் நண்பர்கள் இருக்கும் போதே அவமதிக்கிறாள். அவள் அழகாக இருக்கிறாளாகையால் அவளை விலக்கிவிட அவனுக்கு இஷ்டமில்லை.

ப: இப்படி ஒருத்தி செய்தால் அவள் அழகியாக மாட்டாள். அங்க சௌந்தரியம் மாத்திரம் அழகென்றால் பளிங்குப் பாவைக்குக்கூட அந்த அழகு இருக்கிறது; பெண்ணுக்குரிய தனிக் கௌரவம் எது? அழகென்பது பலவகையும் சேர்ந்த ஒன்று. கணவனுக்கு உரிய மரியாதையைக் காட்டுவது பெண்ணின் அழகில் ஒரு திறம்.

* *

கே: ஏன் மனிதர்கள் வயசு காலத்தில் கடவுளைத் தொழத் தொடங்குகிறார்கள்?

ப: அவர்களிடம் இருக்கும் பேய் ரத்தம் செத்துப் போய்க் கடவுளுக்கு இடம் கொடுக்கிறது.

* * *

கே: பாவம் உலகில் ஏன் இருக்கிறது?

ப: புண்ணியத்தின் பெருமையை விளம்பரப்படுத்த.

மாமிச உணவு நல்லதா? மரக்கறி உணவு நல்லதா? இதை அநுபவ பூர்வமாக விளக்குகிறார் பேராசிரியர் பர்னார்ட் ஷா.

பலசாலியின் உணவு

லோயென்ஸ்டீன்

குத்துச் சண்டைகள்பற்றி விமர்சனம் செய்த பிரசித்தமான விமரிசகர்களுள் பர்னார்ட் ஷா மிகவும் பழையவர்; சிறந்தவர். சார்லி மிட்சல் என்ற புகழ் பெற்ற குத்துச் சண்டைக்காரரை அவர் பார்த்திருக்கிறார்; அவ்வளவு வயசானவர். 'காஷெல் பைரனின் உத்தியோகம்' என்ற அவருடைய நாவலில் குத்துச்சண்டை வீரனாகிய ஒரு கதாநாயகன் வருகிறான். மகா கெட்டிக்காரராக வாழ்ந்து அற்பாயுவில் மாண்டுபோன ஜேக் பர்க்கை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே அந்தக் கதாநாயகனை ஷா சிருஷ்டி செய்திருக்கிறார். கார்ப்பெண்டீரைப்பற்றி அவர் எழுதியிருக்கும் கட்டுரைகள் தொழில் நுட்பங்களைத் தெரிந்து எழுதிய நல்ல இலக்கியம். பிற குத்துச் சண்டைக்காரர்களைப் பற்றி வேறு சிலர் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியதைவிட ஷாவின் கட்டுரைகள் சிறந்தவை.

ஜோ லூயி சென்ற தடவை வால்காட் என்பவரோடு போட்ட சண்டையில் அநேகமாகத் தோல்வி பெறும் நிலையில் இருந்தார். ஆனாலும் ஜயித்துவிட்டார். பதினைந்து தடவை அவரோடு வால்காட் விடாமல் சண்டை போட்டார்; அவர்தாம் ஜயித்தார் என்றுகூடப் பல பேர் சொல்லும் நிலை வந்தது. ஜோ லூயியின் வாழ்வில் இது பெரிய அற்புதமென்று ஷா சொன்னாராம். ஏன் அவ்வாறு அவர் சொல்ல வேண்டும்?

இதைப்பற்றித் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டேன். ஷா சொன்ன பதில் இதுதான்: "சண்டைக்களத்தில் இருக்கும் போதும் லூயியை நான் பார்த்ததேயில்லை; திரையிலோ நேரிலோகூடக் கண்டதில்லை. ஆகவே அந்தச் சண்டையைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. அதைப்பற்றிய விவரத்தையும் நான் படித்ததில்லை. அதைப்பற்றி விவரிக்கவும் ஒன்றும் இல்லை. ஆனாலும் தெளிவாக ஒரு விஷயம் மாத்திரம் தெரிய வந்தது. குத்துச் சண்டைக்குமுன் இரண்டரை ராத்தல் எடையுள்ள மாட்டு மாமிசத்தைத் தம் நிறை அதிகமாகும் பொருட்டு லூயி சாப்பிட்டாராம்.

"நான் எதை அற்புதம் என்று குறிப்பிட்டேன் என்றால், அந்த மாமிசத்தை விழுங்கிவிட்டு அவருக்குச் சண்டை பிடிக்கவும் முடிந்ததே என்பதைத்தான்; அதுவும் பதினைந்து தடவை எதிரியோடு சமாளித்திருக்கிறார். போரிடும் சக்தியையும் கனத்தையும் மாட்டு மாமிசம் அதிகப்படுத்தும் என்று அவர்

காப்பிரைட்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம் (ஆங்கிலம்: 20-3-'48),
கஸ்தூரி பில்டிங்ஸ், மவுண்ட் ரோட், சென்னை.

நம்பியிருக்க வேண்டும்.

"சைவ உணவு சாப்பிடுகிறவர் யாரைக் கேட்டாலும் அவருடைய சக்தியை அது குறைத்துவிடும் என்று சொல்லியிருப்பார். ஒரு நாளில் நூறு மைல் சைகிளில் போகிறவர்களுக்குத் தெரியும் இந்த உண்மை. மாமிச உணவை நிறையத் தின்றுவிட்டால் அப்படிப் போவ தற்குள் மூச்சு வாங்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். ஒரு இரண்டு துண்டு பழுப்பு நிற ரொட்டியும் பச்சடியும் சாப்பிட்டிருந்தால், சிறந்த வெற்றியை அடைந் திருக்கலாம்.

"அவர் அடுத்த தடவை சைவ உணவைப் பற்றிச் சொல்லும் ஒரு வைத்தியரையோ குத்துச் சண்டை வாத்தியாரையோ கேட்டுக் கொள்ள வேண்டும். தேகபலத்தைக் காட்டும் விளையாட்டுக்காரர்கள் எல்லோருமே இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மாமிசபட்சணியாகிய புலி ஒரு தடவைதான் பாய்கிறது; அதில் அது தவறிவிட்டால் அதைத் தொலைத்துவிடலாம். ஆனால் புல்லைத் தின்னும் காளையோ சித்திரவதை செய்து ஓய்ந்து போகிற வரைக்கும் எதிர்த்து நிற்கிறது; பிறகுதான் அதைக் கொல்ல முடிகிறது. தழையுணவு கொள்ளும் யானை துப்பாக்கிக் குண்டுக்கன்றி மற்ற எதற்கும் அசையாது."

சுருதி சேருமா?

மகாவைத்தியநாதையர் ஒரு சமயம் திருவாவடுதுறைக்கு வந்திருந்தார். அவரிடம் பண்டாரசந்நிதிகளுக்கு மிகுந்த பிரியம். ஒரு நாள் மாலை அவருடைய சங்கீதக் கச்சேரி நடப்பதாக இருந்தது. கச்சேரி செய்ய அவரும் அவருடைய தமையனார் ராமஸ்வாமி பாரதியும் மடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்களும் சென்றார்கள். திடீரென்று மகாவைத்திய நாதையர் "ராமசாமி!" என்று உரக்கக் கூப்பிட்டார். தமையனார் அருகில் வரும்போதே அவரை இவர் அப்படிக் கூப்பிடக் காரணம் இல்லை. எனவே, சாமிநாதையரவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். பின்னால் இருக்கையில் தனியே ராமஸ்வாமி பாரதியவர்களைப் பார்த்து, "தாங்கள் பக்கத்தில் இருக்கும்போதே தங்களைத் தம்பி அப்படிக் கூப்பிட்டாரே, ஏன்?" என்று சாமிநாதையரவர்கள் கேட்டார்கள். "அதுவா? அவன் தன் கொண்டை சரியாக இருக்கிறதா? சுருதியோடு சேருமா என்று பார்த்துக்கொண்டான்" என்றார் பாரதியார்.

* * *

கெட்ட காலம் ஏற்பட்டால் தகாத இடங்களையெல்லாம் அடையவேண்டியிருக்கிறது. வீடு நெருப்புப் பற்றி எரியும் போது குப்பைமேட்டின்மீது ஏறி நிற்பதில்லையா?

—ரஹீம்

பசு வளர்ப்பது நல்லதா? எருமை வளர்ப்பது நல்லதா?
கேள்விக்குச் சரியான பதில் இங்கே இருக்கிறது.

பசுவும் எருமையும்

ஸ்ரீராம் சர்மா

மெஷின் கலப்பைகளைக் கொண்டு வயல்களை உழுவது நம் நாட்டுக்கு ஏற்றதல்ல. சில களர் நிலங்களைப் பண்படுத்துவதற்கு வேண்டுமானால் இரண்டொரு மெஷின் கலப்பைகளை அரசாங்கத்தார் வைத்துக்கொள்ளலாம். ஏற்கனவே நம் நாட்டில் எருதுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து போயிற்று. பாலுக்காக நாம் பசுக்களை வளர்க்கவேண்டும். மெஷின் கலப்பைகள் பால் கொடுக்குமா?

கடந்த மகாயுத்தத்துக்கு முன்பே நமது நாட்டில் பசுக்கள் 10½ சதவிகிதம் குறைந்துபோயின. ஜனத்தொகையோ 21½ சதவிகிதம் பெருகியது. 1920-இல் பால் கறக்கும் பசுக்கள் 4,33,60,000 இருந்தன; 1940-இல் அவை 3,87,50,000 ஆகக் குறைந்துவிட்டன. இன்று இந்தியாவில் 32 கோடி மக்களும், பாகிஸ்தானத்தில் 8 கோடி மக்களும் இருக்கிறார்கள். நாட்டிலே பாதிப்பேர் பயிர்த்தொழிலைக் கொண்டு வாழ்கிறவர்கள். கடந்த போரிலே ஆங்கில அமெரிக்கச் சேனைகளுக்காகப் பேர்பாதி பசுக்களைக் கொன்றாயிற்று. மிச்சமுள்ள பசுக்களும் எருதுகளும் நமக்கு எந்த மூலைக்குப் போதும்?

குடியானவர்களின் நன்மைக்காக நாம் நல்ல சாதிப் பசுக்களை வளர்க்க இன்று திட்டம்போட்டால் இன்னும் 50 - 60 ஆண்டுகளுக்குள்ளே நம்முடைய பசுமாடுகளின் தரம் உயரக் கூடும். சிரமப்பட்டு முயன்றால் 40 வருஷங்களில் நாம் இந்தத் துறையில் வெற்றி காண முடியும். ஹாலண்டு, டென்மார்க், இங்கிலாந்து முதலிய நாடுகளில் பசுக்களின் தரம் உயருவதற்கு 60 ஆண்டுகள் பிடித்தன.

பாலும் நெய்யும் கிடைப்பதற்குப் பசுவைவிட எருமையை வளர்ப்பது நல்லது என்ற கொள்கை நம் நாட்டில் வெகுவாகப் பரவியிருக்கிறது. நம்முடைய மந்திரிகள்கூட, “எருமை வைத்துக்கொள்ளாமல் நமக்கு வேண்டிய அளவு நெய்கிடைக்காது” என்று சொல்லுகிறார்கள். “உழவுக்கு எருதுகளையும் பாலுக்கு எருமைகளையும் வளர்க்க வேண்டும்” என்று ராயல் கமிஷன் கூறியது. அப்படிச் செய்தால் பசுங்கன்றுகளும் எருமைக் கடாக்களும் போகும் வழி என்ன? குடியானவர்களுக்கு இவை எல்லாமே பயன்படுகின்றன. ஆதலால் அவர்கள் எல்லாவற்றையுமே வளர்க்கவேண்டும்.

பாலும் நெய்யும் நிறையக் கிடைக்கவேண்டுமானால் எருமையை விடப் பசு வளர்ப்பதுதான் லாபகரமானது. எருமைப் பால் குடிப்பதனால் சோம்பலும் சோர்வும் விளை

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி: நவம்பர் '47),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

கின்றன. குழந்தைகளுக்கு எருமைப் பால் புகட்டுவது நல்லதல்ல. குதிரைக்குட்டிகளுக்கு ஆட்டுப் பாலும் பசும்பாலுமே கொடுக்கிறார்கள்; எருமைப்பால் கொடுத்தால் அவை கோடைக்காலத்தில் எருமைகளைப்போலச் சேற்றிலே உழல விரும்புகின்றன. எருமைப்பால் குழந்தைகளுக்கு வயிற்று வலியை உண்டாக்கும்; அறிவைக் குறைக்கும். பசும்பாலிலும் வெண்ணெயிலுமுள்ள உணவுச் சத்துக்கள் எருமைப் பாலிலும் வெண்ணெயிலும் கிடைப்பதைவிடப் புஷ்டியானவை. பசு நெய்யில் எருமை நெய்யைவிடப் பத்துப் பங்கு கரோடீனும் வைட்டமின்களும் இருக்கின்றன. நெய்யைக் காய்ச்சிய பிறகு எருமைப்பாலிலே வைட்டமின் ஏ மிகவும் குறைந்துபோகிறது. பசும்பாலில் கரோடீன் மிகுதியாக இருப்பதனால் அது ஏ வைட்டமினைக் குறையாமல் காக்கிறது. நம்முடைய நாட்டிலே எந்த எருமையும் பசுவைவிட அதிகமாகப் பால் கொடுப்பதில்லை. ஒரே விலையுள்ள பசுவையும் எருமையையும் வாங்கி வளர்த்துப் பார்த்தால், எதனால் பயன் அதிகம் என்பது நன்றாகத் தெரியும். எனவே எருமைப் புத்தியை விட்டுத் தொலைத்துப் பசுவைக் காப்பாற்றுங்கள்.

1940-இல் கோசேவா சங்கக் கூட்டத்தில் காந்தியடிகள் பேசியது கவனிக்கத்தக்கது. "இந்தியாவில் பசு எருமை இரண்டின் நிலைமையும் நன்றாயில்லை. வேண்டியவரையில் வைத்துக்கொண்டு ஜனங்கள் அவற்றைக் கசாப்புக் கடைக்கு விற்றுவிடுகிறார்கள். எருமைப்பாலையும் நெய்யையும் உபயோகிக்காவிட்டால் எருமை செத்துப்போகுமே என்று யாரும் பயப்படவேண்டியதில்லை. அப்படி இல்லாவிட்டாலும் அதனால் ஏதும் நஷ்டமில்லை; எருமை வளர்ப்புப் பிராணியாக இராமல் காட்டுப் பிராணியாக மாறிவிடும். நாம் காப்பாற்றவேண்டிய பிராணி பசுதான். பசுவைக் காப்பாற்றினால் எருமையும் பிழைத்துவிடும். கோசேவையை நாம் ஒரு விளையாட்டாக்கிவைத்து, நம்முடைய உண்மையான கடமைகளை மறந்துவிட்டோம். அடிப்படையான முறையில் பசுக்களைக் காப்பதனால், பிற உயிர்களுக்கும் நாம் நமது கடமையைச் செலுத்துகிறோம் என்பதை அறிந்துகொள்ள முடியும்" என்று அவர் சொன்னார்.

நமது நாட்டிலே ஒவ்வொரு குடியானவனும் பசுவை வளர்க்க வேண்டும். ஒவ்வோர் இந்தியனும் பசும்பாலையும் பசுநெய்யையுமே உட்கொள்ளும் விரதத்தை ஏற்க வேண்டும். இதனால் நமது ஆரோக்கியம் வளரும்; ஏழைமை அகலும்.

பலாப்பழத்தை எடுப்பதற்கு முன் கைகளில் கொஞ்சம் எண்ணெயைத் தடவிக்கொண்டால் பழத்தின் பசை கையில் ஒட்டிக்கொண்டு தொந்தரவு கொடுக்காது. ஆத்ம ஞானத்தால் பலத்தைச் சேகரித்து வைத்துக்கொண்டு பிறகு பொருளிலும் உலகியலிலும் உழன்றால்கூட அவற்றால் சிறிதும் ஊறு நிகழாது.

—ராமகிருஷ்ண பரமஹம்சர்.

சொல் பொருந்துமா?

பல சமயங்களில் பொருத்தமற்ற வார்த்தைகளும் தவறான பிரயோகங்களும் நம்முடைய எழுத்தில் வந்துவிடுகின்றன. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான சொற்களை அமைக்க முயலுங்கள்.

வார்த்தைகள்:

1 மீட்டி
2. மீட்டு

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(க) விராட மன்னனுடைய பசுக்களை நான்.....வருவேனென்று கூறி வீறுடன் எழுந்தான் அர்ஜுனன்.

(ங) வீணையை......ப் பாடினாள் என்பதை அறிய முடியாமல் வீணையின் நாதமும் அவள் குரலும் இழைந்து நின்றன.

(ச) நான் சொன்ன வார்த்தைகளை ......க்கொள்கிறேன் என்று சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம் முன்யோசனை இல்லாமையே.

வார்த்தைகள்:

3. குடை
4. கொடை

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(ஞ) மழைக்குக்......போலக் கண்ணன் எனக்கு உதவி செய்வான்.

(ட) கர்ணனைப்போல் ......யில் வல்லவன் இனிமேல் யார் வரப் போகிறார்கள்?

வார்த்தைகள்:

5. இறை
6. இரை

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(ண) ஏற்றம் ....க்கிறவன் பாடும் பாட்டில் எல்லாத் தெய்வங்களும் காட்சி அளிக்கின்றன.

(த) பெண்கள் ......ந்து பேசுகிறார்களென்று நீ ஏனையா ......ச்சல் போடுகிறாய்?

(ந) உணவுப் பண்டத்தை வீணாக ......க்கக்கூடாது.

வார்த்தைகள்:

7. திரை
8. திறை

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(ப) மன்னர்களெல்லாம் வந்து ......அளக்கும் முற்றம் உடையவன் தசரத சக்கரவர்த்தி.

(ம) ......கடலோடியும் திரவியம் தேடவேண்டும்.

(ய) ....யில் வரும் அழகிகளின் உருவம் இயற்கையிலே அப்படி அமைந்திருப்பதில்லை.

வார்த்தைகள்:

9. அறிவித்தல்
10. தெளிவித்தல்
11. உணர்த்துதல்
12. காட்டுதல்

பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:

(ர) வேண்டிய வண்ணமெல்லாம் உதாரணங்களை எடுத்துச் சொல்லி இந்த உண்மையை அவன் ....ன்.

(ல) இதுவோ அதுவோ என்று சந்தேகம் அடைந்திருந்த சமயத்தில் திடீரென்று தோன்றி உண்மையை அவன் ......ன்.

(வ) அந்த ஊரில் உள்ளவர்கள் நன்றாகப் படித்தவர்கள் என்ற செய்தியை நண்பன்......ன்.

(ழ) இறைவன் திருவடியிலே இடையறாத பக்தியினால் உண்டாகும் அநுபவம் இன்னதென்பதைக் குருநாதன் மாணக்கனுக்கு......ன்.

(ள) எது சொன்னாலும் தவறு என்ற பிடிவாத புத்தியுடையவர்களுக்கு விஷயத்தை எடுத்து .... முடியுமா?

[விடை 64-ஆம் பக்கத்தில்]

'யாரே அழகுக்கு அழகு செய்வார்?' என்று சொல்லுகிறார்கள். ஆனால், அலங்கார மோகமில்லாத பெண் அபூர்வம்.

அலங்காரப் பொருள்கள்

ராமு

உலகத்திலே மிகப் பழைய கலை விவசாயத் தொழில்; அதை விடப் பழைய கலை பெண்களின் அலங்காரம். நாகரிகம் முற்ற முற்ற, விஞ்ஞானம் முன்னேற்றம் அடைய அடைய, அலங்காரக் கலையும் மாறிக் கொண்டே வருகிறது.

வைரம்: நகைகளுக்கு உபயோகப் படும் ரத்தினக் கற்களில் சிறந்தது வைரம். இதைப் பூமியிலிருந்து எடுத்தவுடன் பார்த்தால், வெறும் பருக்கைக் கல்லுக்கும் இதற்கும் வித்தியாசமே தெரியாது. இதை அராவிப் பட்டைதீர்த்த பிறகு, இதன் ஒளி பளீர் பளீரென்று மின்னிக் கண்ணைப் பறிக்கும்.

ரஸாயன முறைப்படி பார்த்தால் வைரம், அடுப்புக்கரி, காரீயம் இவையெல்லாம் ஒரே பொருள் தான். இந்த ரகஸ்யம் வெளிப்பட்டபின், ரஸாயன சாஸ்திர நிபுணர்கள் செயற்கை முறையில் வைரம் தயாரிக்க முனைந்தார்கள். 1897-இல் மாய்ஸன் என்னும் டச்சு ரஸாயன நிபுணர் ஒருவர், தாம் வைரத்தைச் சிருஷ்டித்து விட்டதாகப் பிரகடனம் செய்தார்.

அவர் முதலில் சர்க்கரையைக் கருக்கினார்; ஒரு குழாயில் திரவமாய் உருகிய இரும்பில் அந்தச் சர்க்கரைக் கரியைக் கரைத்தார். கொதிக்கக் காய்ந்த ஈயத்துக்குள் அந்தக் குழாயைத் திடீரென்று முக்கிவிட்டார்; உடனே அந்தச் சர்க்கரைக் கரியெல்லாம் ஸ்படிகமாக மாறிப் பிறகு வைரமாகிவிட்டதாம். மாய்ஸனுக்குப் பிறகு வேறே எந்த நிபுணராலும் வைரம் செய்ய முடியவில்லை.

நீலமும் சிவப்பும்: சாதாரணமாகக் 'காரண்டம்' என்னும் இயற்கைத்தாதுப் பொருளிலிருந்து அலுமினியம் கிடைக்கிறது. சுத்தமான காரண்டத்துக்கு நிறம் இல்லை என்று சொல்லுவார்கள். என்றாலும் அதற்குச் சில நிறங்கள் உண்டு. நீலக்கல், சிவப்புக்கல் இவை இந்த வகையைச் சேர்ந்தவையே; இப்போது அலுமினியம் ஆக்ஸைட் என்னும் பொருளைக் கொண்டு செயற்கை ரத்தினங்களை உண்டாக்குகிறார்கள்.

வைடூர்யம்: அலுமினியம், பெரிலியம் ஆகிய இரண்டு உலோகங்களின் கலவைப்பொருளே வைடூர்யம். இதற்குச் சுயமாக நிறம் கிடையாது. பிற தாதுக்களால் இதற்கு நிறம் கொடுக்கிறார்கள். ஆழ்ந்த பச்சை நிறமுடைய வைடூர்யத்தைப் பச்சைக்கல் என்கிறோம். நீல நிறமுடைய வைடூரியம் மிகவும் கவர்ச்சியாக இருக்கும். அதைக் கோமேதகம் என்கிறோம்.

முத்து: உயிர்ப் பிராணியிடம் பிறப்பது முத்து. சிப்பி மீனின் கூட்டுக்குள் சில சமயம் மணல் புகுந்துகொண்டு உள்ளேயிருக்கும் மீனுக்கு உபத்திரவம் தரும். மீன் அந்த மணலை வெளியே தள்ளச்

காப்பிரைட்: கிருஹலக்ஷ்மி (தெலுங்கு: 15-2-'48), கேஸரி குடீரம், ராயப்பேட்டை.

சக்தியற்றுப்போகும். ஆனால், தன் உடம்பில் மணல் உறுத்தாமல் இருப்பதற்காக மணலைச் சுற்றி மெத்தென்ற ஒரு பொருளைச் சிருஷ்டித்துவிடும். இதுதான் பிறகு நல் முத்தாக மாறுகிறது. ரஸாயனரீதியில் பார்த்தால், சுண்ணாம்பும் முத்தும் ஒன்றேதான். சுண்ணாம்பைப் போலவே நல்முத்தும் ஆஸிட்டில் கரைந்துவிடும். முத்து மிகவும் அழகான வஸ்து; ஆனால் அது சீக்கிரமே கோடுகள் விழுந்து நசுங்கிக் கெட்டுவிடும்.

ஜப்பானில் 'கல்சர் முத்து' என்ற ஒருவகைச் செயற்கை முத்துச் செய்கிறார்கள். இயற்கை முத்து எந்த முறையில் உண்டாகிறதோ, அந்த முறையைத்தான் செயற்கை முத்துச் செய்வதிலும் கையாளுகிறார்கள். மெத்தென்ற சிப்பி மீன்கள் உயிருடன் இருக்கும் போதே உடைந்த முத்தின் சுக்கலையாவது வேறு கடினமான வஸ்துவையாவது சிப்பியில் நுழைத்து விடுவார்கள். சில நாட்களில் இந்தச் செயற்கை முத்து உருவாகிவிடும். இந்த முத்தைச் செயற்கை முத்து என்று கண்டு பிடிப்பது சற்றுச் சிரமமே. இந்த முத்தின் மேல் 'அல்ட்ரா வயலெட்' கிரணங்கள் விழுந்தால் பச்சை நீரோட்டம் தெரியும்; நல்முத்தின் மேல் அந்தக் கிரணங்கள் விழுந்தால் மேகநீல நீரோட்டம் தெரியும்.

நகைகள் பூணுவதைத் தவிர, உடம்பை அழகுபடுத்திக்கொள்ளும் வழக்கமும் அநாதிகாலமாக இருந்து வருகிறது. முன் காலத்தில் நம் பெண்கள் தினசரி ஸ்நானம் செய்யும் போது உடம்புக்குச் சந்தனம், முகத்துக்கு வாசனைப் பொடி, காலுக்குச் செம்பஞ்சுக் குழம்பு இவற்றை உபயோகித்து வந்தார்கள். இந்தக் காலத்திலும் நம்மில் ஹிந்துப் பெண்கள், மஞ்சள் பூசிக் குளிக்கிறார்கள். சிலர் கை கால் நகங்களுக்கு மருதாணி இட்டுக் கொள்ளுகிறார்கள். மையிட்டுக் கண்களை அழகுபடுத்திக் கொள்ளுகிறார்கள். இவை போன்ற அலங்காரங்கள் புராண காலம் முதல் பழக்கத்தில் இருந்து வருகின்றன. ஆனால் இந்தக் காலத்தில் மேல்நாட்டு மோகம் முற்றிய பெண்களும் வாலிபர்களும் அலங்காரம் நடையுடைபாவனை எல்லாவற்றிலும் மேல்நாட்டு முறையையே பின்பற்றுகிறார்கள். முகப்பூச்சுக்குப் பவுடர், ஸ்னோ, க்ரீம் முதலியவற்றை உபயோகிக்கிறார்கள். 'இவற்றால் அபாயம் உண்டாகாதிருக்குமா?' என்ற கேள்வி ஒருபுறமிருக்க, பவுடர் முதலிய பூச்சுக்களால் எவரும் மன்மதனாகவோ ரதியாகவோ காட்சியளித்துவிடலாம் என்று நினைப்பது ஒரு மயக்கமேயாகும்.

உடம்பு ஆரோக்கியமாக இருக்கும் போது, வேர்வை சதாகாலமும் இருந்து கொண்டுதான் இருக்கும். உடம்பிலுள்ள கழிபொருள்கள் மயிர்க்கால்களின் மூலமாய் வேர்வையாக வெளிவரும். வேர்வை ஆவியாக மாறிவிடுவதால், உடம்பின் சீதோஷ்ண ஸ்திதி சரியான நிலைமையை அடைகிறது. வேர்வையைத் தடுக்கும் அழகுப் பொருள்கள்தாம் மிக்க அபாயமானவை.

இன்றைய முகப்பவுடர்களில் சீமைச் சுண்ணாம்பு, டால்க், கோலின், அரிசி மா, துத்தநாகம் டிடானியம் ஆக்ஸைட், மாக்னிஸைட், ஸாலிஸிலிக் ஆஸிட் ஆகிய பல பொருள்கள் கலந்திருக்கின்றன. இவற்றாலெல்லாம் தோலுக்கு எவ்விதக் கெடுதியும் இல்லை. சீமைச் சுண்ணாம்பு மிருதுவாக இருந்தாலும் தண்ணீரில் கரையாது. ஆகையால், அதோடு கூடப் போரிக் ஆஸிட், மாக்னிஸைட் இரண்டையும் கலக்

கிறார்கள். போரிக் ஆஸிட், கிருமிகளை அழித்துத் தோலுக்குச் சுகத்தைக் கொடுக்கும். இத்தகைய பவுடர்களை அநேகமாய்க் குழந்தைகளுக்கே உபயோகிக்கிறார்கள்.

முகத்துக்கு உபயோகிக்கும் க்ரீம்களில் வினோலின், பெட்ரோலேடம், பாதாம் எண்ணெய், பாரபின் மெழுகு, படிகாரம், க்ளிஸரைன், போரிக் ஆஸிட் இவை கலந்திருக்கின்றன. இவற்றாலும் அபாயமில்லை. சாதாரணமாக முகத்தைச் சோப்பால் தேய்த்துச் சுத்தம் செய்துகொள்ள விரும்பாதவர்கள், க்ரீம்களை முகத்தில் தடவிக் கொள்ளுவார்கள். இது முகத்திலிருக்கும் வேர்வைப் பசையையும் அழுக்கையும் நீக்கிவிடும். பிறகு ஒரு சவுக்கத்தால் முகத்தைத் துடைத்துவிடலாம். இந்த க்ரீம்களில் ட்ரையெதனலமைன் என்னும் பொருளைச் சேர்க்கிறார்கள். கார்ச்சிடால் என்பதும் இதைப் போன்றதே. இவை தோலை ரம்மியப்படுத்தும்.

ஆனால் அழகுப் பொருள்களில் வெள்ளீயம் போன்ற வஸ்துக்கள் மட்டிலும் சேரவே கூடாது. அவை அபாயமானவை. சோப்பும் அழகுப் பொருள் வகையில் சேர்ந்ததுதான். சோடாக்காரம் எடுப்பாக இருக்கும் சோப்புகள் சருமத்தின் அழகைக் கெடுத்துவிடும். பவுடர் போன்ற மற்ற அழகுப் பொருள்களிலும் நாம் நம் உடம்புக்கு நன்மை தருபவையாகப் பார்த்துப் பொறுக்கி உபயோகிப்பது அவசியம்.

அழகுப் பொருள்கள் குரூபிகளுக்கும் ஓரளவு அழகை உண்டாக்கிவிடுகின்றன. பவுடர், க்யூடெக்ஸ், லிப்ஸ்டிக் முதலியவை சிறிது போலியழகைக் கொடுப்பதே அழகில்லாதவர்களுக்கு ஓர் ஆறுதலைத் தருகிறது. சினிமா நட்சத்திரங்களில் பலர், இயற்கையில் எப்படி இருந்தாலும் தங்கள் மேக்அப்பினால் பல யுவர்களின் மனத்தில் கோயில் கொண்டருளும் அழகிகள் ஆகிவிடுகிறார்கள் அல்லவா? பெண்கள் பொதுவாக நகைநட்டுக்களையும் விதவிதமான கரைப் புடைவைகளையும் அழகுக்காகவே அணிகிறார்கள். அழகுப் பொருள்களை உபயோகிப்பது சரிதான். ஆனால், அதில் அளவு மீறிப் போகலாகாது. உபயோகிக்கும் பவுடர் போன்றவற்றை, அபாயம் இல்லாதவையா என்று தெரிந்து வாங்கவேண்டும்.

சரும சம்பந்தமான சாஸ்திரம் அபிவிருத்தி அடைகிறது. சர்மத்தைக் காப்பதன் அவசியம் விஞ்ஞானிகளின் கவனத்தைக் கவர்ந்துவிட்டது. அழகுப் பண்டங்களை ஆராயும் 'ஸயின்ஸ் ஆப் காஸ்மெடிக்ஸ்' என்னும் நூதன விஞ்ஞானப் பகுதி ஒன்றுகூடத் தோன்றிவிட்டது. அதன் உதவியால் முகத்தின் தோற்றத்தையே ரணசிகிச்சை மூலம் மாற்றும் 'ப்ளாஸ்டிக் ஸர்ஜரி' முறையும் வந்திருக்கிறது. மக்களுக்கு உணவைப் போலவே அழகும் இன்றியமையாதது என்று விஞ்ஞானிகள் உணர்ந்துவிட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயந்தான்.

மூடர்களைத் தூரத்தில் நிறுத்தி வைப்பதற்காகவே, மரியாதை என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

—ஓர் ஆங்கில ஆசிரியர்.

கைலாசத்தில் என்ன நடக்கிறது? யாருக்கும் தெரியாது.
ருஷ்யாவில் என்ன நடக்கிறது? அதுவும் அப்படியே.

ருஷ்யரின் இரும்புத் திரை

ரே பாக்

சமீபத்தில்தான் அந்த இரும்புத் திரையுடன் ஓர் அதிசயமான அநுபவம் எனக்கு ஏற்பட்டது. என் பத்திரிகையின் ஆசிரியர், "ஜப்பானிலுள்ள ருஷ்ய ஸ்தானிகரைப் பேட்டி காணவும்" என்று ஒரு சிறு குறிப்பு அனுப்பியிருந்தார். அந்தப் பேட்டி எவ்வளவு சிரமமான காரியம்!

ஜப்பானில் ஒரு செம்பட்டைத் தலையனைக் காண்பது எவ்வளவு அசாத்தியமோ அவ்வளவு அசாத்தியமாகும் இந்தக் காரியம்.

அந்த 'இரும்புத் திரை'க்கு முன்னால் போய் நிற்பது முற்றும் வியர்த்தமான வேலை. ருஷ்யர்களுக்கு ஓர் 'இரும்புத் திரை' இருப்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அதை நாம் கண்ணால் பார்க்க முடியாது. கண்ணுக்குப் புலப்படாத திரை அது. நாட்டுப்புறத்தான் நகரத்துக்கு வந்து எதையாவது கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாது போலவே, அங்கே நாம் எதையும் தெரிந்துகொள்ளுவது சாத்தியமில்லை.

டோக்கியோ நகரத்தின் மத்தியில் உள்ள ஒரு மாளிகையின் வாசலில் ஒரு தார்த்தாரியன் துப்பாக்கி தாங்கியபடி காவல் நின்றான். முன் வாசலை நான் வேகமாகக் கடந்து சென்றேன். ஒரு சிப்பாய் அலுப்புடன், வாயைத் திறந்துகொண்டு என்னை விசாரிக்க வந்தான். என் விஸிட்டிங் கார்டை அவனிடம் கொடுத்தேன். அராபிக் கதையில் வரும் மலைக்குகைபோல, மின்சார விசைக் கதவு ஒன்று உடனே தானாகத் திறந்துகொண்டது. ஒவ்வொரு ருஷ்யத் தூதர் காரியாலயத்திலும் இந்த விசைக்கதவு உண்டு. இந்த விசைக்கதவு திறந்ததும், உள்ளே தென்பட்ட பெரிய வரவேற்புக் கூடத்தை எனக்குக் கைகாட்டினார்கள். எதிரே டோக்கியோ நகரத்தின் ஓர் அழகிய எஸ்டேட்டைச் சேர்ந்த ஈச்சந் தோட்டம் தென்பட்டது.

ருஷ்யாவின் ஆக்டிங் ஸ்தானிகரான மேஜர் ஜெனரல் கிஸ்லென்கோ என்பவரை நான் பார்க்க வேண்டுமென்று சொல்லியனுப்பினேன். ஆனால், அவருக்குப் பதிலாகக் கடுகடுத்த முகத்துடன் ஒரு லெப்டினன்ட் கர்னல் வந்து என்னை வரவேற்றார்.

அவர் என்னுடைய சீட்டைப் பார்த்துவிட்டு, "நீங்கள்தானா மிஸ்டர் பாக்?" என்று கேட்டார்.

"நான் ஜெனரல் கிஸ்லென்கோவைப் பார்க்கவேண்டும்" என்றேன்.

அந்தக் கர்னல் தோளைக் குலுக்கிக்கொண்டார்.

காப்பிரைட்: பம்பாய் கிரானிகிள் வீக்லி (ஆங்கிலம்: 14—3—'48), பார்ஸி பஜார் தெரு, பம்பாய்.

"உங்கள் ஜெனரலைச் சந்தித்து அந்தப் பேட்டி விவரத்தை எங்கள் பத்திரிகையில் எழுதி வெளியிட எங்களுக்கு ஆவல்" என்று நான் மீண்டும் சொன்னேன்.

"பேட்டி தரும்படி அவரை வேண்டிக்கொண்டு ஒரு கடிதம் எழுதுங்களேன்" என்றார் கர்னல்.

"பேட்டி தர ஜெனரலுக்கு எப்போது சௌகரியமாய் இருக்கும்? இந்த வாரத்தில் தருவாரா?"

"இந்த வாரம் அவருக்கு வேலை மிக அதிகம்."

"அப்படியானால் அடுத்த வாரந்தான் எனக்குப் பேட்டி கிடைக்குமோ?"

"அடுத்த வாரமும் வேலை அதிகந்தான்."

லெப்டினன்ட் ஜெனரல் தெரவ்யான்கே என்ற முந்திய ருஷ்ய ஸ்தானிகரைப்பற்றி நான் விசாரிக்க விரும்பினேன். அவர் சில மாதங்களுக்கு முன்பு டோக்கியோவை விட்டுப் போய்விட்டார். அவரைப்பற்றி எதுவுமே தகவல் தெரியவில்லை.

"ஜெனரல் தெரவ்யான்கே எப்போது திரும்பி வருவார்?"

"தெரியாது."

"சீக்கிரம் வந்துவிடுவாரோ?"

பதில் இல்லை.

"நாளாகுமோ?"

"ஆகலாம்."

"விளாடிவாஸ்டாக் நகருக்குப் பறந்து செல்ல எனக்கு ஆசையாக இருக்கிறது, கர்னல்."

"செய்யலாமே."

"விளாடிவாஸ்டாக்கில் இருந்தபடி ஒரு கதை எழுத வேண்டுமென்று விரும்புகிறேன்."

"செய்யலாமே!"

"உங்களுடைய 'கூரியர்' விமானத்தில் பறந்து செல்லவே எனக்கு மிகவும் ஆசை."

"மாஸ்கோவைக் கேளுங்கள்" என்றார் கர்னல்.

"ருஷ்ய ஸ்தானிகர் காரியாலயத்துக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எங்களுக்குக் 'கல் புஷ்பம்' என்ற ஸினிமாப் படத்தின் ஒரு பிரதியைக் கொடுத்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு அந்த அருமையான படத்தைப் பத்திரிகைக்காரர் சங்கத்தில் போட்டுப் பார்த்தோம்!"

"எழுத்துமூலம் கேளுங்கள். படம் கொடுக்கிறோம்" என்றார் கர்னல்.

"பார்த்த படத்துக்காகவே எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று மறுபடியும் சொன்னேன்.

"எனக்கு அதிகாரமில்லை. கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளுங்கள். படம் தருகிறேன்."

"படத்தை நாங்கள் பார்த்து ரஸித்து விட்டோம்" என்று மூன்றாவது முறையாக அவருக்குச் சொன்னேன்.

அவர் தோளைக் குலுக்கிக் கொண்டார்.

இதுதான் ருஷ்யரை நான் பேட்டி கண்ட விவரம், என் ஆசிரியரே!

நான் கடல் கடந்து செல்லப் புறப்படுமுன் நீங்கள் எனக்கு ஒரு பத்திரிகை நிருபர் பாஸ் கொடுத்தீர்கள் அல்லவா? அதன் சக்தியெல்லாம் இந்த 'இரும்புத் திரை'க்கு முன்னே சிறிதும் பலிக்கவில்லை.

வாழ்வு, எழுத்து, கருத்து இவற்றிலெல்லாம் வேறுபட்ட இந்த இருவருக்குமிடையே ஒரு லட்சிய ஒற்றுமையும் இருக்கிறது.

காந்தியும் அரவிந்தரும்

கே. பாஸ்கர மேனன்

காந்தியும் அரவிந்தரும் நம்மை இரு புறமும் இழுக்கும் இரண்டு காந்த சக்திகள். மேற்போக்காகப் பார்க்கும்போது, வட துருவமும் தென் துருவமும் போல் அவர்கள் வேறுபட்டுத் தோன்றுவார்கள். சிறிது கூர்ந்து பார்த்தால் இருவரும் ஒரே அச்சின் இரு முனைகளே என்பது எளிதில் புலப்படும். இருவரும் ஒரே நோக்கத்தைப் பூர்த்தி செய்ய உழைக்கும் இரண்டு சக்திகளே.

இருபத்து நாலு மணி நேரமும் சிறிதும் ஒளிவுமறைவில்லாமல் பகிரங்கமாக வாழ்க்கை நடத்தினர் காந்தி. அரவிந்தரோ பல வருஷங்களாக மக்கள் கண்களில் தென்படாமல் ஒதுங்கித் தனிமையிலே வாழ்க்கை நடத்துகிறார். வருஷத்தில் நாலு தடவை தான் அவர் பிறருக்குத் தரிசனமளிப்பார். அப்போதுங்கூடச் சில நிமிஷ நேரமே அவரை நாம் காண முடியும். அவரையே தஞ்சமென நம்பி, அவருடைய உபதேசத்தைக் கடைப்பிடித்து, அவர் வாழும் ஆசிரமத்திலேயே இருக்கும் சாதகனுக்குங்கூட, அவரை அப்போதுதான் பார்க்க முடியும். அவர் தமது தினசரி வாழ்க்கையை எப்படி நடத்துகிறார் என்பதை எவரும் அறியார். இவ்விதம் மக்கள் கண்களுக்குப் படாமல் ஒதுங்கி, ஆத்ம ஒளியிலே உலகனைத்தையும் கண்டு களிக்கிறார் அரவிந்தர்.

பாமர மக்களும் உணரத்தக்க முறையில் காந்தி பேசியும் எழுதியும் வந்தார். அரவிந்தரோ பெரிய படிப்பாளிகளே பல தடவை வாசித்தாலும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியாத முறையில் எழுதுகிறார். "யாரும் தப்பர்த்தம் செய்துகொள்ளாமல் தடுப்பதற்காகச் சில சொற்களுக்கு உங்கள் விரிவுரை வேண்டும்" என்று சீடர்கள் அவரை வேண்டினால், அரவிந்தர் "அது அநுபவத்தால் அறிய வேண்டிய உண்மை. சொல்லாலும் யுக்தியாலும் ஓரளவுதான் விளக்க முடியும்" என்று பதில் சொல்லிவிடுவார்.

காந்திக்கும் அரவிந்தருக்கும் இவ்வளவு வேற்றுமைகள் இருந்தாலும், இருவருக்கும் அடிப்படையிலே ஒற்றுமை இருப்பதுதான் ஆச்சரியம். மனித வர்க்கம் இன்று ஒரு மகத்தான முன்னேற்றத்தை எதிர்நோக்கி நிற்கிறது. அப்படி நிற்கும் மனிதவர்க்கத்துக்கு வழி காட்டி அதை முன்னே நடத்திச் செல்லும் ஒரே சக்தியின் இரண்டு அம்சங்களே இந்த இருவரும்.

முன் காலத்திலும் நம் நாட்டில் எவ்வளவோ மதாசாரியர்களும் முனிவர்களும் பிறந்து நமக்கு முன்னேற்ற வழி காண்பித்திருக்கிறார்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 7-3-'48), கள்ளிக்கோட்டை.

கள்; தாங்கள் உன்னதமான ஆத்ம வளர்ச்சி பெற்று, நமக்கும் வழி காட்டி அறிவு விளக்கேற்றி யிருக்கிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் மனித வர்க்கத்துள் வெகு சிலரே ஆத்மிக மார்க்கத்தை நாடி முன்னேறி வந்தார்கள். இன்றோ அறிவு முதிர்ந்து பரவி மனித சமுதாயமே திரண்டு ஆத்மிக மார்க்கத்தை நாடி முன்னேறக் காத்திருக்கிறது. இந்நிலையில் அரவிந்தரும் காந்தியும் செய்துள்ள சேவை மதிப்பரியது.

ஆத்ம சக்தியைப் பௌதிக உலகத்துக்கு இழுத்து இறக்கி வந்த மகான் அரவிந்தர். பகீரதன் ஆகாயகங்கையைக் கொண்டுவந்து பூலோகத்தைப் பரிசுத்தமாக்கியது போல், ஆத்ம சக்தியைத் திரட்டி நமக்குக் கொண்டுவந்து அளித்து நம்மை நம்பச்செய்து கடைத்தேற்றப் பாடுபடுகிறார் அவர்.

காந்தியோ மனித சமுதாயத்தின் அடித்தட்டில் கிடக்கும் ஹரிஜனங்களையும் கை தூக்கிவிட்டுக் கூர்மாவதாரத்தைப்போல் மனித சமுதாயத்தை அடியோடு உயர்த்தப் பாடுபட்டார். அவர் பௌதிக உலகத்தைத் தெய்விக உலகத்தில் கொண்டு சேர்க்க முயன்றார். பற்றுதலொழித்து முக்தி மார்க்கத்தைத் திறந்து வைத்தார். அவர் மோட்ச வாசலில் நின்றுகொள்வார்; மனித வர்க்கத்தின் அடித்தளத்திலே ஆழ்ந்து கிடப்பவனையும் கூவி அழைத்து உள்ளே நுழையச் செய்வார்; இனி எவரும் இல்லையே என்று கேட்டுத் தெளிந்த பிறகே தாம் அந்த மோட்ச வீட்டிலே புகுவார். இப்படிப்பட்டவர் காந்தி. அவர் உயிர் துறக்கச் சில நாளைக்கு முன்பு, "தங்களுக்கு வயசாகிவிட்டதே. தாங்கள் இனி இமயமலைக்குச் சென்று தவம் புரியக்கூடாதா?" என்று சிலர் கேட்டார்கள். காந்தி புன்சிரிப்புடன், "நீங்கள் அங்கே போனீர்களானால், உங்களுக்குச் சேவைபுரிய நானும் அங்கே வருவேன்" என்று பதில் அளித்தார்.

அவர் உயிர் துறப்பதற்கு முதல் நாள் ஓர் அமெரிக்கப் பெண் அவரைக் கண்டு, "நீங்கள் இமயமலைக்கு யாத்திரை சென்றால் என்ன?" என்று கேட்டாள். அவர் குலுங்கக் குலுங்கச் சிரித்துவிட்டு, "ஊன்றிப் பார்த்தால் அது நல்லதுதான்; அப்போது நான் இரண்டு மடங்கு மகாத்மா ஆகிவிடுவேன். என்னைக் காண இன்னும் அதிக ஜனங்கள் வருவார்கள். ஆனால் அந்தப் புகழும் பெருமையும் எனக்கு வேண்டாம். இந்த உலகத்தைச் சூழ்ந்துகிடக்கும் இருளிலிருந்தும் கஷ்டத்திலிருந்தும் ஏதோ கொஞ்சம் மனச் சாந்தியும் இன்பமும் கிடைக்குமானால் அதுவே எனக்குப் போதும்" என்றார்.

அரவிந்தர் ஆத்மிக வளர்ச்சியின் சிகரத்தை என்றோ எட்டியிருக்க வேண்டும். அப்படி யிருக்க அவர் இன்னமும் ஏன் தவம் புரிகிறார்? பரமசிவன் ஏன் தவம் புரிந்தார் என்பதற்குக் காளிதாசன் கூறும் பதில்தான் இங்கே நமக்கு நினைவு வருகிறது. 'சொல்ல முடியாத ஏதோ ஆசையால் பரமசிவன் தவம் புரிந்தார்' என்கிறார் கவியரசர். அந்தத் தவந்தான் உலகத்தை ஒன்று சேர்த்து முன்னேற்றும் யோகம். அந்த யோகமே இப்போது அரவிந்தர் புரிவது. சாந்தி ஆற்றிவந்த பணியும் இதுதான். முன்னேற்றத்துக்காகக் காத்து நிற்கும் மக்களுக்கு இருவரும் அபயம் அளித்துள்ளார்கள். இது உலகறிந்த விஷயம்.

மிருகங்களின் கூத்து

புரோபஸர் பி. ஜே. வாஸ்வானி

இது பஞ்சதந்திரக் கதை அல்ல; ஈசாப்பு கதையும் அல்ல. தற்கால நிலைமையைக் கற்பனையாய்ச் சித்திரிக்கும் கதை. மனிதன் விலங்கானால், விலங்கும் சிரிக்காதா? கதையை எழுதியிருப்பவர் பாகிஸ்தான் மாகாணமான சிந்து சர்வகலாசாலையின் ரெஜிஸ்டிரார்.

அன்றிரவு நிலவு காய்ந்து கொண்டிருந்தது. காட்டில் வாழும் பெரிய மிருகங்களும் சிறிய மிருகங்களும் கூடின. கிழக்குப் பஞ்சாபையும் மேற்குப் பஞ்சாபையும் பிரிக்கும் சாலைக்கு அருகில் இருந்தது அந்தக் காடு.

பரந்த புல்வெளியில் நிலவொளி வீசிய இடத்தின் நடுவில் சிங்கராஜா நின்றுகொண்டிருந்தது. அமைதியாக இருக்க வேண்டுமென்ற குறிப்போடு தன் வாலைச் சுழற்றி ஓர் அடி அடித்துவிட்டு, தன் தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, ஒரு பெரிய கர்ஜனை செய்து பேசத் தொடங்கியது.

"காட்டுவாசிகளே, ஐந்து நதிகள் ஓடும் அருமந்த நாட்டில் பிறந்த சகோதரர்களே, நான் உங்களை இங்கே அழைத்தது நம் விடுதலையைக் கொண்டாடுவதற்காகத்தான். நம்முடைய பழைய எதிரியாகிய மனிதனுக்கு நாம் அடிமைப்பட்டிருந்த வாழ்வு அகன்றுவிட்டது."

"கேளுங்கள், கேளுங்கள்" என்று மிருகங்கள் ஆரவாரம் செய்தன.

"சென்ற ஒரு மாதத்துக்கு மேலாகப் பாஞ்சாலத்தில் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்று வந்த நம் ஒற்றர்கள், மனிதரை மனிதர் கொல்கிறார்கள் என்ற செய்தியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மனிதனுக்கு அடங்கி வாழ்ந்த நம் பழைய அடிமை வாழ்வு சீக்கிரத்தில் தொலைந்துவிடத்தான் போகிறது. புதிய சுதந்தரத்தைக் கொண்டாடுவதற்கே நாம் கூடியிருக்கிறோம். இது பொருத்தமான காரியம். இந்த நாட்டில் மனிதன் பூண்டோடு அழிந்து போவான்."

அப்போது யானை தன் செவ்விழி சுழல அங்கும் இங்கும் பரபரப்பாகச் சுற்றிக்கொண்டிருந்தது. அது தன் துதிக்கையைத் தூக்கிக்கொண்டு பேசத் தொடங்கியது.

"சுதந்தரமா, சிங்கராஜாவே! மனிதன் கையில் ஆயுதங்கள் இருக்கும் வரையில் நமக்கு விடுதலை எங்கிருந்து வரும்? தவிர, மனிதன் மனிதனைக் கொல்கிறானென்பதற்காக நாம் அமிதமான சந்தோஷத்தை அடைய வேண்டியதில்லை. மனிதனுக்கு அழிவென்றால் அது நம் எல்லோருக்குங்கூட அழிவாக இருக்கலாம்."

சிங்கம் தலையை ஆட்டியபடி பரிகாசத் தொனியில் பேச ஆரம்பித்தது.

"ஏ கஜஸ்வாமி, நீர் அப்படிப் பேசுகிறது பொருத்தந்தான். நீரும் உம்

காப்பிரைட்: இந்தியன் ரிவ்யூ (ஆங்கிலம்: ஜனவரி '48),
3, சுங்குராம செட்டி தெரு, ஜி. டி., சென்னை.

இனத்தாரும் ஆயிரமாயிரம் கால மாக மனிதனுக்கு அடிமையாக இருந்துவருகிறீர்கள். மாடமாளிகை கூடகோபுரம் கட்டினீர்கள். காட்டை அழித்தீர்கள்; அந்தக் காட்டை மனிதன் நம்மிடமிருந்து பறித்துக்கொண்டான். முடிவே இல்லாத யுத்தங்களில் நீங்கள் அவனுக்கு உதவி செய்தீர்கள். மனிதன் நமக்கு நித்தியமான எஜமானனென்று எண்ணி, விடுதலையினுல் நமக்கு உண்டாகும் சந்தோஷத்தை அநுபவிக்கவொட்டாமல் நீர் தடுப்பது இயற்கையே. மனிதன் செத்தால் நாமும் செத்துப் போகும்படி இருக்கலாம்; ஆனுல் உண்ணிபோல நம் ரத்தத்தை உறிஞ்சிய அவனிடமிருந்து விடுதலை பெறுவதென்னவோ உண்மை.''

யானை பேசாமல் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டது. சிங்கம் தன் பார்வையை அதனிடமிருந்து திருப்பியது.

"ஏ எருதே! நீ என்ன பண்ணுகிருய்? மனிதன் காலுக்குச் செருப்பாகவும், உழவுக்கு யந்திரமாகவும், உணவுக்கு மாமிசமாகவும் ஆகிவிட்டாயே'' என்று அப்பாவி ரிஷபத்தைப் பார்த்துச் சிங்கம் முழங்கியது. அது மறுபடியும் தன் பார்வையைச் சுற்றிலும் செலுத்திச் செலுத்தி, "நீ மட்டும் என்ன? நீ என்ன வாழ்ந்தாய்?'' என்று ஒரு பிராணியையும் விடாமல் கேட்டுக்கொண்டே வந்தது. ஒவ்வொரு விலங்கும் மனிதனுக்கு அடிமையாக இருக்கும் விஷயத்தைக் குத்திக் காட்டியது. அது பேசி முடிந்த பிறகு எல்லா மிருகங்களும் ஒரே குரலாகப் பேசின. "கேட்டீர்களா, கேட்டீர்களா! சிங்கராஜா எவ்வளவு அருமையாகப் புத்திசாலித்தனமாகப் பேசினுர்! அடிமைத்தனத்திலிருந்தும் அச்சத்திலிருந்தும் விடுபடுவது வாழ்வைக் காட்டிலும் சிறந்தது'' என்று கோஷமிட்டன.

அமைதியாக இருக்க வேண்டுமென்று சிங்கம் குறிப்பித்தது. பிறகு யானை பேசலாயிற்று.

"தோழர்களே, நான் விளையாட்டாகப் பேசவில்லை. நாம் சுதந்தரம் அடைந்துவிட்டோமென்று சிங்கராஜா குதூகலம் அடைகிருர். அந்த விடுதலை எங்கே இருக்கிறது? நம்மிடம் பல்லையும் நகத்தையும் தவிர என்ன இருக்கிறது? மனிதனுக்கோ அவற்றைவிடப் பலமான ஆயுதங்கள் இருக்கின்றன. நாம் மனிதனை எதிர்த்து எப்படி வாழ முடியும்?''

சிங்கம் பொருமியது; கர்ஜித்தது. ஒவ்வொரு மிருகமும் காதை நெறித்துக்கொண்டே கேட்டது.

"வனவாசிகளே, விடுதலை வரப்போகிறதென்று சொல்கிறேன். அதற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன. மனிதனுக்குப் பலத்தைக் கொடுத்தது ஆயுதம் அல்ல. பகுத்தறிவுதான் அவனுக்கு ஆளும் திறமையைக் கொடுத்தது. மனிதனிடம் அந்தப் பகுத்தறிவென்னும் செல்வம் இப்போது இல்லை என்பது தெளிவாகிவிட்டது. மனிதன் அந்தப் பழைய ஆயுதத்தை மறந்து போனுன். நாம் சமயமறிந்து அதைக் கைப்பற்ற வேண்டும்; இல்லையானுல் அழியவேண்டும்...''

அப்போது பஞ்சாபைப் பிரிக்கும் எல்லைப்பாதையில் ஒரு பெரிய ஆரவாரம் கேட்டது; மிருகங்கள் ஒன்றை ஒன்று பார்த்துப் பிறகு சிங்கத்தைப் பார்த்தன.

"உங்கள் காதில் விழுகிற இந்தச் சப்தம் மனிதனை மனிதன் கொலை செய்யும் சப்தமென்று நான் நினைக்கிறேன். இப்போது நாம் யாரும் அறியாமல் காட்டின் ஓரத்துக்குப்

போய் அந்தப் பாதை நெடுகிலும் நின்று கொண்டு பார்ப்போம். பகுத்தறிவென்ற உயர்ந்த வஸ்துவை மனிதன் இழந்துவிட்டானென்றும், விடுதலை நமக்குச் சமீபத்தில் கிடைக்கப் போகிறதென்றும் நீங்கள் பிரத்தியட்சமாகத் தெரிந்துகொள்வீர்கள்" என்றது சிங்கம்.

உடனே கூட்டம் கலைந்தது. ஒன்றொன்றாக இரண்டிரண்டாக அவை பாதையின் ஓரத்தில் மரத்துக்குப் பின்னால் இருந்து கவனிக்கத் தொடங்கின. ஆண்களும் பெண்களும் குழந்தையுங் குட்டியுமாக ஒரே கூட்டமாய்ப் பயத்தோடு ஓடிக்கொண் டிருந்தார்கள். குதிரையின்மேலும், மாட்டுவண்டியிலும், கால்நடையாகவும் வேகமாகப் போனார்கள். தாடியும் முண்டாசும் கட்டியிருந்த சில மனிதர்கள் வேகமாக ஓடும் வண்டிகளில் ஏறிக்கொண்டு அவர்களைத் துரத்தினார்கள். இந்தக் காட்சிகளைப் பார்த்த மிருகங்களெல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கின.

"இந்தத் தாடியும் முண்டாசும் உள்ள பேர்வழிகள் யார்?" என்று மான் காதோடு காதாகக் கேட்டது.

"இவர்களைக் குருத்வாரம் என்ற இடத்தில் சில சமயம் பார்த்திருக்கிறேன். அங்கே கூடிக்கொண்டு மிகவும் பயபக்தியோடு கடவுளைத் துதிப்பார்கள்" என்றது ரிஷபம்.

அப்பால் குண்டுகளின் சப்தம் கேட்டது; வாள்கள் சலசலத்தன. இரக்கமேயின்றிப் பெண்மணிகளையும் குழந்தைகளையும் கொன்றார்கள். தப்பிய சிலர் ஓடினார்கள்; சிலர் எதிர்த்து நின்றார்கள்.

"இந்தத் தாடிக்காரர்கள் கடவுளை வணங்குவதுண்டா?" என்று கேட்டது மான்.

"ஆஹா! மிகவும் பக்தியோடு வழிபடுவார்கள். ஒரு மணிக்கு முன்கூடப் பிரார்த்தனை செய்துவிட்டு வந்திருக்கக்கூடும்" - இது ரிஷபத்தின் பதில்.

"அப்படியா! கடவுள் கருணையே வடிவானவராயிற்றே. அவரை வணங்கும் இவர்கள் இப்படிக் கடுகளவும் கருணையே இல்லாமல் தங்கள் இனத்தினரையே இப்படிக் கொல்லுகிறார்களே!"

"கூட்டத்தில் சிங்கராஜா சொன்னது மிகவும் சரியென்றே நினைக்கிறேன். மனிதன் பகுத்தறிவை இழந்துவிட்டான். நாம் இனிமேல் அவனுடைய ஆட்சியிலிருந்து விடுதலை பெற முடியும்."

"தெய்வ பக்தர்களென்கிற அந்தக் கொலைகாரத் தாடிப் பேர்வழிகள் கண்ணில் உள்ள குரூரப் பார்வையைப் பார்த்தாயா?"

"ஆமாம், பார்த்தேன். மனிதன் நம்மை மிருகமென்று இழிவாகச் சொல்கிறான். இந்த மனிதர்களைப் போன்ற மிருகத்தனமுள்ள பிராணியை இந்தக் காட்டிலே நான் கண்டதேயில்லை."

இந்தச் சமயத்தில் ஒரு கூக்குரல் கேட்டது. மானும் எருதும் என்னவென்று பார்த்தன. ஒரு குழந்தையைச் சில தாடிக்காரர்கள் கொல்லப் போனார்கள். இரங்க வேண்டுமென்று அவர்களுக்கு முன் மண்டியிட்டுக் கெஞ்சிக்கொண் டிருந்தது அது. சிங்கமும் யானையும் வெளிப்பட்டு அந்த மனிதர்கள் மேல் பாய்ந்தன. மறுகணத்தில் அந்தத் தாடிக்காரப் படுபாவிகள் அங்கே பிணமாய் விழுந்தார்கள்.

மறுபடியும் காட்டில் மிருகங்கள் கூடின; சிங்கம் தலைமை வகித்தது.

"என்ன கஜஸ்வாமி, இப்போது உம்முடைய எஜமானனைப் பற்றி

என்ன சொல்லுகிறீர்?'' என்று கேட்டது சிங்கம்.

"மனிதன் பகுத்தறிவை இழந்து விட்டான் என்பதில் சந்தேகமே இல்லை. அவன் பூண்டோடு மறைந்து போகும் தருணம் வந்து விட்டது. அவனுடைய தொல்லையி லிருந்து நாம் விடுபடுவோம் என்று சந்தோஷிக்கலாம்.''

"கேளுங்கள், கேளுங்கள்!'' என்று எல்லா மிருகங்களும் ஒரே குரலாக ஆரவாரம் செய்தன.

சிங்கம் வாலையடித்துப் பேசாமல் இருக்கும்படி குறிப்பிக்கவே, யாவும் அமைதியாக நிமிர்ந்து உட்கார்ந்து கேட்கலாயின.

"இன்று நமக்கு விடுதலைத் திரு நாள். நாம் இதைக் கொண்டாடு வோம். மனிதர் ஒருவரை ஒருவர் கொல்கிறார்களே; அப்படி யல்ல. நம்முடைய பழைய விரோதியாகிய மனிதனைக்கூட நாம் மன்னித்துவிடுவோம். அவன் தூர எறிந்துவிட்ட பகுத்தறிவு என்ற ஆயுதத்தை நாம் கைப்பற்றி ஒருவரோடு ஒருவர் இணைந்து அமைதியாக வாழ்வோம். நம்மைக் கண்டு நாணமடைந்து, அவன் நல் லறிவு பெற வேண்டும்.''

அத்தருணம் பாதையிலிருந்து மறுபடியும் கூக்குரல் கேட்டது. இந்தத் தடவை கதறினவர்கள் தாடிக்காரர்களும் அவர்களைச் சேர்ந்த பெண்களும் குழந்தைகளும். அவர்கள் கூட்டமாகப் போய்க் கொண்டிருக்க வேறு ஒரு கூட்டத் தார் "அல்லாஹோ அக்பர்!'' என்று கத்திக்கொண்டு அவர்களைத் துரத்திக் கொன்று கொன்று குவித் தார்கள்; இரக்கமில்லாமல் கொன் றார்கள்.

"மனிதனுக்குப் பிடித்திருக்கும் வெறியைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். அவன் எக்கேடு கெட் டாலும் கெடட்டும். நாம் விடுதலை யடைந்திருக்கிறோம்; அதற்காகக் குதூகலமாக இருப்போம்'' என் றது சிங்கம்.

பிறகு நெடுந்தூரத்திலிருந்து இனிய கீத ஒலி எழுந்தது. உயிரை உருக்கும் இந்தத் தெய்வகீதம் மனி தன் காதில் ஏறவில்லை. அவன் தன் இனத்தைக் கொலை செய்துகொண் டிருந்தான். மிருகங்களின் பெருங் கூட்டத்திலிருந்த நாகம் தன் படத் தை எடுத்து உல்லாசமாக ஆடியது. மற்றப் பிராணிகளுக்கும் ஆனந்த வெறி மூண்டது.

பிரம்மாண்டமான யானை கூத்தா டிப் பாடியது. சிங்கம் கர்ஜித்தது; மாடு முழங்கியது; குதிரை கனைத் தது; கழுதை எக்காளம் ஊதியது; எல்லா விலங்குகளும் தங்களுக்குள் இருந்த பழைய சண்டைகளையெல் லாம் மறந்து நாகத்தைச் சுற்றிச் சுற்றிக் கொண்டாடின.

கீதத்தின் இன்னொலி ஒலித்துக் கொண்டிருக்கச் சாந்தியும் அன்பும் கலந்த உணர்ச்சியிலே விளைந்த ஆனந்த வெறியாலே எல் லாம் கூத்தாடின; பிறகு சிறு குழந் தையைப்போல் தமக்குப் பிறர் துன் பியற்றுவார்கள் என்ற நினைவேயில் லாமல் சுகமாகத் தூங்கின. சாந்தி யும் ஆனந்தமும் அவ்விடத்தைக் கவிந்து கொண்டன; தெய்வ லோகத்தின் இன்னருள் அங்கே நிலவியது.

மனிதன் புதருக்குப் பின்னால் ஒண்டிக் கொண்டு பார்த்தான். தானே உண்டாக்கிக்கொண்ட பயங் கரமான நிலையிலிருந்து பார்த்தான். தன் நிலையை உணர்ந்து உள்ளம் சாம்பினான்; கூசினான். பிறகு சிறிது நிதான புத்தி அவனுக்கு உண்டாயிற்று.

தென்னிந்தியாவின் கலைச் செல்வம் மிக மிகப் பழமையானது ; இதோ அதற்கு அத்தாட்சி.

கண்டெடுத்த விக்கிரகங்கள்

விரஜநாத கடக்

தென்னிந்தியாவில் முதல் முதலில் விக்கிரகங்கள் எப்போது தோன்றின என்ற கால நிர்ணய வேலை மிகவும் கடினமாயிருக்கிறது. பெரும்பாலான விக்கிரகங்கள், சோழர்கள் அரசாண்ட காலத்தில் ஏற்பட்டவை. கலைச் சுவை நிறைந்திருப்பவை யெல்லாம் மிகப் பழமையான விக்கிரகங்களேயாகும் என்கிறார் ஸ்ரீ ஆனந்தகுமாரசுவாமி. ஆனால், கலைச் சுவையைக் கொண்டு கால நிர்ணயம் செய்ய முடியாது. கலைச் சுவை காலத்தையெல்லாம் கடந்த ஒன்றாகும்.

அமைப்பில் காணும் பழமையான அம்சங்களைக்கொண்டே பழமையை நிர்ணயிக்க வேண்டும். திரட்சியான உருவமும் வார்க்க எளிதான காத்திரமும் உள்ளவையே பழமையான விக்கிரகங்கள்.

பித்தளையிலும் பிற உலோகங்களிலும் விக்கிரகங்கள் வார்க்கும் கலை, சோழமன்னர்களின் காலத்துக்கு முந்தியே செழிப்பாக இருந்திருக்கிறது. பல்லவர்கள் அரசாண்ட காஞ்சீபுரத்தை ஆதொண்டைச் சோழன் படையெடுத்து வென்றதுபற்றிப் புராண வரலாறு ஒன்று உண்டு. ஒரு செப்பு வாசற்படியையே சோழன் தன் வெற்றிக்கு அடையாளமாகப் பெயர்த்து எடுத்துச் சென்றான் என்று அந்த

1. புத்தவாணியில் அகப்பட்ட புத்தர் விக்கிரகம்.

வரலாறு கூறுகிறது. உலோகங்களை வார்ப்பதில் பல்லவர்களுக்கு விசேஷப் பயிற்சி இருந்தது என்பது இதனால் தெளிவாகிறது. ஆகவே, ஆந்திரர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கிருஷ்ணா கோதாவரிப் பிரதேசத்தில் இந்தக் கலை தெரிந்துதான் இருக்கும். அந்தப் பிரதேசத்தில் 500 வருஷங்களுக்கு மேலாகப் பௌத்தர்களின் கலைகள் கொழித்திருந்தன. விக்கிரக வார்ப்புக் கலையைக் கிருஷ்ணா கோதாவரிப் பிரதேசத்திலிருந்தே பல்லவர்கள் கற்றிருக்க வேண்டும்.

காப்பிரைட்: மாடர்ன் ரிவ்யூ (ஆங்கிலம்; பிப்ரவரி '48),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

2. ஆதிச்சநல்லூரில் அகப்பட்ட பழங் கால விக்கிரகம்.

அமராவதிப் பிரதேசத்தில் புத்த விக்கிரகங்கள் அகப்பட்டிருக்கின் றன. பௌத்தர்களின் காலம் முழுவ திலும் இந்த விக்கிரக வார்ப்புக் கலை நன்ருய்ப் பரவியிருந்திருக்கிறது. ஆகவே, முற்றும் இந்திய முறையில் அமைந்த பழமையான விக்கிரகங்கள் இந்தியாவுக்கு வெகு தூரத்தில் உள்ள ஜாவா, இலங்கை முதலிய அநேக இடங்களில் அகப்பட் டிருக்கின்றன. பிரசித்தமான டாங் வோங் புத்தர் விக்கிரகம் ஜாவாவில் அகப்பட்டது. பா-ஹியன் என்ப வர் இந்தியாவுக்கு வந்து திரும்பிப் போகும்போது இதை எடுத்துக் கொண்டு போனராம். போகிற வழியில் கப்பல் உடைந்து முழுகி விட்டதாம். அமராவதியில் வழங்கி வந்த பாணி இந்த விக்கிரக அமைப் பில் தென்படுகிறது. பெஜவாடா வுக்கு அருகேயுள்ள புத்தவாணி யில் அகப்பட்ட கௌதம புத்தர் (உருவம்-1) விக்கிரகத்துக்குச் சம மாக இருக்கிறது இந்த டாங் வோங் புத்தர் விக்கிரகம்.

புத்தவாணியில் அகப்பட்டிருக் கும் விக்கிரகங்களே, தென்னிந்தியா வின் பழமையான புத்தர் விக்கிரகங் கள். கிருஷ்ண நதியின் வலது கரை யிலிருந்து 20-மைல் தூரத்தில் உள்ள இடம் புத்தவாணி. கி. பி. 639-ஆம் வருஷ வாக்கில் இந்தியா வுக்கு வந்த ஹியுவென் ஸாங் இந்த இடத்துக்கு விஜயம் செய்திருக்கி ருர். தாம் வந்த காலத்தில் 100-பிராம்மணக் கோயில்கள் இங்கே இருந்தன என்றும், ஆனல் புத்தர் கோயில்களோ இருபதே இருபது தாம் இருந்தன என்றும் அவர் கூறுகிருர். இங்கே உள்ள புத்தர் விக்கிரகங்கள் கரடுமுரடாக இருப்ப தால், ஆறும் நூற்ருண்டுக்கும் முந் தியவை என்று தோன்றுகிறது. நிற்கும் விக்கிரகங்கள் ஒன்று அல் லது இரண்டடி உயரம் இருக்கின் றன. வயிறு பருத்து, முகம் திரண்டு, குள்ளமாக இருக்கின்றன. குப்தர் காலத்து மோஸ்தரில் இவற் றின் உடை அமைந்திருக்கிறது.

தென்னிந்தியாவில் அகப்பட் டிருக்கும் விக்கிரகங்கள் அனைத்தி லும் புத்தர் விக்கிரகங்களே மிகவும் பழமையானவை என்று சொல்ல முடியாது. பல விக்கிரகங்கள் பிராம்மண தெய்வ விக்கிரகங்கள்; வேறு வகையான சில விக்கிரகங் களும் இருக்கின்றன. பிற்காலத்தில் ராஜா ராணிகளையும் மகான்களை யுங்கூட விக்கிரகங்களாக வார்த் திருக்கிருர்கள்.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த ஆதிச்சநல்லூரில் முற் றும் வேறு வகையான ஒரு விக்கி ரகம் (உருவம்-2) அகப்பட்டிருக்கி றது. இதன் அமைப்பு விசித்திர மாக இருக்கிறது. இதன் அங்கியும் சல்லடமும் தலை அலங்காரமும் விநோதமாக இருக்கின்றன. இதன் வேலைப்பாடு தேர்ந்ததாக இல்லை. சுத்தமாயில்லாத ஏதோ ஒரு

பழைய உலோகத்தில் இந்தச் சிலை அமைந்திருக்கிறது. சுவர்களின் மேல் அலங்காரமாய் வைக்கும் மண்பொம்மை மாதிரி இருக்கிறது. எந்தத் தென்னிந்தியத் தெய்வமாகவும் இது தோன்ற வில்லை. பெண் உருவந்தான். பூமாதேவியாக இருக்கலாம். பல மதக் கடவுள் வணக்கங்கள் தோன்று முன்பு, பூமாதேவியையே மக்கள் வணங்கியிருக்கலாம். அதைக் குறிப்பிடலாம் ஒருவேளை இந்தச் சிலை. எது எப்படியானாலும், இது ஹிந்துக்களுக்குப் புறம்பான அல்லது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான ஒரு விக்கிரகமாக இருக்க முடியாது.

திருச்சி மலைக் கோட்டைக் கோயிலின் தெற்கு, மேற்கு இரண்டு பக்கங்களிலிருந்தும் பல விக்கிரகங்கள் அகப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலைப் பல்லவ அரசனை முதல் மஹேந்திரவர்மன் அமைத்த தாகச் சொல்லுகிறார்கள். தென்னிந்தியாவின் பழமையான விக்கிர கங்களில், பிராம்மண தெய்வங்களின் விக்கிரகங்கள் அதிகமாக

3. சென்னை மியூஸியத்தில் உள்ள அர்ச்சுன(?) விக்கிரகம்.

4. டிரஷரிவாலா என்பவரிடம் உள்ள சிவகாமசுந்தரி விக்கிரகம்.

இல்லை. உள்ள சில பிராம்மண விக்கிரகங்களும் சைவ மூர்த்தங்களே. முதல் மகேந்திரவர்மனின் காலத்திலிருந்து வளர்ந்து வந்த சைவ சமயத்தால் செப்பு விக்கிரகங்களும் சிலாவிக்கிரகங்களும் தோன்றின. ஒன்பதாம் நூற்றாண்டில் சைவ சமயம் தென்னிந்தியாவில் மிகவும் பரவியது. விக்கிரகங்கள் வார்க்கும் கலையில் புதிய சிறப்பும் அழகும் அப்போது ஏற்பட்டன.

சென்னை மியூஸியத்தில் ஒரு செப்புவிக்கிரகம் (உருவம்-3) இருக்கிறது. இதை அர்ச்சுனன் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அதற்கு எவ்விதச் சான்றும் கிடைக்கவில்லை. இந்த விக்கிரகம் நிற்கும் நிலை மிகவும் கம்பீரமாயிருக்கிறது. இதன் இடது கை ஒடிந்திருக்கிறது. என்றாலும், விற் பிடித்த கைகள் என்று ஊகிக்க இடம் இருக்கிறது. வேலைப்பாட்டிலே அதிக நயமில்லை. ஆனாலும், ஆதிச்சநல்லூர்ச் சிலையைப் போல் இது அவ்வளவு கரடு முரடாயில்லை.

5. லீடன் நகர மியூஸியத்தில் உள்ள உமாமகேசுவர விக்கிரகம்.

அகல விழித்த கண்கள். என்றாலும், அவற்றிலே கருவிழிகளின் குறிப்பு இல்லை. முகம் உருண்டையாக இருக்கிறது. அணிகள் சொற்பம். மடிப்பு விழுந்த கனமான உடை. கழுத்திலே சங்கிலி. காலிலே கனமான வீர வெண்டயம். எல்லாம் ஒன்றோடொன்று இசைவாக இருக்கின்றன.

பி. என். டிரஷரிவாலா என்பவரிடம் சிவகாமசுந்தரி விக்கிரகம் (உருவம்-4) ஒன்று இருக்கிறது. அந்த விக்கிரகம் பல அம்சங்களில் சிறப்புற்றிருக்கிறது. அகன்ற தோள்கள். கனத்த புஜங்கள். குறுகிய கழுத்து. கரண்ட மகுடம் தரித்த பெரிய தலை. அங்கங்களெல்லாம் உருண்டு திரண்டிருப்பதால், விக்கிரகம் ஓரளவு பழமையான காலத்தைச் சேர்ந்ததே என்று புலனாகிறது. இதன் பற்பல அம்சங்களையும் கவனிக்கும்போது, மாமல்லபுரச் சிற்பங்களின் பாணி இதில் தென்படுகிறது. இந்த விக்கிரகம் எந்த ஐதிகத்தைப் பின்பற்றி அமைந்ததோ அந்த ஐதிகத்தைப் பின்பற்றியே மகாபலிபுரச் சிற்பங்களைச் செதுக்கியிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

லீடன் நகர மியூஸியத்தில் ஒரு சைவ விக்கிரகம் (உருவம்-5) இருக்கிறது. அது ஜாவாவில் கிடைத்த விக்கிரகம். தென்னிந்திய விக்கிரகங்களிலே மிகவும் பழமையான ஒன்று இது. தெலுங்காணம், கிருஷ்ணா நதி முகத்துவாரம் ஆகிய இடங்களிலிருந்தே சைவ சமயம் ஜாவா நாட்டுக்குப் போய்ப் பரவியிருக்கிறது என்பதற்குச் சான்றாகப் பல சிலாசாஸனங்களும் கலைக் குறிப்புக்களும் ஜாவாவில் தென்படுகின்றன. மேலே சொன்ன விக்கிரகம் தென்னிந்தியாவிலிருந்தே ஜாவாவுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. பல்லவர்களின் காலத்தில் சைவ சமயப் பிரசாரம் பலமாய்ப் பரவியிருக்கிறது என்பதற்கு இந்த விக்கிரகம் ஓர் அத்தாட்சியாகும். முதல் மகேந்திரவர்மன் பூர்வத்தில் ஜைனனாக இருந்து பின்னால் சைவ சமயத்துக்கு மாறியவன். அவன் காலத்திலிருந்து, பல்லவர்களின் சைவசமயப் பிரசாரம் பெரிதும் வலுத்தது. திருச்சி மலைக்கோட்டையில் தென்படும் சிலாசாஸனம் ஒன்றில், மகேந்திரவர்மனின் மத மாற்றம் பற்றிய ஒரு குறிப்பு இருக்கிறதாம்.

மேலே குறித்த உமாமகேசுவர விக்கிரகத்தின் பாணியும் சரி, கருத்தும் சரி, விசேஷச் சிறப்பு வாய்ந்தவை. இந்த அம்சங்களில் இதனோடு ஒப்பிடத்தக்க வேறு பழைய விக்கிரகம் எதுவும் இல்லை. உமாதேவியைப் பரமசிவன் தம் தொடைமீது வைத்துக் கொண்டிருக்கிறார் என்ற கருத்துப் புதுமையானது. இதற்கு முந்திய பழைய விக்கிரகங்களிலெல்லாம் சிவபெருமானுக்குச் சிறிது தூரத்தில் தனியாகவே பார்வதி தேவி அமர்ந்திருப்பாள்.

மாடு, குதிரைதான் மருளும் என்பதில்லை;
ரெயில் எஞ்சினுங்கூட மருளுகிறதாம்!

எஞ்சின்களின் விஷமம்

'அதிஜ்யதன்வா'

யுத்தம் மும்முரமாக இருந்த அந்த 1945-ஆம் வருஷம், ஒரு வண்டித் தொடரில் எத்தனை வாகன்களைப் பிணைத்தாலும் அதிகாரிகளுக்குத் திருப்தி ஏற்படுவதாக இல்லை. எங்கள் ரெயில்வேயில், அதவும் எங்கள் வட்டாரத்தில், எஞ்சின்கள் மிகவும் குறைவாக இருந்தன. "ஐயா, இவ்வளவு அதிகச் சுமையை ஏற்றுகிறீர்கள்!" என்று டிரைவர்கள் எவ்வளவு கத்தினாலும், கேட்பார் யாருமில்லை.

விலாஸ்பூரில் நான் ஒரு கூட்ஸ் வண்டியிலே இருந்தேன். அன்று எங்கள் லோகோ ஆபீசர் அங்கே முகாம் போட்டிருந்தார். வண்டி புறப்படும் சமயத்தில் அவருடைய சேவகனும் ஸ்டேஷன் மாஸ்டரும் என்னிடம் ஓடிவந்து ஒரு 'மெமோ'வைக் கொடுத்தார்கள். 'துரையின் வண்டியை இதில் இணைப்பதாக இருந்தால், ஏதாவது ஒரு வாகனை நீக்கிவிடவேண்டும்' என்று அதில் எழுதினேன். துரைக்கு அது சரியென்று படவில்லை. இருக்கும் வாகன்களோடு தம் பெட்டியையும் இணைத்துத்தான் தீரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்.

கொஞ்சமாவது அநுபவம் இருந்தால்தானே நான் சொல்வது அவருக்கு விளங்கப்போகிறது? இந்தத் துரை, பெடரல் பப்ளிக் ஸர்விஸிலிருந்து நேரே லோகோ ஆபீசராக வந்துவிட்டவர். ஐந்தாறு எஞ்சின்களில் நாலைந்து தடவை சுற்றினால் இந்தத் துரைகள் ஆபீசர்களாகி விடுவார்கள்! அவரோடு வாதாடுவதில் பயனில்லை என்று நினைத்து, நான் அவருடைய பெட்டியை வண்டியிலே இணைத்தேன். அவர் ஒய்யாரமாகச் சுருட்டுப் பிடித்தார்; பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் தூக்கத்திலே ஆழ்ந்துவிட்டார்.

விலாஸ்பூரிலிருந்து மூன்று ஸ்டேஷன்கள் தாண்டியதும் வண்டி மிகவும் உயரத்திலே ஏறவேண்டும். ஏற்றம் வந்தது. எஞ்சின் வேகமாக முன்னேறியது. பயர்மானையும் கரி தள்ளுபவர்களையும் நிறையத் தீப் போடச் சொல்லிவிட்டு, நான் நீராவியை ஜாக்கிரதையாக வசப்படுத்தி வைத்திருந்தேன். என்னதான் ஜாக்கிரதையாக இருந்தாலும், மொத்தத்தில் பளு மிகவும் அதிகமாக இருக்கும்போது, வண்டிதான் என்ன செய்யும்? ஏற்றத்தின் நடுவிலே வரும்போது, இடையிலே ஒரு வாகன் சங்கிலி அறுந்துவிட்டது. பின்னால் இருந்த பெட்டிகள் யாவும் பின்னுக்குச் சறுக்கிக்கொண்டு ஓடின. நல்ல வேளையாகத் துர்விபத்து ஏதும் நிகழவில்லை. ஆனால், மறுநாள் காலையில் துரை விழித்தெழுந்து பார்த்தபோது, தாம் புறப்பட்ட இடத்திலேயே இருப்பதைக் கண்டார்! அவருக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது.

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி - அக்டோபர் '47), பம்பாய் 4.

ஆயினும் அவர் ஆபீசுக்குப் போனதும், ஜில்லா ஆபீசர் அவருக்குக் கொடுத்த சூட்டில் இனி இப்படிப்பட்ட உத்தரவுகளே போடுவதில்லை என்று முடிவு கட்டினர்.

ரெயில்வே சிப்பந்திகளுக்குள் டிரைவர்தான் மற்றவர்களைவிட உயர்ந்த சம்பளம் பெறுகிறவன். ஒரு மைலுக்கு அவன் பெறும் ஊதியம் அந்த வண்டித்தொடரிலுள்ள பெட்டிகளின் எண்ணிக்கையைவிட அதிகமானது. அவனுடைய சம்பளம் முழுவதையும் சேர்த்துக் கணக்கிட்டால், ஒரு ஸபார்டினேட் ஆபீசரின் சம்பளத்துக்குச் சமமாக இருக்கும். ஆனால் இந்த வருமானத்துக்காக அவன் படும் தொல்லைகளைச் சொல்லி முடியாது. எஞ்சினை மொத்தமாகப் பார்க்கும்பொழுது அது ஒரு பெரிய நீண்ட குகைபோல இருக்கிறது. ஆனால் அதில் டிரைவரும், பயர்மான்களும், கரி தள்ளுபவர்களும் நிற்பதற்கு ஏழெட்டு அடி அளவுள்ள இடந்தான் இருக்கும். இரண்டு உயரமான சிறு பட்டைகள் இருக்கும். அவற்றில் ஒன்றிலே டிரைவர் உட்காருகிறான். மற்றொன்றிலே மாறி மாறி யாராவது உட்கார்ந்துகொள்ளலாம். ஆனால் இந்தப் பட்டைமேல் யார்தாம் ஆகட்டும், எவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க முடியும்! முன்னால் பூதாகாரமான பாய்லரும், கரிக் குவியலுமாக இருக்கும். இடைவிடாமல் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்துவிட்டு ஒரு ஸ்டேஷனிலே போய் நின்றால், எட்டு மணி நேரந்தான் ஓய்வு. மறுபடி எட்டு அல்லது பன்னிரண்டு மணி நேரம் ஓயாமல் வேலை செய்தால், பிறகு எட்டு மணிநேரம் இளைப்பாறலாம்.

சாதாரண உடல் வலிமையும் மன வலிமையும் உள்ள மனிதன் பாய்லரின் தீயைத் தாங்க முடியாது. நாலாறு மாதம் வேலை செய்துவிட்டு ஓடிப்போகிறவர்கள் பல பேர் உண்டு. அப்படி ஓடிப் போகாமல் வேலையில் நிலைத்திருப்பவர்களுக்கு உடல்நிலை மிகவும் கெட்டுப்போகிறது. இரண்டொருவர் இதனால் அற்பாயுளில் செத்துப் போனதைக்கூட நான் கண்டிருக்கிறேன்.

எஞ்சினிலோ இடம் குறைவு. இரண்டு பக்கமும் திறந்த வெளி. நடுவிலுள்ள அரையடி அகலமுள்ள பட்டையை எடுத்துவிட்டால், கீழே தரைதான் தெரியும். பின்னால் நிரப்பியுள்ள கரியைக் கரிதள்ளுபவனோ பயர்மானோ சுளகுப் பாரையால் எடுத்துப் பாய்லரில் இடைவிடாமல் போட்டுக் கொண்டே இருக்கவேண்டும். எத்தனையோ பயர்மான்களுக்குக் கொப்புளங்கள் கிளம்புவது உண்டு; சிலருக்கு மார்புவலி உண்டாகும்; பலவிதமான சுவாச நோய்களும் பிடித்துக்கொள்ளும். இந்தச் சம்பிரமத்திலே, எஞ்சினுக்கு முன்னுள்ள பகுதிகளுக்கும் சில சமயம் போகவேண்டியிருக்கும். வண்டி ஓடிக்கொண்டிருக்கையில்கூட அப்படிப் போகவேண்டிய சந்தர்ப்பங்கள் நேரும்!

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. 1939-இல் அந்த நிகழ்ச்சி நடந்தது. கரிதள்ளும் சகாராமன் எஞ்சினுடைய முன்பாகத்துக்குப் போயிருந்தான். வண்டி நீரா பாங்க் வளைவிலே திரும்பியது. அவன் எவ்வளவோ கெட்டிக்காரன். அன்று அவனுடைய போதாத காலம்; அவன் தடாலென்று கீழே விழுந்தான். உடனே பிரம்மாண்டமான எஞ்சின் சக்கரங்கள் அவன் மீது உருண்டு ஓடின. விழுந்து

மூச்சுவிடக்கூட அவனுக்கு நேர மில்லே! ஒரு கணத்துக்கு முன்பு அவன் உயிரோடு இருந்தான்; மறுகணம், எவ்வித முன்னெச்சரிக்கையும் இல்லாமலே, அவனுடைய உடல் சுக்குநூருகிச் சிதைந்து போயிற்று! அந்தப் பிணத்தைத் தூக்கிக்கொண்டு நான்தான் அவனுடைய வீட்டுக்குப் போனேன். இளம்பெண்ணுன அவன் மனேவி அன்று புலம்பியதை நினைத்துக் கொண்டால் இன்னமும் எனக்கு மெய் சிலிர்க்கிறது.

எஞ்சின் டிரைவர்களுக்குள்ளே தகராறு வந்துவிட்டாலோ, அவர்கள் இன்னதுதான் செய்வார்கள் என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவருக்கும் அந்தஸ்தும் வேலேத்திட்டமும் விதிக்கப்பட்டிருக்கின்றன; ஆயினும் விதிப்படி நடந்து கொள்வது சிரமமாக இருக்கும். எங்கள் வட்டாரத்துக்குச் சவாண் என்ற ஒரு கிறிஸ்துவ டிரைவர் மாற்றலாகி வந்தான். அவன் வந்த ஒரு மாதத்துக்குள்ளே 'மகா கெட்டவன்' என்ற பெயரைச் சம்பாதித்துக்கொண்டான். அவனேடு வேலே செய்ய பயர்மான் எவனும், கரிதள்ளுபவன் எவனும் தயாராக இல்லே. ஐயா எப்போதும் குடிவெறியிலே மூழ்கியிருப்பார்! எல்லா வேலேயையும் மற்றச் சிப்பந்திகளே செய்ய வேண்டும். இவ்வளவு செய்தும் வசவும் திட்டும், சில சமயம் உதைகளுங்கூட வாங்கிக்கொள்ள வேண்டும். இப்படி எத்தனே நாளேக்கு நடக்கும்? ஒரு நாள் அந்த டிரைவருக்குச் சரியான ஆசாமி கிடைத்தான். டிரைவர் சொன்னபடியெல்லாம் அவன் வேலே செய்துகொண்டே வந்தான். கைலாசபுரம் மலேத் தொடரை வண்டி நெருங்கிய பொழுது, அவன் டிரைவரின் முதகிலே சரியான குத்து விட்டுக் கீழே தள்ளினுன். அந்த டிரைவரின் எலும்புத் துண்டுகளேப் பொறுக்கி எடுத்து வழக்கை ஜோடிக்க, போலீஸ் இலாகாவுக்கு மூன்று வருஷகாலம் பிடித்தது!

இந்தத் தொழிலில் சில வேடிக்கைச் சம்பவங்களும் நடப்பது உண்டு. புனு ஸ்டேஷனில் புதிய மின்சார எஞ்சின்கள் ஏற்பட்ட காலம். ஒரு நாள் ஒரு டிரைவர் எஞ்சினிலிருந்து கீழே இறங்கியதும், எஞ்சின் தானே ஓட ஆரம்பித்துவிட்டது! ஓசை கேட்டு அவன் திரும்பிப் பார்ப்பதற்குள், அது ஐம்பதடி தூரம் போய்விட்டது. 'ஓ ஹோ ஹோ!' என்று கூவிக்கொண்டே அவன் அதன் பின்னுல் ஓடினுன். கூவி என்ன பயன்? அவன் திடுதிடுவென்று இரண்டு மூன்று பாயிண்டுகளே மாற்றிவிட்டுத் தானே ஓடிப்போய் எஞ்சினே நிறுத்தினுன்.

கல்யாண் ஸ்டேஷனிலும் இப்படித்தான் ஓர் எஞ்சின் புறப்பட்டுவிட்டது. அதிகாரிகள் திகைத்துப் போனுர்கள். அவர்கள் வெவ்வேறு பாயிண்டுகளேத் திருப்பியதும், எஞ்சின் நேராக அம்பர்நாத் வழியிலே போயிற்று. நல்ல வேளேயாக அந்தத் தண்டவாளத்தில் அப்பொழுது வேறு வண்டி எதுவும் வரவில்லே. அம்பர்நாத் ஸ்டேஷன் மாஸ்டர் கெட்டிக்காரர். அவர் அந்த எஞ்சினே மின்சாரத் தொடர்பு இல்லாத தண்டவாளத்துக்கு வரும்படி, பாயிண்டைத் திருப்பி வைத்தார். அங்கு வந்ததும், மின்சாரத் தொடர்பு இன்றி அது நின்றது.

டிரைவர்களின் வாழ்க்கை இப்படி அற்புதமும் ஆபத்தும் வேடிக்கையும் சிரமமும் நிரம்பியது.



காந்தி

குழந்தையின் உள்ளம்: வானத்தைச் சுட்டிக்காட்டியபடி பாபு என்னைக் கேட்டார்: "டிக்கன்ஸ் எழுதியுள்ள ஒரு நாவலில் ஒரு குழந்தை வருகிறது. அது தன் தாயிடம் வானத்தைச் சுட்டிக்காட்டி, 'நான் அங்கே போக முடியுமா?' என்று கேட்கிறது. இதை நீங்கள் படித்திருக்கிறீர்களா? அந்தக் குழந்தையைப் போலவே எனக்கும் அதோ அந்த வான மண்டலத்துக்கு யாத்திரை செல்ல ஆசையாயிருக்கிறது" என்றார்!

—ஜே. பி. பி. (ஹரிஜன்)

* * *

வண்டி இல்லாத போது: "ஸ்டேஷனுக்குப் போக வண்டி கிடைக்காததால், இன்னொருக்கு ரெயில் தப்பிவிட்டது" என்று யாரோ சொன்னார். உடனே காந்திஜி, "அவர் நடந்து போவதற்கென்ன?" என்று கோபித்துக்கொண்டார். இது வெறும் மிரட்டல் அல்ல. ஒரு சமயம் ஆந்திர தேசத்தில் காந்திஜி பிரயாணம் செய்தபோது நடந்த ஒரு விஷயம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. எங்கள் மோட்டார் வண்டியில் பெட்ரோல் தீர்ந்துவிட்டது. இதைக் கண்ட அவர், "நம் காகிதக்கட்டுக்களையும் சொற்ப மூட்டை முடிச்சையும் எடுத்துக்கொண்டு தயாராக இரு. பதின் மூன்று மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள அடுத்த ஸ்டேஷனுக்கு என்னுடன் நீ நடந்துவர வேண்டும்" என்றார்.

—பியாரேலால் (ஹரிஜன்)

* * *

தேவையில்லாத கேள்வி: 1917-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது பெஸண்ட், அருண்டேல், வாடியா மூவரையும் கோயம்புத்தூரில் பந்தோபஸ்துக் கைதிகளாக வைத்துவிட்டார்கள். மிதவாதி பி. எஸ். சர்மாவின் தலைமையில் சென்னை மகாஜன சபாவில் ஒரு கூட்டம் நடந்தது. சிறைப்பட்ட மூவரையும் விடுவிக்க ஒரு சத்தியாக்கிரகப் போர் நடத்த வேண்டுமென்று காந்திஜியைப் பம்பாயிலிருந்து வரவழைத்திருந்தார்கள். கூட்ட முடிவில், "போராட்டத்தை வெற்றிகரமாய் நடத்துவதற்கு அதம பட்சமாக உங்களுக்கு எவ்வளவு ஆள் பலம் வேண்டும்?" என்று காந்திஜியைச் சர்மா கேட்டார். காந்திஜி புன்சிரிப்புச் சிரித்தார். இயக்கம் நடத்தக் கூடிய ஜனங்கள் நீங்கள் அல்ல. உங்களுக்கு நம்பிக்கையே இல்லையே!" என்றார். முழு உலகமே திரண்டு நின்றாலும் தன்னந்தனியனாய் அதை எதிர்க்கத் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையுள்ளவனே சத்தியாக்

வாழ்வும் வாக்கும்

நினைப்பதைச் சொல்லுவார், சொல்லுவதைச் செய்கையில் காட்டுவார் காந்திஜி. அவர் வாழ்வு நமக்கு வழிகாட்டி. அவர் சொல் நமக்கு அமுதம்.

கிரகியாக இருக்க முடியும் என்பது தான் காந்திஜியின் உட்கருத்து.

—வி. கிருஷ்ண ராவ் (ஸ்வதந்திரா)

*　*　*

உலகமே என் குடும்பம்: சம்ஸ்கிருதச் சுலோகங்கள் மிக்க அர்த்த புஷ்டி நிறைந்திருக்கும். கலா சாலை மாணவர்களுக்கெல்லாம் அவற்றைச் சொல்லித் தருகிறார்கள். அந்தச் சுலோகங்களில் ஒன்று வாலிப காந்தியின் மனத்திலே ஆழப் பதிந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனென்றால், அந்தச் சுலோகத்தில் கண்ட லட்சியத்துக்காகத் தம் வாழ்க்கை முழுவதையுமே காந்திஜி அர்ப்பணித்து விட்டார். இதுதான் அந்தச் சுலோகம்:

அயம் நிஜ: பரோ வேதி
கணனா லகுசேதஸாம்;
உதாரசரிதானாம் து
வஸுதைவ குடும்பகம்.

"அற்ப மனசு படைத்தவர்களே ஒருவனைத் தம்மவனென்றும் மற்றொருவனை அயலானென்றும் எண்ணுவார்கள். உதார குணம் உள்ளவர்களோ முழு உலகத்தையுமே தம் குடும்பமென்று மதிப்பார்கள்."

—பாரிடேல் கீத் (மைஸிண்டியா)

*　*　*

கனவு கண்ட இந்தியா: இந்தியாவின் விஸ்தீர்ணம் குறைந்து போனாலும் பரவாயில்லை. அதன் ஆத்மா மட்டும் பரிசுத்தமாக இருந்தால் போதும். இந்தியா அப்போது வீரர்களின் அஹிம்சைக்கு நிலைக்களமாகும்; உலகத்துக்குச் சன்மார்க்கத் தலைவியாகும்; அடிமை நாடுகளுக்கெல்லாம் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும். ஆத்மாவை இழந்து விசாலமாக இருக்கும் இந்தியாவோ, மேல்நாட்டின் காப்பியாகவே இருக்கும்; அப்படியும், அந்த மேல்நாட்டு வல்லரசுகளை எதிர்த்து நிற்கச் சக்தியற்றதாகவே இருக்கும். நான் கனவு காணும் இந்தியா அமையாவிட்டால், எனக்கு உயிர்வாழ ஆசை இல்லை.

—காந்திஜி (ஹரிஜன்)

*　*　*

அபிப்பிராயபேதம்: அபிப்பிராய பேதம் என்றால், பகைமை என்று அர்த்தம் இல்லை. அப்படியானால், நானும் என் மனைவியும் ஜன்ம சத்ருக்களாக இருக்கவேண்டும். உலகம் முழுவதும் தேடினாலும், ஒரே அப்பிராயம் கொண்ட இருவரைக் காண முடியாது. நான் கீதையைப் பின்பற்றுபவன். ஆகையால், மிக நெருங்கிய என் உற்றார் உறவினர்களைப் போலவே, என்னுடன் மாறுபட்டவர்களையும் பாவித்து நான் அன்பு செலுத்துகிறேன்.

—காந்திஜி (மகாத்மாவின் மனம்)

மார்பிலே திரும்பத் திரும்ப வாளைப் பாய்ச்சிக் கொண்டும் மாயாத மாயாவியா இவன்?

கத்தி விளையாட்டு

★

மிரின் டேஜோ என்ற ஒரு டச்சுக்காரன் இருக்கிறான். அவன் தன் உடலில் மற்றொருவனை விட்டு ஒரு வாளைப் பாய்ச்சும்படி செய்து வித்தை காட்டுகிறான். மேற் போக்காக அந்த வாளைப் பாய்ச்சுகிறானோ என்றால், அதில்லை. குடலும் ஈரற் குலையும் உள்ள மேல் வயிற்றிலே, வாளை ஒரு விலாவிலிருந்து மறு விலாவுக்குப் பாய்ச்சுகிறான். மறுபடியும், வலது சுவாசப் பைக்கு அடியில் முன் வயிற்றிலிருந்து முதுகுக்கு அந்த வாளைப் பாய்ச்சுகிறான். 'பதே கெஜட்' என்ற பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையின் மீது, பிரிட்டிஷ் வைத்தியப் பத்திரிகையான 'லான்ஸெட்' இந்த வித்தையைப் பற்றி அபிப்பிராயம் எழுதுகிறது.

வாளைப் பாய்ச்சும் தோழன், மிக்க எச்சரிக்கை எடுத்துக் கொள்ளுகிறான். வித்தையாடியின் வயிற்றில் ஏற்கனவே வாள் பாய்ந்து தழும்பேறிய இடத்தைப் பார்த்து, திரும்பத் திரும்ப அங்கேயே அவன் வாளைப் பாய்ச்சுகிறான். வித்தையாடி முகத்தைச் சிறிது சுளிப்பான்; வேறு ஒன்றும் செய்வதில்லை. வாளைத் திருப்பி இழுத்து எடுக்கும்போது, ரத்தம் வெளி வருவதேயில்லை.

இந்தச் செய்திகளை யாரும் சந்தேகிக்கத் தேவையில்லை. கிட்ட இருந்து பெரிய போட்டோப் படங்கள் எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். மார்புக்கு அடியிலே பாய்ச்சிய வாள் முனை முதுகைத் துளைக்குமுன்பு முதுகுத் தோல் குன்றுபோல் குமிழ்த்து நிற்பதும், துளைக்கும் போது தோல் பிதுங்கி வெளியே நீட்டிக் கொள்வதும், அந்தப் போட்டோப் படங்களிலே தென்படுகின்றன.

முதுகுத்தோலை வாள் முனை துளைக்கும்போது, தோல் குமிழ்ப்பதுதான் வித்தையாடிக்கு வலி கொடுக்கிறது. பிதுங்கிய தோலை மெல்ல உள்ளே தள்ளிவிட்ட பின்பே, தோழன் ஒதுங்கி நிற்கிறான். பிறகு, வித்தையாடி தன் உடலில் பாய்ந்த வாளோடு, ஜனங்களெல்லாம் தன்னைப் பார்க்கும்படி சுற்றிவருகிறான்.

இந்த வேடிக்கையை, இந்தியப் பக்கிரிகள் சிலர் செய்யும் ஒரு சாகஸச் செயலுக்கு இணையாகச் சொல்லலாம். அந்த இந்தியப் பக்கிரிகள், ஒரு கத்தியைத் தங்கள் கழுத்திலே பாய்ச்சிக்கொண்டுவிடுவார்களாம். கழுத்துச் சதையை நன்றாக இழுத்துப் பிடித்துக்கொண்டால், முதுகெலும்புப் பின்னலிலோ, முக்கியமான பிற உறுப்புக்களிலோ படாமலே கத்தியைக் குறுக்கே செலுத்த முடியும்.

மூலம்: ஸயின்ஸ் டைஜஸ்ட் (ஆங்கிலம்: பிப்ரவரி '48), சிக்காகோ, அமெரிக்கா.

டேஜோ செய்யும் சாகஸத்தில், மேல் வயிற்றிலே வாள் பாயும் போது, குடலுக்குப் பின்புறமாக வும் மண்ணீரலுக்கு முன்புறமாகவும் அது நுழைகிறது. பிறகு, முது கெலும்புக்கு முன்புறமாகவும் முக் கிய ரத்தக் குழாய்களில் படாமலும் அது செல்கிறது. கடைசியில், ஈரற் குலைக்கு மேலே குறுக்காக இருக்கும் சதையில் பாய்ந்து, முதுகுத் தோலைத் துளைத்துக்கொண்டு அது வெளிவருகிறது.

'பதே' என்ற பத்திரிகை, இந்த வித்தையைப்பற்றிச் சில நிபுணர் களை அபிப்பிராயம் கேட்டது. அவர் கள் சொன்ன சமாதானத்தையும் அது வெளியிட்டிருக்கிறது. துப்பாக் கிக் குண்டுகளும் இதர ஆயுதங் களும் இப்படியே சில பேருடைய உடம்பில் பாய்ந்து, மென்மை யான உள்ளுறுப்புக்களில் படாமல் சதைப்பற்றான இடங்களின் வழி யாய்ச் சென்று, ஒரு தீங்கும் செய்யா மல் வெளியேறியதுண்டு. இப்ப டிப்பட்ட பத்திரமான பாதை வழி யாக ஒரு வாளைத் திரும்பத் திரும் பச் செலுத்தினால், அந்தப் பாதை யிலே நார்போல் உறுதியான சதை படர்ந்துவிடும். ஆகையால், திரும் பத் திரும்ப இந்த அதிசய வித்தை யைச் செய்வது மேலும் சுலபமாகி விடுகிறது.

தவிரவும், தழும்பேறிய நார் போன்ற சதை படர்ந்து நாளாக நாளாக, அந்தச் சதை ரத்தம் செத்து மரத்துப் போகிறது. டேஜோவின் தோழன் வாளை மிக்க ஜாக்கிரதையாகவே பாய்ச்சுகிறான். அதைப் பார்க்கும்போது, அவன் வழக்கமான ஒரே பாதையிலேயே வாளைச் செலுத்துகிறான் என்று புலப்படுகிறது. வாள் பாய்கிற தோரணையிலிருந்தே, அது தழும்பேறிய சதையான நாரின் வழியாகத்தான் செல்லுகிறதா அல் லது வழி தவறுகிறதா என்பதை அவன் தெரிந்துகொள்ளுகிறான். வாள் சிறிது பிசகினால், அதைச் சமிஞ்ஞை மூலம் தோழனுக்கு வித்தையாடி அறிவித்துவிட முடி யும்.

இதெல்லாம் வாஸ்தவந்தான். வித்தையாடி இப்போது இந்த வித் தையை எப்படிச் செய்கிறான் என்ற ரகஸ்யம் நமக்குச் சுலப மாகப் புரிகிறது. ஆனால், இதை அவன் முதல்முதலில் செய்தானே; அது எப்படி?

கடல்நீரில் பொன் இருக்கிறது; ஒரு மைல் நீளம், அகலம், ஆழமுள்ள நீரில் சுமார் 50 லட்சம் பவுன் மதிப்புள்ள பொன் இருக்கிறதாம். ஆனால் இதைத் தனிப்படுத்தி எடுப்பதற்கு இதைப் போல் ஐந்து மடங்கு செலவு பிடிக்கிறது. ஹேபர் என்ற ஜெர்மானிய விஞ்ஞானி ஒருவர் 1918-இல் இந்தப் பொன்னை எடுக்க முயன்றார். அவர் முயற்சி வெற்றி பெற வில்லை.

—மு. அருணாசலம் (உலோகமும் நாமும்).

* * *

கடவுள் உன்னைப் பார்ப்பது போல, மனிதர்களோடு வாழ்; மனிதர்கள் உன்னைக் கேட்பது போல, கடவுளோடு பேசு.

பிரசவம் என்பது ஓர் இயற்கையான சம்பவம். அதில் வேதனை ஏன்? பயம் எதற்கு?

சுகப் பிரசவம்

ஒரு தாய்

நான் மூன்று குழந்தைகளைப் பெற்றிருக்கிறேன். வலியெடுத்த ஏழு மணி நேரத்தில் முதல் குழந்தையைப் பெற்றேன்; இரண்டு மணி நேரத்தில் இரண்டாவது குழந்தையைப் பெற்றேன்; பதினறு மணி நேரத்தில் மூன்ருவது குழந்தையைப் பெற்றேன்; மூன்ருவது பிரசவமே சுகமான அநுபவம்.

இந்த மூன்ருவது குழந்தை வேண்டுமென்றுதான் நான் ஆசைப்பட்டேன். ஆனல், பிரசவிக்க வேண்டுமே என்று பயப்பட்டேன். என் பயத்துக்குக் காரணம் பிரசவம் அல்ல, மயக்க மருந்துக்கு உட்பட வேண்டுமே என்ற கவலைதான் என்று கண்டுகொண்டேன்.

அந்தச் சமயத்தில் நான் இங்கிலாந்தில் இருந்தேன். உள்ளூர் வைத்தியர் அடிக்கடி வந்து என்னைப் பார்த்துச் சென்ருர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வந்து என் கணவருடன் பேசிக்கொண் டிருந்துவிட்டுப் போவார்.

ஒரு நாள் அவரும் என் கணவரும் இப்படி நட்பு முறையில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த போது, நான் திடீரென்று, "இதோ பாருங்கள், இந்தக் குழந்தையை நான் மயக்க மருந்து இல்லாமலே பிரசவிக்க விரும்புகிறேன்" என்றேன்.

இதைக் கேட்டு அவர்கள் திடுக்கிடுவார்கள் என்று நான் நினைத்தேன். அவர்கள் அப்படித் திடுக்கிடக் காணேம். என் கணவரும் அந்த டாக்டரும் ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்து, "அப்படியே செய்தால் போகிறது" என்கிருர்கள். என் கணவரும் ஒரு டாக்டர்தாம்.

இதிலிருந்து தொடர்ந்த சம்பாஷணையில், டாக்டர் ரீட் என்பவரைப்பற்றிப் பிரஸ்தாபம் வந்தது. 'பயமில்லாத பிரசவம்' என்று ரீட் ஒரு புஸ்தகம் எழுதியிருப்பதாகவும், அது பற்றிய ஒரு மதிப்புரையைத் தாம் படித்ததாகவும், எங்கள் டாக்டர் நண்பர் சொன்னர். என் கணவரும் அந்தப் புஸ்தகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாராம். இந்த ரீட் என்பவரின் புஸ்தகத்தைப் பற்றி இவர்கள் பேசப் பேச எனக்கு ஒரு குதூகலம் உண்டாயிற்று.

பூர்ண கர்ப்பிணியாகும் வரையில் நான் அந்தப் புஸ்தகத்தைத் தேடவில்லை. என் மகளுக்குக் கக்குவான் இருமல் வந்தது. அது என்னையும் ஒட்டிக் கொள்ளாதிருப்பதற்காக என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கே போன மறுநாள், நகரத்தைச் சுற்றிவிட்டு வர அநுமதி பெற்றேன். லைப்ரரிக்குப் போனேன். அந்தப் புஸ்தகம் இருக்கிறதா என்று விசாரித்தேன். இவ்வளவு காலந் தாழ்த்து நான் அந்தப்

காப்பிரைட்: பேரென்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: ஜனவரி '48), 4600, டைவர்ஸி அவென்யூ, சிகாகோ 39, யு. எஸ். ஏ.

புஸ்தகத்தைப் படிப்பதால் என்ன பயன் என்று லைப்ரரி அதிகாரி நினைத்தார். என்றாலும் புஸ்தகத்தை நான் வாங்கிக்கொண்டு திரும்பினேன். படிக்கத் தொடங்கினேன்.

நான் அறிய விரும்பிய விஷயங்களெல்லாம் இதோ இந்தப் புஸ்தகத்தில் இருக்கின்றன! படிக்கப் படிக்கச் சுவாரஸ்யமாயிருந்தது புஸ்தகம். இதைக் கீழே வைக்கவே மனம் வரவில்லை. உடம்பை அலட்டிக்கொள்ளாமல் விசிராந்தியாகப் படுத்துக்கொள்வது எப்படி என்ற அத்தியாயத்துக்கு வந்தேன். முழு ரகஸ்யமும் இதில்தான் இருக்கிறது. இந்த அத்தியாயத்தைப் படித்தவுடனே படுக்கைக்கு ஓடினேன். உடம்பை அலட்டிக் கொள்ளாமல் விசிராந்தியாகப் படுக்கப் பழகினேன். பிரசவம் மூன்று நாள் வரையில் தள்ளிப் போயிற்று. அதற்குள், புஸ்தகத்தில் கண்ட விஷயம் முழுவதையும் மனப்பாடம் செய்துவிட்டேன்.

வலியெடுப்பது இரண்டாவது கட்டம். அது வந்து சேர்ந்தது. குழந்தையின் தலை முட்டுகிறது. அதனால் கூர்மையான வலி யெடுக்கிறது. அரை டஜன் தடவை முதல் ஒரு டஜன் தடவை வரையில் குழந்தையின் தலை முட்டுவதுதான் வழக்கம். உடம்பைச் சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் முற்றும் விசிராந்தியாக நான் படுத்திருந்ததால் இருபது தடவை குழந்தையின் தலை முட்டியதை நான் எண்ணினேன். இதில் சுமார் ஐந்து மணி நேரம் கழிந்தது. குழந்தை சரியான நிலையில் இல்லாமல் பிசகித் திரும்பியிருந்தது என்பது பின்னால்தான் எனக்குத் தெரிந்தது. என்றாலும், நான் முற்றும் விசிராந்தியாகப் படுத்திருந்ததால், அதிகக் கெடுதி நேரவில்லை. நான் மூச்சடக்கி முக்க முக்க, வலியெல்லாம் பறந்துவிட்டது. கர்ப்பப்பை சுருங்கச் சுருங்க வயிற்றைச் சுருட்டியது. என்றாலும், நான் அது போகிற வழியில் போகட்டும் என்று விட்டுவிட்டதால், சற்றும் வலியில்லை.

எல்லாம் இப்படிச் சௌகரியமாய் நடந்துகொண்டிருந்த போது, "மயக்க மருந்து வேண்டுமா?" என்று டாக்டர் என்னைக் கேட்டார். "இப்போது வேண்டாம்" என்று நான் பதில் சொன்னேன். எல்லாம் சௌகரியமாக இருக்கும்போது, அந்த அருவருக்கத்தக்க மயக்க மருந்து எதற்காக?

குழந்தை கீழ் நோக்கி அமுக்குவதை நிறுத்த வேண்டுமானால், தாராளமாய்ப் பெருமூச்சு விடவேண்டும் என்று புஸ்தகத்தில் கண்டிருக்கிறது. இந்த யுக்தியை நான் பின்பற்றியதால், சாவதானமாகச் சிரோதயம் ஆயிற்று.

"எல்லாம் சரியாயிருக்கிறதா?" என்று உடனே நான் கூச்சலிட்டேன்.

"மிகவும் சரியாயிருக்கிறது. இதோ தோள்கள் வந்துவிட்டன. பேஷ். இனி நாம் எடுத்துவிடலாம்" என்றார் டாக்டர்.

குழந்தை பிறந்துவிட்டது. பிறந்த நிமிஷத்திலே அழவும் அழுதது. ஆஹா! என்ன நேர்த்தியாக இருந்தது அந்தக் குரல்! அந்த மாதிரி குரலை நீங்கள் கேட்டிருக்கவே மாட்டீர்கள்.

முழங்கையை ஊன்றி நிமிர்ந்தபடி இருந்த நான், "என்ன குழந்தை?" என்று கேட்டேன்.

"ஆண் குழந்தை" என்றாள் நர்ஸ்.

அடுத்த நிமிஷத்தில், குழந்தையை நான் பார்த்தேன். கர்ப்பப்பையிலிருந்து வெளிவந்தபடியே

இருந்தது குழந்தை. குழந்தையைச் சுத்தப் படுத்திக்கொண் டிருந்த அவர்கள், நான் பார்ப்பதற்காக ஒரு கம்பளிப் போர்வையிலே அதைச் சுற்றியிருந்தார்கள்.

நான் முற்றும் சௌக்கியமாக இருந்தேன். என் கைகளிலே குழந்தையை நான் வைத்துக்கொண் டிருக்கையில், டாக்டர் என் வயிற்றைப் பரீட்சித்தார். கர்ப்பப்பை அதிவேகமாய்ச் சுருங்கியது. டாக்டர் மகிழ்ச்சி கொண்டார். பிரசவத்துக்குப்பின் எனக்கு ரத்தப் பெருக்கே இல்லை. கரு உறுப்பு ஒழுங்காய்ச் சுருங்கிவிட்டது.

நச்சுக் கொடி வரச் சிறிது நேரமாயிற்று. என்றாலும், அதில் வேதனையே இல்லை. இதற்குள் அவர்கள் குழந்தையை நிறுத்தார்கள். அது ஒன்பது பவுண்டு மூன்றரை அவுன்ஸ் நிறை இருந்தது. இவ்வளவு பெரிய குழந்தையாக இருந்தும், தையல் போட வேண்டிய அவசியம் எனக்கு நேரவில்லை. என் மனத்தை அடக்கி இயற்கையாகப் பிரசவித்ததுதான் இதற்கெல்லாம் காரணம்.

நான் என் அறைக்குத் திரும்பிச் செல்லவேண்டிய நேரம் வந்தது. நான் சுலபமாய் நடந்தே சென்றிருக்க முடியும். இந்தியப் பெண்கள் பிரசவித்தவுடனே, சர்வ சாதாரணமாய் நடந்துவிடுவார்கள் என்று கதையாய்ச் சொல்லுவார்களே; அது ஒன்றும் இப்போது எனக்கு ஆச்சரியமாய்த் தோன்றவில்லை. என் படுக்கையைவிட ஆறு அங்குலம் உயரமான ஒரு டோலியை ஆஸ்பத்திரிச் சிப்பந்திகள் கொண்டு வந்தார்கள். யாருடைய உதவியுமில்லாமல் நான் அதில் தாவி உட்கார்ந்து கொண்டேன். என் அறைக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தேன். டீ குடித்தேன். மெதுவான ரொட்டியைத் தின்றேன். படுத்து உறங்கினேன்.

குழந்தைக்கு நன்றாய்ப் பால் கொடுத்து வளர்த்தேன் என்று சொல்லத் தேவையில்லை. பால் சுரப்பதற்கான பயிற்சிகளை ஒன்பது மாதமாகப் பயின்றிருந்தேன். முதலில் ஒரு பக்கத்தை இரண்டு நிமிஷநேரம் குழந்தை குடிக்க விட்டேன். பின்னால் மெல்ல மெல்ல ஒரு பக்கத்துக்கு ஏழு நிமிஷநேரம் விகிதம் இரு பக்கங்களிலும் அதைக் குடிக்க விட்டேன். பால் நன்றாய்ச் சுரந்துவிட்டது. இந்தத் தடவைதான் புண்ணோ, வெடிப்போ, ரத்தச் சுரப்போ உண்டாகாமல் முதல் முதலாக எனக்குச் சௌகரியமாக இருந்தது. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்ததால், பிரசவ உறுப்புச் சீக்கிரமே சுருங்கிப் பலப்பட்டது.

எனக்குத் துளி அசௌக்கியமும் இல்லை; பலவீனமும் இல்லை. முற்றும் சௌக்கியமாய் இருந்தேன்.

இப்படி இயற்கையான சுகப்பிரசவம் நடக்க வேண்டுமென்று டாக்டர் ரீட் பிரிட்டனிலும் அவருடைய சிஷ்யர்கள் ஐக்கிய அமெரிக்காவிலும் பிரசாரம் செய்து வருகிறார்கள். அது மனத்துக்குச் சந்தோஷம் தருகிறது.

அவர்கள் சொல்வது இதுதான்: கர்ப்பிணியிடம் டாக்டர் செல்ல வேண்டும். பிரசவம் என்பது ஓர் இயற்கையான காரியம் என்று அவளுக்கு அவர் சொல்ல வேண்டும். பிரசவத்தில் வலி இருக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. பிரசவம் ஓர் இயற்கையான காரியம் என்பதைக் கர்ப்பிணி ஒப்புக்கொண்டு நடந்தால், வலியோ, காயமோ இல்லாமல் அவள் பிரசவிக்க முடியும். பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. பயப்படாமலும்,

உடம்பை அலட்டிக் கொள்ளாமலும் இருந்தால், ஒரு கஷ்டமும் இல்லை. பயம் காரணமாக உடம்பை அலட்டிக்கொள்வதால், தேகத்தில் உள்ள ஒரு பகுதிச் சதைகள் மறு பகுதிச் சதைகளின் இயற்கையான இயக்கங்களைத் தடுக்கின்றன. அதனால்தான் வலி உண்டாகிறது. பயத்தால் வலி, வலியால் பயம் என்ற இந்தச் சுழலைக் கர்ப்பிணி ஒழித்துவிடவேண்டும்.

கர்ப்பத்தில் உள்ள குழந்தை வளர்ந்து துள்ளிக் கடைசியில் ஜனிக்கிறது. கர்ப்பத்தின் இந்த ஒவ்வொரு படியிலும் என்ன நடக்கிறது என்ற விஷயத்தை, அடுத்த படியாகக் கர்ப்பிணிக்கு டாக்டர் சொல்ல வேண்டும். பிரசவத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் அவளுக்கு அவர் விளக்கிச் சொல்ல வேண்டும். குழந்தை ஜனிப்பதற்குக் கர்ப்பிணி எப்படி உதவி புரிய முடியும் என்பதையும் அவளுக்கு அவர் விளக்கவேண்டும்.

நீங்கள் கர்ப்பிணியாக இருக்கும் போது, டாக்டர் உங்களிடம் வந்து இப்படிச் சொல்லுவதாக வைத்துக் கொள்ளுங்கள்: "பிரசவத்தின் முதல் கட்டத்தில், நீங்கள் உடம்பை அலட்டிக்கொள்ளாமல் விசிராந்தியாய்ப் படுக்க வேண்டும். அப்படிச் செய்தால் வலியே இராது. இரண்டாவது கட்டத்தில், கொஞ்சம் கடுமையான வலி இருக்கும். நீங்கள் விரும்பினுல், அப்போது உங்களுக்குக் கொஞ்சம் மயக்க மருந்து கொடுப்போம். கடைசிக் கட்டம் மிகவும் சுவாரஸ்யமானது. அப்போது உங்களுக்கு வலி இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சில பெண்களுக்கு மட்டில் அப்போது கொஞ்சம் வலி இருக்கலாம்; ஆனுல் அது தாங்க முடியாத வலியாக இராது. உங்கள் உடம்பை இயற்கையே வெகு சீக்கிரத்தில் பழைய சுகமான நிலைக்குக் கொணர்ந்து வைத்துவிடும். பின்ஞல் ஒரு விதக் கஷ்டமும் இராது. மயக்க மருந்து இல்லாமல் நீங்கள் பிரசவிக்க நாங்கள் உதவிபுரியத் தயாராக இருக்கிறோம். ஆனுல், மயக்க மருந்து வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந்தது."

டாக்டர் இப்படிச் சொல்லுவாரானுல், நீங்கள் என்ன முடிவு செய்வீர்கள்?

◦◦◦○◦◦◦

ஆடுதுறை

திருப்பனந்தாள் மடத்துக்கு ஒரு முறை டாக்டர் உ. வே. சாமிநாதையர் போனபோது, அங்கே அப்போது தலைவராக இருந்தவர் சொக்கலிங்கத் தம்பிரான், அவர் ஐயரை உபசரித்து வரவேற்ருர். ஆடுதுறை ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தம்பிரான் வண்டி அனுப்பியிருந்தார். அங்கிருந்து ரஸ்தாவில் ஏழெட்டு மைல் திருப்பனந்தாளுக்கு வரவேண்டும்.

"பிரயாணம் சௌகரியமாக இருந்ததா?" என்று தம்பிரான் கேட்டார்.

"ரெயிலில் சௌகரியமாகத்தான் இருந்தது. இங்கே வருவதற்குள் வண்டி ஒரே ஆட்டம். ரஸ்தா மோசம்!" என்ருர் ஐயர்.

"ஆடுதுறை அல்லவா?" என்று தம்பிரான் சாதுரியமாகச் சொன்னுர்.

கட்டாய ஆசிரியர் சேவை

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி

படித்தவர்களெல்லாம் கட்டாயக் கல்வித் தொண்டு புரிய வேண்டும் என்று ஒரு சட்டம் செய்யலாம் என்ற யோசனை இருந்து வருவதாக இந்திய சர்க்காரின் கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆஜாது சமீபத்தில் தெரிவித்தார். இந்த யோசனையை நம் தலைவர் ராஜாஜி முப்பது வருஷங்களுக்கு முன்பே கூறியிருக்கிறார். முதல் உலக யுத்தம் ஆரம்பிக்குமுன் 1914-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் அவர் எழுதியது இந்தக் கட்டுரை.

மிகப் பெரும்பாலான நாடுகளில் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. தேகவலு உள்ள ஒவ்வொரு பிரஜையும் தங்கள் ராஜாங்க ராணுவத்தில் சில வருஷகாலம் கட்டாய மாகச் சேவை புரிய வேண்டும் என்பதே அந்த வழக்கம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு வெளியே உள்ள நாடுகளில்தான் இந்தக் கட்டாய ராணுவ சேவைச் சட்டம் பலமாகப் பரவியிருக்கிறது. ஒரு பாமர பிரிட்டிஷ்காரன் இதைக் கண்டால், ஆச்சரியப்படுவான்.

இதேபோல, படிக்கும் வயது வந்த குழந்தைகளுக்கெல்லாம் சர்க்கார் கட்டாயமாய்க் கல்வி போதிக்க வேண்டும் என்ற சட்டம் இந்தியாவுக்கு வெளியே உள்ள பல நாடுகளில் பலமாய்ப் பரவியிருக்கிறது. பாமர இந்தியன் இதைக் கண்டால், ஆச்சரியப்படுவான்.

தேசங்கள் ஒன்றுக்கு ஒன்று சகோதரர்களைப் போல வாழக் கற்றுக் கொள்ளாத வரைக்கும் ராணுவம் அவசியமாகும்; ஆகவே கட்டாய ராணுவ சேவையும் நியாயமே என்று சொல்லலாம். இதுவே இப்படியென்றால், தேசம் சந்தோஷமாயிருக்க, சர்க்காரின் கட்டாயக் கல்விப் போதனை இன்னும் அதிக அவசியமும் நியாயமுமாகும். கட்டாய ராணுவ சேவையை ஆட்சேபிப்பவர்கள்கூட, கட்டாயக் கல்விப் போதனையை அவசியம் என்றே ஒப்புக்கொள்கிறார்கள்.

கல்வி நன்றாய்ப் பரவிவிட்ட நாடுகளில், கட்டாயப் போதனை அவசியமில்லை. என்றாலும் அந்த நாடுகளில்கூட விசேஷ எச்சரிக்கையாகக் கட்டாயக் கல்விப் போதனைச் சட்டத்தை இயற்றி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலோ மிகப் பெரும்பாலான மக்கள் அடியோடு பாமரர்களாக இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஒரு நாட்டில், கட்டாயக் கல்விப் போதனை முற்றும் அவசியமாகும். அநாகரிக மக்கள் தங்கள் நாட்டைத் தாங்களே ஆட்சி புரிவார்களானால், தங்கள் நாட்டில் கட்டாயக் கல்விப் போதனைச் சட்டம் இயற்ற வேண்டிய அவசியம் அவர்களுக்குத் தெரியாமல் போகக்கூடும்; ஆனால், நாகரிகத்தில் முதிர்ந்த ஓர் அந்நிய நாட்டின் ஆட்சிக்கு ஒரு பாமர நாடு தெய்வாதீனமாக உட்பட்டிருக்குமானால்,

காப்பிரைட்: அமிர்த பஜார் (ஆங்கிலம்: 11-3-'48),
12, ஆனந்த சட்டர்ஜி லேன், கல்கத்தா.

அந்த நாகரிக சர்க்கார் தன் சொந்த நாகரிகத்தையும் உன்னத அறிவையும் உபயோகித்து, இந்தப் பாமர நாட்டின் மக்களுக்குக் கட்டாயமாய்க் கல்வி போதிக்க வேண்டும். இது அந்த நாகரிக நாட்டின் கடமையாகும்.

இந்தியாவில் சகல மக்களுக்கும் இலவசமாய்க் கட்டாயக் கல்வி போதிப்பதென்றால், அநுபவபூர்வமாக ஒரு கஷ்டம் இருக்கிறது. அப்படிக் கல்வி போதிப்பதற்கு, போதிய அளவு எண்ணிக்கை வாத்தியார்கள் கிடைப்பதில்லை. இதுதான் அந்தக் கஷ்டம். இது பற்றி ஒரு நூதனமான யோசனையைக் கூறுவதுதான், இந்தக் கட்டுரையின் நோக்கம். கட்டாய சேவைக் கொள்கையை ராணுவ விஷயத்தில் அநேகமாக உலகெங்கும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அதே கட்டாய சேவைக் கொள்கையை இன்னொரு தொழிலிலும் அதாவது வாத்தியார் தொழிலிலும் பிரயோகித்தால் என்ன? மூளை வலுவுள்ள ஒவ்வொரு பிரஜையும் தேசத்தின் 'வாத்தியார் சேனை'யில் சில வருஷகாலம் கட்டாயமாகச் சேவை புரிய வேண்டும் என்று சர்க்கார் ஒரு சட்டம் இயற்றிவிடலாம் என்பதே நான் கூறும் யோசனை. ராஜாங்கத்துக்கு உபயோகமான வேறு சேவைகள் புரிவோருக்கு விலக்கு அளிக்கலாம். கட்டாய ராணுவ சேவைச் சட்டத்தைப் பின்பற்றியே இந்தச் சட்டத்தின் உள் விவரங்களைத் தயாரித்துக்கொள்ளலாம். கட்டாய ராணுவ சேவைச் சட்டத்தைவிட இந்தக் கட்டாயக் கல்விச் சேவைச் சட்டத்தை அதிக நியாயமாகவும் சுலபமாகவும் தயாரித்துவிடலாம்.

இதற்கு ஓர் ஆட்சேபம் சொல்லலாம். வாத்தியார் தொழில் புரியும் பொறுப்பைச் சகல பிரஜைகள் மீதும் சுமத்த முடியுமா? அந்தத் தொழிலுக்குப் போதிய தயாரிப்பும் தகுதியும் வேண்டாமா? இவ்விதம் நண்பர்கள் கேட்கலாம். மனிதனுக்குப் போராட்டம் இயற்கை யென்றால், போதனையும் இயற்கைதான். ஒவ்வொரு மனிதனும் அழிவு வேலையில் ஓரளவு நல்ல போர்வீரனாக இருக்க முடியுமென்றால், அவன் ஆக்க வேலையிலும் ஓரளவு நல்ல வாத்தியாராக இருக்க முடியும். இப்படி நான் பதில் சொல்லிவிடலாம். ஆனால், இதைச் சொல்வதோடு நான் நின்றுவிடவில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஞானம் இருக்கவேண்டிய அடிப்படையான விஷயங்களில் போதனைக் கலையும் ஒன்றாகும் என்று நாம் மதிக்க வேண்டும். பாஷை, கணக்கு, மூலாதார விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் போலவே, போதனைக் கலையையும் நம் கலாசாலைகளில் ஒரு கட்டாயப் பாடம் ஆக்கிவிடவேண்டும். இயற்கையைப் பார்ப்போம். பழத்திலே பழங்களை மேலும் பல்கச் செய்ய ஒரு விதை இருக்கிறது. இதேபோல, கலைஞானத்தை வழங்கும் ஒவ்வொரு கல்வித் தானத்திலும், அந்தக் கலைஞானத்தைப் பல்கச் செய்யும் வித்தையையும் கூடவே வழங்க வேண்டும். இல்லையானால், அந்த ஞானம் வியர்த்தமாகும். செகிண்டரிப் பள்ளிப் படிப்பில் தேறும் ஒவ்வொரு மாணாக்கரும் பிறருக்கு ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் முறைகளைக் கற்றவராக இருக்கவேண்டும். சர்வகலாசாலைப் பட்டம் பெறும் ஒவ்வொரு மாணாக்கரும், பிறருக்குக் கல்வி போதிக்கும் கொள்கைகளை மிக நன்றாய் அறிந்

திருக்க வேண்டும்; அப்போதுதான் விதையுள்ள பழம்போல, தாம் பெற்ற கல்வியை அவர் நிரந்தரமாய் நிலைபெறச் செய்ய முடியும்.

கல்வி போதிக்கும் கலையைக் கட்டாயப் பாடம் ஆக்க வேண்டும் என்ற இந்த யோசனையை இன்னொரு முறையில் பார்த்தாலும் இது நியாயமே என்று புலனாகும். ராஜாங்கம் கிடக்கட்டும்; தேசமும் கிடக்கட்டும்; ஒவ்வொருவரின் சொந்தக் குடும்பத்துக்குமே இதனால் நன்மை உண்டு. தம் குழந்தைக்குத் தாமே கொஞ்சம் கல்வி போதிக்காத தந்தையும் உண்டா? தம் குழந்தைகளுக்கு எப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் கிடைத்தாலும் சரி; தாமே குடும்பத்துக்குள்ளே இயன்றவரைக்கும் அவர்களுக்குக் கல்வி போதிக்க ஒவ்வொரு தந்தையும் முயல்கிறார். கல்விமானான ஒவ்வொரு தந்தையும் போதனைக் கலையைப் பயின்றிருந்தால் குடும்பத்துக்கே பெரிய நன்மை அல்லவா? அவர் கற்ற கல்வியும் அழியாத மூலதனமாக இருக்குமே! பழைய அபிப்பிராயங்களை விட முடியாமல் தவிப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு, இந்த யோசனை மிக்க இயற்கையானதென்றே தோன்றும். இதன் மூலம் ஒவ்வொரு பிரஜையும் தம் குழந்தைகளின் கல்விப்பயிற்சியில் தாமே பெரும் பங்கு எடுத்துக்கொள்ளத் தகுதி வாய்ந்த தந்தையாகிவிடுவார். ஆகையால் மெட்ரிகுலேஷன், ஸ்கூல் பைனல் இந்த இரண்டு படிப்பிலும் போதனைக் கலையின் மூலாதார தத்துவங்களைக் கட்டாயப் பாடம் ஆக்க வேண்டும்; இண்டர் மீடியட், பி. ஏ., பி. எஸ். ஸி. ஆகிய சர்வகலாசாலைப் பாடங்களில் போதனைக் கலையின் உயர்தரத் தத்துவங்களைக் கட்டாயப் பாடம் ஆக்க வேண்டும். இதுதான் நான் சொல்லும் யோசனை. போதனைக் கலையை இப்படி அவர்களுக்குக் கட்டாயப் பாடம் ஆக்கிவிட்டால், சர்க்கார் உத்தரவிடும்போது சில வருஷ காலம் கலாசாலைகளில் அவர்கள் சேவை புரிவார்கள்; தங்கள் வீட்டிலேயும் குழந்தைகளுக்குப் போதிப்பார்கள். மேலும், கல்வி கற்ற தந்தைமார் இப்போது தாங்கள் கற்ற கல்வியை யெல்லாம் தங்கள் ஜீவனத்துக்காகப் போராடும் போராட்டத்திலே துருப்பிடிக்க விட்டுவிடுகிறார்களே; இதுபோல் இல்லாமல், போதனைக் கலை பயின்ற தந்தைமார் அனைவரும் தங்கள் கல்வியை அநுபவத்திலே மேற்கண்டவாறு பயன்படுத்தவும் செய்வார்கள்.

நான் எனக்காகப் பிச்சை யெடுப்பதைவிட உயிரை விடுவதையே விரும்புவேன். ஆனால் பிறருக்காகப் பிச்சையெடுப்பதற்கு வெட்கப்படமாட்டேன்.

—கபீர்

* * *

தன் தன் இயற்கையையும் விட்டுக்கொடுத்து இரண்டறக் கலக்கும் நட்பன்றோ சிறந்தது? மஞ்சளும் சுண்ணம்பும் ஒன்றுபட்ட காலத்தில் மஞ்சள் தன் நிறத்தையும் சுண்ணம்பு தன் நிறத்தையும் இழந்துவிடவில்லையா?

—ரஹீம்

நீங்கள் நல்ல வாசகரா? மட்டமான வாசகரா? மட்டத்துக்கு மாற்று என்ன?

வாசகர் எப்படி?

 க்ரேவேனீ லாட்ஜ்

வயது வந்த வாசகர்களில் நூற்றுக்கு அறுபது பேர் மட்டமான வாசகர்களாகவே இருக்கிறார்கள். பல வாசகர்களை ஆராய்ந்த பிரபல நிபுணர்களின் கருத்து இது. மட்டமான வாசகர் என்றால் யார்? மெதுவாகப் படிப்பவரே மட்டமான வாசகர்.

உண்மையிலே வேகமாய்ப் படிக்கக்கூடிய வாசகர், ஒரு நிமிஷத்தில் ஆயிரம் வார்த்தைகளுக்கு மேல் படித்துவிடுகிறார். இது நம்பமுடியாத அதிசயமாய்த் தோன்றும். ஆனால், இதைவிட அதிசயம் இன்னொன்று உண்டு. இதே ஆயிரம் வார்த்தைகளைப் படிக்கப் பத்து நிமிஷம் பிடிக்கக்கூடிய இன்னொரு வாசகரைவிட இந்த வேகமான வாசகரே, தாம் படித்த விஷயத்தில் மிக அதிகமான பகுதியை மனத்திலே கிரகித்துக்கொள்கிறார்.

ஒரு மனிதர் வேகமாய்ப் படிக்க முடிவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவர் வேகமாய்ச் சிந்திக்கக் கூடியவராயிருப்பார்; ஊக்கமும் புதிய விஷயங்களை அறியும் ஆவலும் உள்ளவராயிருப்பார்; அவருடைய கண் பார்வை கூர்மையாயிருக்கும். அவர் நிறைய நிறையப் படிக்கும் பழக்கம் பெற்றிருப்பார். அவருக்கு ஏராளமான வார்த்தைகள் தெரிந்திருக்கும். அவர் நிறையப் படித்திருப்பதால், அவருக்குப் பல விஷயங்களில் பரந்த ஞானம் இருக்கும்.

மெதுவான வாசகரின் குற்றங்கள் யாவை? சொல்லவா வேண்டும்! வேகமான வாசகரின் குணங்களுக்கு நேர் மாறுபட்டவைதாம் இவருடைய குற்றங்கள். இவர் வார்த்தை வார்த்தையாய்ப் படிப்பார்; படித்த ஏடுகளையே திரும்பத் திரும்பப் புரட்டுவார். மெதுவான வாசகர் அத்தனை பேருமே வார்த்தை வார்த்தையாக வாய்விட்டோ மனத்துக்குள்ளோ உச்சரித்துக்கொண்டே தான் படிப்பார்கள்.

நீங்கள் மெதுவான வாசகரா அல்லவா என்பதைத் தெரிந்து கொள்ள இதோ ஒரு சுலபமான பரீட்சை: இந்தப் பாராவை நீங்கள் படிக்கும்போது, உங்கள் உதடுகளை லேசாகத் தொட்டுப் பாருங்கள். உதடுகள் அசைகின்றனவா? அசைந்தால், வார்த்தைகளை நீங்கள் உச்சரிக்கத்தான் உச்சரிக்கிறீர்கள். உதடுகள் அசையாவிட்டால், உங்கள் விரல்களால் லேசாக உங்கள் குரல்வளை நரம்பைத் தொட்டுப் பாருங்கள். அதிலே அதிர்ச்சி தெரிந்தால், இப்போதும் வார்த்தைகளை நீங்கள் உச்சரிக்கத்தான் உச்சரிக்கிறீர்கள்.

இந்தக் குற்றத்தை நீங்கள் எப்படி நீக்கிக்கொள்வது? அதற்கு ஒரே வழிதான் உண்டு. வேகமாய்ப் படிப்பதுதான் அந்த வழி. வேகமாய்ப் படிக்கப் படிக்க, ஒவ்வொரு வார்த்

காப்பிரைட்: ராய்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 9-11-47), புது டில்லி.

தையையும் தனித்தனியே உச்சரிக்க நேரமில்லாமல் போய்விடுகிறது.

இது சரி; படித்த ஏடுகளையே திரும்பவும் புரட்டும் வழக்கத்தைப் போக்கடிக்க என்ன செய்வது? படித்த ஏடுகளையே வாசகர் புரட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? ஆசிரியரின் கருத்தை வாசகர் தெளிவாய்ப் புரிந்துகொள்ளாததாலேயே இப்படி அவர் புரட்டுகிறார். மனத்தைப் பிற விஷயங்களில் சிதற விடாமல், படிக்கும் விஷயத்திலேயே ஆழ்ந்து ஈடுபட்டுப் படிப்பதுதான் திறமையாய்ப் படிக்கும் வழி.

நிறைய நிறைய வார்த்தைகள் தெரியாவிட்டால், வேகமாய்ப் படிக்க முடிவதில்லை. இது மற்றோர் இடையூறு. மிகச் சொற்ப வார்த்தைகளே தெரிந்த ஒரு வாசகர், ஒவ்வொரு வாக்கியத்துக்கும் இடையிலே புது வார்த்தைகள் வரும்போதெல்லாம் நின்று நின்று ஓயாமல் அகராதியைப் பிரித்துப் பார்க்கிறார். வார்த்தைகள் தெரியாத சங்கடத்தைத் தீர்த்துக்கொள்ள உடனுக்குடனே அகராதியைப் பார்த்தாகவேண்டும் என்ற அவசியமில்லை. உங்களுக்குத் தெரியாத ஒரு வார்த்தை இடையிலே வருமானால், அதற்காக நிறுத்தாமல் மேலும் படித்துக்கொண்டே போங்கள். அந்த வார்த்தை பிரயோகிக்கப் பட்டிருக்கும் விதத்திலிருந்தே, அதன் அர்த்தம் பெரும்பாலும் உங்களுக்குத் தெளிவாகி விடக்கூடும். அது தெளிவானாலும் சரி, தெளிவாகாவிட்டாலும் சரி; நீங்கள் தொடங்கிய பாராவைப் படித்து முடிக்கும்வரையில் அகராதியைத் தொடாதீர்கள்.

கடைசியாக, மட்டமான வாசகர்கள் எல்லாருமே விஷய ஞானம் குறைந்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மிகவும் சொற்பமாகப் படிப்பதாலேயே, இவர்களுக்கு விஷய ஞானம் குறைவாக இருக்கிறது. மூளைக்கு ஊட்டம் கொடுக்கும் செய்திப் பத்திரிகைகள், கட்டுரைப் பத்திரிகைகள், புஸ்தகங்கள் ஆகியவற்றை இவர்கள் படிப்பதில்லை. ஆகையால், தற்கால நிகழ்ச்சிகளை இவர்கள் அறிந்து கொள்ள முடியாது. இவர்களுடைய விஷய ஞானமும் குறுகிவிடுகிறது. நீங்கள் எத்தனைக்கு எத்தனை அதிகமாய் வாசிக்கிறீர்களோ அத்தனைக்கு அத்தனை வேகமாய் வாசிப்பது உங்களுக்குச் சுலபமாகும்; எத்தனைக்கு எத்தனை வேகமாய் வாசிக்கிறீர்களோ அத்தனைக்கு அத்தனை உங்கள் வாசிப்பிலே இன்பம் ஏற்படும்.

அப்படியானால், எவ்வளவு வேகமாய் வாசிக்கவேண்டும்? நீங்கள் ஒரு நிமிஷத்தில் 225-வார்த்தைகள் விகிதம் வாசிப்பீர்களானால், அது சராசரி வேகமாகும். ஆனால், வாசிப்பில் உண்மையிலே இன்பம் அடையவேண்டுமானால், இந்த வேகம் போதாது. ஒரு நிமிஷத்தில் 500 வார்த்தைகள் விகிதம் வாசித்தால்தான் வாசிப்பில் இன்பம் ஏற்படும். உங்கள் வாசிப்பு இந்த வேகத்துக்குக் குறைந்திருக்குமானால், அதை நீங்கள் பழக்கத்தால் மிகவும் சுலபமாக அபிவிருத்தி செய்து கொள்ள முடியும். வயது வந்த மக்களில் பெரும்பாலோரும் தங்கள் முயற்சியாலேயே தங்கள் வாசிப்பின் வேகத்தை நூற்றுக்கு முப்பத்தைந்து பங்கு அபிவிருத்தி செய்து கொள்ள முடியும்.

நம் நாக வணக்கத்தை அந்நியர் பரிகசிப்பதே வழக்கம்; இதோ ஓர் ஆங்கிலேயர் என்ன அழகாய் வர்ணிக்கிறார்!

நாக பஞ்சமி

டொனால்டு ஸி. டௌன்ஸெண்ட்

சிராவணத்தின் ஐந்தாவது நாள் நாகபஞ்சமி. அது சர்ப்பத்தைத் தொழும் விரதநாள். வருஷந்தோறும் ஆயிரக் கணக்கான உயிர்களைப் பலி வாங்கும் கொடிய சர்ப்பத்துக்கும் ஒரு பண்டிகையா? எல்லாப் பிராணிகளிலும் இந்தச் சர்ப்பத்தை மட்டும் பூஜிப்பானேன்? சர்ப்பத்திலே ஒரு மகத்தான தத்துவம் அடங்கியிருக்கிறது. அந்த உண்மையை அறியாதவர்களே இந்த நாக வணக்கத்தைத் தூற்றுவார்கள்; மூட நம்பிக்கை என்பார்கள்.

நாகபஞ்சமியன்று எந்தப் பாம்பையும் கொல்லக் கூடாது. கோயில் வாசல்களிலும் குடிசை வாசல்களிலும் நாகராஜன் வந்து பசி தீர்த்துக்கொள்ளக் கிண்ணங்களில் பாலை வார்த்து வைக்கிறார்கள். ஏழைக் குடியானவனும் தொழிலாளியுங் கூட, பால் வார்க்கத் தவறுவதில்லை. அன்று சர்ப்பம் வீட்டுக்குள் வந்தாலும், யாரும் அதை விரட்டுவதில்லை. சர்ப்பம் அந்தப் பால் கிண்ணங்களைச் சுற்றி நெளியும்; நிலைப்படிகளிலே ஊரும். பக்கத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அது அன்று எவரையும் கடிக்காது.

கிருஷ்ணா நதிக்கரையிலே உள்ள வாயி என்ற கிராமம் குதூகலத்திலே ஆழ்ந்தது. பஞ்சமி விசேஷத்துக்கு ஏற்றாற்போல நதி பிரவாகம் எடுத்து ஓடியது. நதியின் நடுவிலே உள்ள மண்டபங்களெல்லாம் அந்தப் பிரவாகத்தில் மூழ்கிவிட்டன. பருவமழை தாரைதாரையாய்ப் பொழிந்துகொண்டிருக்கிறது. பக்தர்கள் புண்யஸ்நானத்துக்காக நதி வெள்ளத்தில் இறங்குகிறார்கள். பிடி அரிசி, கோதுமை, தேங்காய் முதலிய பொருள்களை நதி தேவிக்குக் காணிக்கை செலுத்தாதவர் எவருமில்லை. அவர்கள் தூவிய மலர்கள் சுழன்று சுழன்று வெள்ளத்திலே மிதந்து சென்றன. பக்தர்கள் அந்த மலர்களைத் தம் கையால் விலக்கி ஸ்நானம் செய்து, சிறிது நீரை உள்ளங்கையால் அள்ளிப் பருகினார்கள்.

ஸ்நானத்தை முடித்துக்கொண்ட பக்தன் கோயிலுக்குள் நுழைந்து பூசாரியிடம் தன் காணிக்கையை

காப்பிரைட்; ப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 7-3-'48),
53, ஜெனரல் பாட்டர்ஸ் ரோட், மவுண்ட் ரோட், சென்னை.

வைக்கிறான். ஏழையாயிருந்தாலும் பணக்காரனாயிருந்தாலும் காசோ, பிரஸாதமோ, புஷ்பமோ தன் கையில் கிடைத்ததைச் செலுத்துகிறான். நிமிர்ந்து படம் விரித்துச் சீறிப் பாய்ந்து வருவதுபோலச் செதுக்கிய நாக விக்கிரகம் கோயிலில் காட்சி தருகிறது. ஜனங்கள் போட்ட செவ்வந்தி மாலைகளும், ரோஜா மாலைகளும் அந்த நாக ராஜனை அலங்கரிக்கின்றன. எதிரில் பக்தர்கள் நிவேதனம் செய்த தேங்காய், துளசி, வெற்றிலை பாக்கு, பழம் முதலியவை குவிந்து கிடக்கின்றன. அருகில் தூபங்களிலிருந்து கிளம்பும் சாம்பிராணிப் புகை வளைந்து வளைந்து மேலெழும்பிக் கண்ணை மறைக்கிறது.

பக்தர்கள் மெய் சிலிர்த்துக் கை கூப்பி வணங்குகிறார்கள். அந்த இடத்தை விட்டு அகலும் எவனும் கையில் கிடைத்த காலணாக் காசுக்காவது மஞ்சள் அல்லது சிவப்புக் கயிறு ஒன்றை வாங்கிக் கட்டிக் கொண்டு போகிறான்.

வெளிச் சந்நிதானத்திலே வாத்தியம் முழங்குகிறது. அதன் தாளத்துக்கு ஏற்றவாறு வளையல் குலுங்கும் அழகிய பெண்கள் அருள் பூத்த முகத்துடன் குனிந்தும் நிமிர்ந்தும் நெளிந்தும் வளைந்தும் பாய்ந்தும் அழகாகக் குதித்துப் பாடுகிறார்கள். மருதாணியிட்ட அவர்களுடைய மெல்லிய பாதங்களிலே காப்பும் கொலுசும் கலகலக்கின்றன. கால் விரல்களில் அணிந்துள்ள மெட்டிகள் ஜல்ஜல்லென்று குலுங்கி, பாடும் பாட்டுக்கு இசைய ஒலிக்கின்றன. மோனத்திலிருப்பவர்களைப் போலப் பெண்கள் தம் விசாலமான கண்களைக் குவித்துத் தலை நிமிராமல் ஸரஸ்வதி தேவியைத் துதித்து மங்கள கீதம் இசைக்கிறார்கள். காசிப் பட்டும், ஜரிகைக் கரைப் புடைவையும் உடுத்திருந்த அந்தப் பெண்களின் மெல்லிய சிவந்த பாதங்களில், ஸ்வர்ணமயமான பாதரட்சைகளைப்போலச் சேறு அப்பிக் கொண்டது. அவர்கள் தளதளவென்று அடர்ந்திருக்கும் தங்கள் கூந்தலை நன்றாகச் சீவிக் கழுத்துக்குப் பின்னால் நாகத்தைப் போலச் சுருட்டிக் கட்டியிருந்தார்கள். மூக்கிலே புல்லாக்கும் வைர மூக்குத்தியும் மின்ன, சின்னஞ்சிறு காதுகளில் கல் விழைத்த தொங்கணி ஊசலாட, கழுத்தில் சங்கிலியும் முத்துமாலையும் ஜொலிக்க, கைவளை குலுங்க அவர்கள் ஆடினார்கள். ஆண்களை மயக்கும் நோக்கமின்றி இன்று ஆண்டவனை வழிபடும் அவர்களுடைய ஆடையலங்காரத்தைக் கண்டு சுற்றிலும் சூழ்ந்து வேடிக்கை பார்க்கும் ஏழை எளிய பெண்களின் மனத்திலுங்கூடப் பொறாமை எழவில்லை; பெருமைதான் துலங்கியது.

பிச்சைக்காரர்கள்கூட வெள்ளித் தண்டையும் பொன் வளையலும் அணிந்திருந்தார்கள். இந்தியாவில் பிச்சை எடுப்போர் தாங்கள் சேமிக்கும் பணத்தைப் பாங்கியிலே போடுவதில்லை; நகைநட்டுக்களாகவே வாங்கி அணிந்துகொள்கிறார்கள். இந்த நகைநட்டுக்களுடன் அவர்கள் பிச்சையெடுத்தால், அதற்காக யாரும் அவர்களைக் கோபிக்க மாட்டார்கள். மலைச்சரிவில் நாகம் போல வளைந்து செல்லும் தெருக்களில் திரளான ஜனங்கள் எதிரும் புதிருமாக இடித்துக்கொண்டு செல்கிறார்கள். உயர் குலத்தானும் தாழ்குலத்தானும் வேற்றுமையின்றி நெருங்கி நடக்கிறார்கள். எல்லாரும் நதிக்கரையிலுள்ள கோயில்களுக்கும் கடைகளுக்கும் போய்க் குவிகிறார்கள்.

சிறுவர்கள் ஊதும் குழலோசையும் அடிக்கும் தம்பட்டச் சத்தமும் காதைத் துளைக்கின்றன. அவர்கள் குடைராட்டினத்தில் ஏறிக்கொண்டு, மழைச் சாரலையும் மதியாமல் கையும் காலும் போன மரக் குதிரைகளிலும் ஒட்டகங்களிலும் சவாரி செய்தவண்ணம் சுற்றிச் சுற்றிச் சுழன்றனர்கள்; தொட்டில் ராட்டினத்தில் ஏறிச் சுற்றுப் பக்கத்து ஆற்றின் கரை உயரத்துக்குப் போய், நண்பர்களின் முகத்துக்கு நேராக இறங்கியதும், கூச்சலிட்டு ஆரவாரம் செய்தார்கள். தெரு ஓரத்து வீட்டு வாசல்களில் ஆண்களும் பெண்களும் உட்கார்ந்து, ரோஜா, மல்லிகை, செவ்வந்தி, சண்பகம் முதலிய மலர்களை விற்றுக்கொண்டிருந்தார்கள்.

வாயி என்பது ஒரு புண்ணிய க்ஷேத்திரம். திருவிழாக் காலங்களில் தான் இங்கே ஜனங்கள் கூடுவார்கள். இந்த ஊருக்குக் கோயில்களால்தான் மகிமை. என்றாலும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இங்கே அந்நியோந்நியமாய் வாழ்கிறார்கள்.

மழையின் உக்கிரம் தணிந்தும் சாரல்மட்டும் ஓயவில்லை. நேரம் செல்லச் செல்ல மிட்டாய்ப் பொட்டலங்களைப் பசுக்கள் ருசி பார்த்து விட்டுத் திரிந்தன. ஜவுளிக்கடைகளும் இரும்புக் கடைகளும் பொம்மைக் கடைகளாக மாறி வந்தன. தெருக்கோடி ஹோட்டல்களிலிருந்து கிளம்பும் கிராமபோன் ஓசை நாராசமாக ஒலித்தது. விபூதியணிந்த சாதுக்களும் துறவிகளும் ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்க, அவர்களைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாத பட்டாணியர்களும் மறு பக்கம் தம் லேவாதேவியில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். வாயி கிராமத்தையே இன்று கோலாகலமடையச் செய்த நாக ராஜனை, அவர்கள் அறிந்துகொள்ளவில்லை; அவன் அருளைப் பெறவும் இல்லை.

மழையுடன் கூடவே பொழுதும் இறங்கி வந்தது. காரிருள் கவிந்தது. கோயிலைச் சுற்றிலும் அகல் விளக்குகளின் ஜ்வாலை ஆனந்த தாண்டவமாடியது. நடு இரவுவரையிலும் இங்கேயே கழிக்கவேண்டும் என்று எங்களுக்கு விருப்பமிருந்தும், அதற்கு முன்பே நாங்கள் திரும்ப நேர்ந்தது. ஆற்றங்கரை ஆலமரத்தில் ஆயிரக்கணக்கான மின்மினிப் பூச்சிகள் மின்னி மினுக்கின.

அரைவேஷ்டி மட்டுமே அணிந்த ஒரு மனிதர் எங்கள் அருகில் வந்து நின்றார். "எங்கள் திருவிழாவை நன்றாகப் பார்த்து ஆனந்தம் அடைந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்" என்று கூறினார்.

மேலும் அவர், "ஒளி வீசும் ஒரே ஜோதிக்கு மேலே லட்சக் கணக்கான பொறிகள் மின்னுகின்றன. இத்தகைய சின்னஞ்சிறு பொறிகளில் ஒன்றுதான் நாகபஞ்சமி. இது நமக்குத் தியானவழி காட்டுகிறது. தியானம் செய்து சாந்தியடையுங்கள். மகா சர்ப்பராஜன் உங்களுக்கு வழிகாட்டுவான்" என்று கூறினார். பின்பு அவர் சர்ப்ப ராஜனைத் தொழுது கை கூப்பி அவ்விடத்தை விட்டு அகன்றார்.

கருமுகில்கள் மீண்டும் மழை பொழிந்தன. அந்த மழையிடுக்கிலே, ஆயிரக்கணக்கான சின்னஞ்சிறு தீபங்கள் தெய்வ பலி பீடங்களிலே ஒளி செய்துகொண்டிருந்தன. அவற்றுக்கெல்லாம் அப்பால் மனிதனின் ஸ்தூல அறிவுக்கு எட்டாத ஆத்ம ஞானத்தைப் போதிக்கும் பரம குருவாய், நாக ராஜன் கல்லிலே சுருண்டு படுத்திருந்தான்.

குழந்தைகள் குறும்பு

குழந்தைகளின் சில ரசமான பேச்சு, செயல்களை இங்கே தந்திருக்கிறோம். இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப் படமாட்டா. அவை சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. —ஆசிரியர்.

ஆறுவயது அலமுவின் பெற்றோர் அயலூருக்குப் போக வேண்டியிருந்தது. அலமுவை அடுத்த வீட்டுக்காரர்களிடம் அவர்கள் விட்டு விட்டுப் போனார்கள்.

சாப்பாட்டு நேரத்தில், எல்லாரோடும் அலமுவையும் உட்கார்த்தி வைத்தாள் அடுத்த வீட்டு அம்மாமி. சாதம், வெங்காயச் சாம்பார், உருளைக் கிழங்குக் கறி எல்லாம் வட்டித்தாள். மற்றவரெல்லாம் சாப்பிட்டார்கள். அலமு மட்டிலும் எதையும் தொடாமல், கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

“பெண்ணே, உங்கள் அம்மா உனக்கு என்ன ஆகாரம் போடுகிற வழக்கம்!” என்றாள் அம்மாமி.

“சாதம் போடுவே; ரஸம் ஊத்துவே; மாங்கா போடுவே” என்றாள் அலமு.

அம்மாமி அப்படியே மிக்க அக்கறையோடு, அலமுவின் இலையில் சாதம் வட்டித்து, ரஸம் ஊற்றி, மாங்காயும் போட்டாள்.

அப்போதும் அலமு எதையும் கையால் தொடாமலே உட்கார்ந்திருந்தாள்.

அம்மாமி ஆச்சரியமடைந்து, “என் பெண்ணே, சாப்பிடவில்லை? சாதம், ரஸம், மாங்காய் இவையெல்லாந்தானே உங்கள் அம்மா போடுவாள் என்று சொன்னாய்?” என்று கேட்டாள்.

“ஆமாம். அவ இதெல்லாந்தான் போடுவே. நான் சாப்பிடமாட்டேன்” என்றாள் அலமு.

வீதியிலே ஒரு தந்தை தம் குழந்தையைக் கைப்பிடித்து அழைத்துச் சென்றுகொண்டிருந்தார்.

சிறுவன் பெருமூச்சு விட்டுக்கொண்டு திணறியபடி நடந்தான்.

"ஏண்டா பயலே, ஏன் இப்படி முரண்டு பண்ணுகிறாய்? நான் என்ன அப்படி வேகமாகவா நடக்கிறேன்" என்று அவர் சீறினார்.

"இல்லை, அப்பா. நீங்கள் வேகமாக நடக்கவில்லை, நான் வேகமாக நடக்கிறேன்" என்றான் சிறுவன்!



* * *

வீட்டிலே நான் இல்லாதபோது, ரேடியோப் பெட்டியில் என் மனைவி கைவைத்திருக்கிறாள். அது ரிப்பேர் ஆகிவிட்டது. நான் அவளைக் கண்டபடி கோபித்துக் கொண்டுவிட்டு, பெட்டியைச் சரிப்படுத்தினேன்.

அடுத்த நாள் நான் வீட்டில் இல்லாதபோது, என் ஏழு வயது மகனைப் பார்த்து "ரேடியோவைப் போடடா" என்று என் மனைவி சொல்லியிருக்கிறாள்.

"ஊஹூம்! உனக்குப் பாட்டு வேணுமானா நீ போட்டுக்கோ. எனக்குப் பாட்டு வேண்டாம்" என்றிருக்கிறான் சிறுவன்.

மனைவிக்கு முதலில் விஷயம் புரியவில்லை; பிறகுதான் புரிந்தது.

சிறுவன் குறிப்பிட்டது ரேடியோப் பாட்டை அல்ல; என் 'பாட்டை'!

—ஒரு தந்தை.

* * *

ஒரு நாள் என் குழந்தை பாலுவை வீட்டிலே காணோம்; சமையல் கட்டு, கூடம், ரேழி எங்கும்-வீடு முழுவதும்-தேடிவிட்டேன்.

"சனியன் எங்கேயோ போய்விட்டதே! ஏ பாலு! ஏ பாலு!...எங்கேயடா இருக்கிறாய்? இனி எங்கே தான் உன்னைத் தேடுவது?" என்று பரபரப்புடன் கத்தினேன்.

அப்போது திடீரென்று, "மேசைக்குக் கீழே தேடினையோ? அங்கே பாரேன்" என்று ஒரு குரல் கிளம்பியது. பாலுவின் குரல்! அது அந்த மேஜைக்கு கீழேயிருந்துதான் வந்தது!

—ஒரு தாய்.



எவருக்கும் வாழ்க்கையிலே அபூர்வமான, ஆனந்தமான சம்பவம் கல்யாணம்; அதில்தான் எத்தனை விநோதங்கள்!

கல்யாண வேடிக்கைகள்

பப்பு சீதம்மகாரு

இந்தியாவில் ஒவ்வொரு மாகாணத்திலும் பூர்விகக் குடிகளின் வழக்கங்கள் வேடிக்கையாய் இருக்கின்றன. சமூகத்தில் பல சீர்திருத்தங்கள் நுழைந்த இந்த இருபதாம் நூற்றாண்டிலும், பரம்பரையாக வந்த அந்தக் கொள்கைகள் மாறாமல் இருக்கின்றன. அவை பலதிறப்பட்டவை. சில திருத்த வேண்டியவை; சில ஆச்சரியமானவை.

பஞ்சாபில் வசிக்கும் சில ஹிந்துப் பிரிவினரிடையே மணமகளின் வீட்டுக்கு மணமகன் புறப்பட்டுப் போவான். அந்தச் சமயத்தில் பெண் இருக்கும் அறைக் கதவின் வாயிலில், அவளுடைய பெற்றோர் ஒரு சல்லடையைக் கட்டித் தொங்கவிடுவார்கள். 'சல்லடையில் எத்தனை துளைகள் இருக்கின்றனவோ அத்தனை குறைபாடுகள் பெண்ணிடம் இருக்கலாம்; மணப் பெண்ணுக்கு உள்ள குறைகளைக் குணமாக எடுத்துக் கொண்டு அவளை மணமகன் மணந்து கொள்ள வேண்டும்' என்பதுதான் இந்தச் சல்லடையின் கருத்து. கல்யாண சமயத்தில் தொடரும் பேய் பிசாசுகளின் பிடியிலிருந்து விடுபடும் பொருட்டும், மணப் பெண்ணிடம் உள்ள குற்றங் குறைகளைத் தள்ளி அவளை ஏற்றுக்கொள்வதற்கு அடையாளமாகவும், அந்தச் சல்லடையை மணமகன் ஓர் இரும்பு ஆயுதத்தால் கிழித்துவிடுவான். பிறகே கல்யாணம் நடக்கும்.

இதைத் தவிர அங்கே மற்றொரு சம்பிரதாயமும் முன்னே அமலில் இருந்து வந்ததாம். பிள்ளைக்குக் கல்யாணம் ஆகிவிட்டால் தன் செல்வாக்கு வீட்டில் குறைந்துவிடும் என்று தனக்குக் கிலி பிடித்துவிட்டதாக மணமகனின் தாய் பாவனை செய்வாள். அதனால், தனக்கு வைராக்கியம் பிறந்து உயிரை விட நிச்சயித்துவிட்டது போல் அவள் நடிப்பாள். நேரே கிணற்றுக்குப் போய்க் கிணற்றின் கைபிடிச் சுவர் மேல் ஏறி உட்கார்ந்து கிணற்றுக்குள் காலைத் தொங்கவிட்டுக்கொள்வாள். பிள்ளை வந்து தாயின் அதிகாரத்துக்கு ஒரு குறைவும் வராமல் பார்த்துக்கொள்ளுகிறேனென்று உத்தரவாதம் கொடுப்பான். அதற்கு மேல் அவள் கிணற்றை விட்டு வெளியில் வந்து பிள்ளையின் கூடவே வீட்டுக்குப் போவாள். இந்த விபரீத வழக்கம் படித்தவர்களிடையில் நின்றுவிட்டது.

மலை ஜாதியாரிடையே ஒரு வேடிக்கையான பழக்கம் இருந்து வருகிறது. பண்டிகைகளில் முக்கியமாகச் சித்திரை மாதத்தில் கல்யாண வயது வந்த பெண்களும் பிள்ளைகளும் இரவு முழுவதும் நாட்-

காப்பிரைட்: கிருஹலட்சுமி (தெலுங்கு: 15-1-'48),
கேஸரி குடீரம், ராயப்பேட்டை.

டியம் ஆடுவார்கள். நாட்டியம் ஆடும் சமயத்தில் ஒரு யுவன் தனக்கு இஷ்டமான ஒரு யுவதியை அழைத்துக்கொண்டு எங்கேயாவது ஓடிவிடுவான். இரண்டு மூன்று நாட்கள் வரையிலும் அவர்கள் மறைவாக எங்கேயாவது இருந்து விடுவார்கள். இது ரகஸ்யமாக நடப்பதில்லை; பகிரங்கமாகவே நடக்கிறது. பெண்ணின் பெற்றோர் பெண்ணை அழைத்துக் கொண்டு போன பிள்ளையின் பெற்றோரைக் கண்டு விஷயத்தைத் தெரிவிப்பார்கள். சீர் வரிசைகளுடன் கல்யாணம் பேசி முடிப்பார்கள்.

இந்த ஜாதியினரில் மற்றொரு வகையார் ஆணுக்குச் சுயம்வரம் நடத்துகிறார்கள். ஊரிலே கல்யாண வயது வந்த பெண்களையெல்லாம் ஊருக்குப் புறம்பேயுள்ள காட்டிலே ஓரிடத்தில் கூட்டமாகக் கூட்டி வைப்பார்கள். மணமகனை அங்கே அனுப்புவார்கள். பெண்கள் கூட்டத்தில் அவன் தனக்குப் பிடித்த ஒரு பெண்ணைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு ஓடிப் போய்விடுவான். மற்றப் பெண்கள் எல்லோரும் ஒரு புலி வந்து தங்களில் ஒருத்தியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது என்று கத்துவார்கள். ஊருக்குள் போய்ப் பெண்ணையும் புலியையும் தேடும்படி ஊரில் உள்ள ஆண் பிள்ளைகள் எல்லோரையும் தூண்டுவார்கள். அவர்கள் காட்டுக்குப் போய்ப் பார்த்துவிட்டு, புலியையும் பெண்ணையும் காணோம் என்று திரும்பிவிடுவார்கள். பிறகே அவர்கள் தங்களுக்கு உண்மை தெரிந்தது போல, இருவருடைய பெற்றோரிடமும் போய்க் குறிப்பிட்ட ஓரளவு பணத்தைக் கட்டிக் கல்யாணத்தை நிச்சயிக்கும்படி ஆலோசனை சொல்லுவார்கள். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் அன்பு நீடித்தால் பணம் கட்டுவதாக அவர்கள் ஒப்புக்கொண்டு கல்யாணம் செய்து வைப்பார்கள்.

வால்மீகிகள் என்ற ஹரிஜன வகுப்பாருக்குள் கல்யாணம் நடக்கும் காலத்தில் மணமகன் மணப்பெண்ணைக் காலால் உதைப்பது வழக்கம். பெண் வீட்டுக்குப் பிள்ளைவீட்டார் வந்து இறங்குவார்கள். வந்தவர்களைப் பெண்வீட்டார் உட்கார வைப்பார்கள். மணமகனின் கழுத்தில் மணமகள் ஒரு துணியைச் சுற்றுவாள். அந்தத் துணியுடன் மணமகனைப் பெண் வீட்டார் இழுத்துக்கொண்டு போய் ஒரு மூலையில் ஒளித்து வைப்பார்கள். பிறகு மணப்பெண்ணும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் ஏழுமுறை சுற்றுவார்கள். அப்பால் ஒருவர் தலையை மற்றொருவர் உடம்பில் முட்டுவார்கள். கடைசியில் மணமகன், பெண்ணின் பின்புறத்தில் நின்றுகொண்டு அவளைக் காலால் எட்டி உதைப்பான். அந்தச் சமயத்தில் பந்து மித்திரர்களெல்லாம் மகா உத்சாகம் காட்டுவார்கள். அப்புறம் மணப்பெண், தான் போர்த்திருக்கும் சால்வையால் மணமகனின் கழுத்தைச் சுற்றிக் கட்டுவாள். மணமகனும் மணமகளும் பாடுவார்கள். கடைசியில் மணமகனுடைய தலைப்பாகையை மணமகள் அவிழ்த்துத் தன் சால்வையிலே முடிந்துகொண்டு தன் சம்மதத்தைத் தெரிவிப்பாள்.

சில இடங்களில் மணமகனுடைய தைரியத்தையும் சாமர்த்தியத்தையும் பரீட்சிப்பது உண்டு. பெண் வீட்டார் இருக்கும் தெருவுக்குள் பிள்ளை வீட்டார் நுழையும்போது தெருப்பெண்கள் எல்லோரும் கையில் பிரம்புடன் தெருவின் இரு சிறகிலும் நின்றுகொள்வார்கள். மணமகன் குதிரைமேல் ஏறித் தெருவில் நுழைவான். அப்

போது பெண்கள் எல்லோரும் அவனை அடிப்பார்கள். மண மகன் குதிரையை வேகமாகத் தட்டிவிட்டுத் தப்பி ஓடுவான். குதிரை ஓடும்போது மணமகனின் தலைப்பாகை கீழே விழுந்தால் அப சகுனம்.

கல்யாண சமயத்தில் மணப் பெண்ணுடன் நிற்கும் மணமகனுக் குப் பக்கத்திலிருக்கும் பெண்கள் அவன் முதுகில் ஊசியால் குத்தியும் தலையில் கயிற்றைச் சுற்றியும் வேடிக்கை பார்ப்பார்கள். துணிச் சல் மிகுந்த சில ஸ்திரீகள் பழஞ் செருப்பைச் சிவப்புத் துணியில் சுற்றி மூட்டையாகக் கட்டி ஒருமூலை யில் ஒளித்துவைப்பார்கள். முகூர்த் தம் முடிந்தவுடனே மணமகனைக் கூப்பிட்டு அந்த மூட்டையிலிருப்பது பவித்திரமான ஒரு புஸ்தகமென்று சொல்லி அதை அவன் முத்தமிடச் செய்வார்கள். பின்பு செருப்பை வெளியில் எடுத்து அவனிடம் காட்டி இடி இடியென்று சிரிப் பார்கள்.

சில கிராமங்களில் மணப்பெண், மணமகன் இருவருக்கும் தேங்கா யைக் கொடுத்து அதைத் தின்னச் சொல்வார்கள். தின்று மிகுந்த சக்கையை மணப்பெண்ணும் மண மகனும் ஒருவர்மேல் ஒருவர் துப் பிக்கொள்ளச் செய்வார்கள். மண மகன் வெட்கப்பட்டுத் துப்ப மறுத் தால், எல்லாப் பெண்களும் சேர்ந்து கொண்டு அவனை அடிப்பார்கள்.

சில மலைஜாதியார் தங்கள் முதல் பெண்ணின் கல்யாண காலத்தில் பெண்ணுக்குத் தாயின் வலது கையிலிருந்து மூன்று நான்கு விரல் களைத் தட்டானை விட்டு வெட்டி யெடுக்கச் சொல்லுவார்களாம். கல்யாணப் பெண்ணுக்குத் தாய் இல்லாவிட்டால் இந்தத் துரதிருஷ் டம் மணமகனின் தாய்க்கு நேர்ந்து விடும்.

வேறு சில ஜாதியார் கல்யா ணப் பெண்ணுக்கு ஆசாரம் ஏற்படு வதற்காக முத்திரை சூடுவார்கள். மதகுரு அவளுக்கு இந்த முத்திரை யைச் சூடிவிட்டுப் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் தேங்காய் கொடுத்து ஆசீர்வதிப்பார்.

பொருந்தும் சொல்

[25-ஆம் பக்கத்தில் உள்ள கேள்விக்கு விடை]

1. ங	5. ண, ந	9. வ
2. க, ச	6. த	10. ல
3. ஞ	7. ம, ய	11. ழ
4. ட	8. ப	12. ர, ள

மூன்றுவது தெரு

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஓரிடத்துக்குப் போயிருந்தபோது சிலர் அவருக்கு முன்னால் ஒரு பத்திரம் எழுதினார்கள். அந்த ஊர்த் தெருக்களில் ஒன்றாகிய சுண்ணாம்புக் காரத் தெருவை அந்தப் பத்திரத்தில் குறிக்கவேண்டி யிருந்தது. அதை நீற்றுக்காரத் தெரு என்றும் வழங்குவதுண்டு. பத்திரம் எழுதினவர் பிள்ளையவர்களைப் பார்த்து, "நீற்றுக்காரத் தெரு என்று எழுதுவதா? சுண்ணாம்புக்காரத் தெரு என்று எழுது வதா?" என்று கேட்டார். உடனே பிள்ளையவர்கள், "இரண்டும் வேண்டாம்; மூன்றுவது தெரு என்று எழுதுங்கள்!" என்றார்.

தத்துவதர்சனம் 1

கண்டதே காட்சி

கிருஷ்ணமிச்ரர்

'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற நாஸ்திக வாதம் இன்றுதான் நடக்கிறது என்று எண்ணவேண்டியதில்லை. ஹிந்துக்களின் புராதன தர்சனங்களில் ஒன்றான சார்வாக மதமே அப்படிப்பட்டதுதான். சிந்தனைச் சுதந்தரத்தில் என்றுமே அவ்வளவு நம்பிக்கை நம்மவர்களுக்கு. இதைக் கேலி செய்வதுபோல இதன் சாரத்தைத் தருகிறது 'பிரபோதசந்திரோதயம்' என்ற சம்ஸ்கிருத நாடகம். அதில் உள்ள ஒரு காட்சி இது.

(மஹாமோஹன் என்ற அரசன் தன் பரிவாரங்களுடன் மேடையில் தோன்றுகிறான்.)

மஹாமோஹன்: (சிரித்துக் கொண்டு) ஆச்சரியம்! அறியாமைக்கு அளவே இல்லை. இந்தப் பாமர ஜனங்கள், 'உடம்பையல்லாமல் ஆத்மா என்ற மற்றொன்று இருக்கிறது; அது இவ்வுலகில் செய்த புண்ணிய பாவங்களின் பலனை மறு உலகில் போய் அநுபவிக்கிறது என்று நம்புகிறார்களே! கஷ்டம்! ஆகாயத்தில் முளைத்த மரம் பூத்துக் காய்த்துப் பழுக்கிறதாம்; அதன் பழம் வெகு ருசியாம்; அதைச் சாப்பிட ஆசைப்படுகிறார்களாம் சிலர். அப்படியல்லவா இருக்கிறது இந்த மூட ஜன்மங்களுடைய எண்ணம்? தர்மம், அதர்மம், சொர்க்கம், நரகம் என்று எவையோ சிலவற்றை மனத்தால்கற்பனை செய்துகொண்டு, ஊரை ஏமாற்றுகிறார்கள் இந்த ஆஸ்திகர்கள். எது உள்ளதோ அது இல்லையாம்; எது இல்லையோ அது உள்ளதாம்! ஆஸ்திகர்கள் இப்படிப் பொய் சொல்லி வாதாடி, உண்மை பேசும் நாஸ்திகர்களை உலகத்தோர் ஏசும்படி செய்துவிடுகிறார்கள். உண்மையாகச் சொல்லுகிறேன்: இந்த உடம்பை வெட்டித் துண்டிட்டு உள்ளே இருக்கும் ஆத்மாவைத் தனியாகப் பிரித்தெடுத்துக் காட்ட முடியுமா? அந்த ஆத்மாவை யாராவது பார்த்தது உண்டா? வீணாக வாதம் செய்யும் ஆஸ்திகர்கள் உலகத்தை ஏமாற்றுவது போகட்டும்; அவர்கள் தம்மையுமே ஏமாற்றிக்கொள்கிறார்கள். கை கால் கண் காது முதலிய அங்க அமைப்பெல்லாம் ஒன்றுபோல் இருந்தாலும் மேல் ஜாதி கீழ்ஜாதி என்கிறார்கள். 'இது பிறர் சொத்து, இது நம் சொத்து' என்கிறார்கள். இப்படி எல்லாம் வேற்றுமை காட்டி நியாயம் அநியாயம் என்று கூறிக்கொண்டு, வாழ்வற்றுக் கிடக்கிறார்கள் பாழும் ஆஸ்திகர்கள். உண்மையைக் கூறுகிறேன்: கண்டதே காட்சி என்னும் லோகாயத தத்துவந்தான் உண்மையான சாஸ்திரம்; மற்றவையெல்லாம் சாஸ்திரமல்ல. நாம் நம் புலன்களால் காண்பதே உண்மை. மண், நீர், தீ, காற்று - இந்த நாலு பொருள்களுந்தாம் உள்ளவை. ஆகாயம் என்பது கற்பனை. காணாத

அதை நாம் எப்படி ஒப்புக்கொள்வது? அர்த்தம், காமம் என்ற இரண்டுந்தாம் புருஷார்த்தங்கள். பரலோகம் என்று ஒன்று இல்லை. மரணமே மோட்சம். என்னுடைய இந்தக் கருத்தை ஒட்டியே பிருகஸ்பதி லோகாயத மதத்தை வகுத்துத் தம் சிஷ்யனாகிய சார்வாகனிடம் கொடுத்துப் பிரசாரம் செய்யச் சொன்னார். அந்தச் சாஸ்திரம் வாழையடி வாழையாக உலகில் பரவி வந்திருக்கிறது.

(சார்வாகனும் சிஷ்யனும் வருகிறார்கள்.)

சார்வாகன்: மகனே, கவனித்துக் கேள்: ராஜநீதி ஒன்றுதான் வித்தை. மற்ற வித்தைகளெல்லாம் இதிலேயே அடங்கிவிடுகின்றன. வேதம் என்பது உலகத்தை ஏமாற்றத் துஷ்டர்கள் செய்துவைத்த தந்திரம். இதோ பார்; யாகமும் யாகம் செய்தவனும் அழிந்தபிறகு சொர்க்கம் கிடைக்குமானால், தீப்பற்றி வெந்து சாம்பலான மரங்களிலிருந்து ஏராளமான பழங்களும் உண்டாகலாமே! இவர்கள் யாகத்தில் பசுவைக் கொல்வதால், அந்தப் பசுவுக்குச் சொர்க்கம் கிடைக்கிறதாம். அப்படியானால் யாகம் செய்பவன் தன் தகப்பனையே யாகத்தில் கொன்று சொர்க்கத்துக்கு அனுப்பி விடட்டுமே! செத்தவனுக்குச் சிராத்தத்தால் திருப்தி உண்டாகிறதாம். அது எப்படிச் சாத்தியம்? விளக்கு அணைந்தபிறகு எண்ணெய் விட்டால், விளக்கு எரியுமா?

சிஷ்யன்: ஆசிரியரே, நாம் உண்பதும் உறங்குவதுமே உண்மையானால், ஏன் பல பெரியோர்கள் உலக சுகத்தை வெறுத்துப் பல கொடிய விரதங்களை அநுஷ்டித்துக் கஷ்டப்படுகிறார்கள்?

சார்: துஷ்டர்கள் இயற்றிய வேதத்தை நம்பி ஏமாந்து மனப்பால் குடிக்கிறார்கள் இந்த மூடர்கள். வீட்டில் சுகபோகத்தோடு சுகித்திருப்பது நல்லதா? பட்டினி கிடந்தும் பிச்சையெடுத்தும் கஷ்டப்பட்டு வெயிலிலும் மழையிலுமாகச் சுற்றும் துறவு நல்லதா?

சிஷ்: ஆசிரியரே, இந்த உலகத்தில் துக்கம் கலக்காத இன்பமில்லை. ஆகவே, இதை வெறுத்துப் பேரின்பத்தைத் தேடவேண்டும் என்று அல்லவா அந்தப் பெரியோர்கள் கூறுகிறார்கள்?

சார்: இதெல்லாம் விபரீத புத்தியின் விளைவு. துக்கம் கலந்திருக்கிறது என்பதனால், இந்த உலக இன்பங்களை எப்படி விடமுடியும்? பதர் கலந்திருக்கிறதே என்று நெல்லைத் தள்ளிவிடுகிறோமா?

மஹா: (இவர்கள் பேசுவதைக் கேட்டு) பல நாளாகிவிட்டது, இப்படிப்பட்ட உண்மையான வார்த்தைகளைக் கேட்டு. யார் பேசுகிறார்? (பார்க்கிறான்) அடடே, என் நண்பன் சார்வாகனா?

சார்: (திரும்பிப் பார்த்து) ஓஹோ! நம்முடைய மகாராஜா மஹாமோஹனா? (அருகில் சென்று) அரசே, ஜய விஜயீபவ. இதோ சார்வாகன் தண்டம் சமர்ப்பிக்கிறான்.

மஹா: சார்வாகா, வா. உட்கார்.

சார்: (உட்கார்ந்து) அரசே, என் மூலமாகக் கலிபுருஷன் தங்களுக்குத் தண்டம் சமர்ப்பிக்கிறான்.

மஹா: அப்படியா? நல்லது. அவன் சௌக்கியமா?

சார்: தங்கள் அநுக்கிரகத்தால் எல்லோரும் சௌக்கியம். சகல காரியங்களையும் முடித்துக் கொண்டே அவன் தங்களைத் தரிசிக்க வருவதாக இருக்கிறான்.

மஹா : அவன் காரியங்கள் எது வரையில் நடந்திருக்கின்றன?

சார் : பெரியோர்கள் எல்லோரும் வேத மார்க்கத்தை விட்டுவிட்டு மனம் போன போக்கில் நடக்கத் துணிந்துவிட்டார்கள். இதில் என் திறமை ஒன்றுமில்லை; கலிபுருஷ னின் திறமையும் ஒன்றும் இல்லை. எல்லாம் தங்கள் மகிமையால் தான் நடக்கிறது. வடதேசத்து ஜனங் கள் எல்லாம் வேதத்தை விட்டா யிற்று. அங்கே சாந்தி, பொறுமை முதலிய குணங்கள் மறைந்துவிட் டன. பிற தேசங்களிலும் பிழைப்புக் காகவே வேதத்தை வைத்துக் கொண் டிருக்கிறார்கள். நம் ஆசிரி யர் பிருகஸ்பதியும் அப்படித்தானே கூறுகிறார்? 'அக்னிஹோத்ரம், மூன்று வேதங்கள், காஷாயம் அணி தல், சாம்பல் பூசுதல் இவை எல் லாம், புத்தியும் பலமும் இல்லாத வர்களுடைய பிழைப்புக்காகவே ஏற் பட்டவை' என்றுதானே அவர் சொல்லுகிறார். அது போகட்டும். இப்போது குருக்ஷேத்திரத்தில்ஆத்ம ஞானம் கனவிலும் தலைகாட்டா மல் செய்தாகிவிட்டது.

மஹா : பேஷ்! பெரியகோட்டை யைத் தகர்த்துவிட்டீர்கள்!

சார் : அரசே, சமுகத்துக்கு மற்றொரு விஷயம் தெரிவிக்க வேண்டும்.

மஹா : அது என்ன?

சார் : விஷ்ணுபக்தி என்ற ஒரு பெரிய யோகினி இருக்கிறாளே; அவள் செல்வாக்கைக் கலிபுருஷன் பெரிதும் குறைத்துவிட்டார். அவளுடைய அநுக்கிரகம் பெற்ற வம்சமே எங்கள் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. ஆகவே, தாங் களே அவளை நேரில் கவனித்துக் கொள்ளவேண்டும்.

மஹா : (பயந்து, தனக்குள்) பற் பல அருந் திறமைகளைப் படைத்த வளும், புகழ் பெற்றவளுமான அந்த யோகினியா? அவள் இயற்கையிலே நமக்கு எதிரி ஆயிற்றே! காரியம் கெட்டுவிடப் போகிறது. இருக் கட்டும். (வெளிப்படையாக) அப்பா, கவலை வேண்டாம். காமம், குரோதம் முதலிய சத்துருக்கள் இருக்கும் போது, அவள் எங்கே கிளம்பப் போகிறாள்?

சார் : அப்படி எண்ணலாகாது. பகைவன் சிறியவனா யிருந்தாலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். முள் சிறியதே யானாலும் காலைக் குத்திவிடுவதில்லையா?

மஹா : ஆமாம்; யார் அங்கே?

(வாயில்காப்போன் வருகிறான்)

வாயில்காப்போன் : அரசே, தண்டம். கட்டளையிடவேண்டும்.

மஹா : அடே அசத் சங்கமே, காமம், குரோதம், லோபம், மோ ஹம், மதம், மாத்சர்யம் இந்த எல் லோரிடமும் போய் நீங்கள் தாம் ஜாக்கிரதையாக விஷ்ணு பக்தி யைக் கொல்ல வேண்டும் என்று நான் சொன்னதாகச் சொல்.

வாயி : உத்தரவு. (போகிறான்.)

மஹா : சார்வாகா, போய்வா, காரியங்களைச் சரிவரக் கவனித்துக் கொள்.

சார் : அப்படியே செய்கிறேன், அரசே. (சிஷ்யனோடு போகிறான்.)

அழியாத ஆத்மா

ஜி. பி. ராஜரத்தினம்

உயர்ந்த தத்துவங்கள் அடங்கிய நம் இந்திய நூல் 'உபநிஷத்'. இதைப்போலவே சைன தேசத்தில் 'டாவோ' என்ற ஒரு நூல் இருக்கிறது. அது பண்டைக் காலத்திலிருந்து அங்கே வழங்கி வருகிறது. சுமார் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்பு 'டாவோ' தத்துவங்களை வகுத்து உபதேசித்த பெரியார் லாஓஸே. அவர் சொல்லியும் எழுதியும் வந்த உயர்ந்த கருத்துக்களை அவருடைய சிஷ்யரான குவாங்ஸே என்பவர் ஒரு நூலாக இயற்றி வைத்திருக்கிறார். "மனிதனுக்கு மரணந்தான் அழியாத இன்பத்தையும் சாந்தியையும் கொடுக்கக் கூடியது என்று சொல்லி, அதை விளக்கும் அநேக உபமானங்களையும் அவர் எனக்குக் கூறினார். மனிதவாழ்க்கையிலேயே மரணம் என்பது அற்புதமான சம்பவம் என்று சொன்னார். குரு கூறியதை அவருடைய மொழிகளிலேயே தருகிறேன்" என்று சொல்லி, நூலைத் தொடங்குகிறார் குவாங்ஸே:

ஹிந்துக்களைப் போலவே, ஆத்மாவின் அழியாத்தன்மையில் நம்பிக்கை கொண்டவர்கள் சீனர்கள். அவர்களுடைய புராதன வேதாந்திகளின் சிந்தனைகள் நம் ரிஷிவாக்குகளைப் போலத் தத்துவம் பொதிந்திருக்கும். பிரசித்தி பெற்ற 'டாவோ' சித்தாந்தங்களைச் சுருக்கமாக இங்கே காணலாம்.

"டாவோவின் தத்துவங்கள் மிக்க எளியவைதாம். ஆனால், அவற்றை எல்லாருமே சுலபமாகப் பின்பற்றி நடந்துவிட முடியாது. பக்தியுள்ளவன் டாவோவைப் பற்றிக்கொள்வான்; நடுத்தரமானவன் அதன்படி நடக்க முயலுவான்; ஞானசூன்யன் அதை ஏளனம் செய்வான். டாவோவின் உண்மையை அறிந்தவன் பேசமாட்டான்; அதைப் பற்றிப் பேசுபவன் அதை அறிய மாட்டான். 'டாவோவைக் கரை கண்டுவிட்டேன்' என்று எவனும் இது வரையில் கூறவில்லை. இனியும் கூறப்போவதில்லை.

"ஒரு சமயம், 'வாழ்க்கையில் உள்ள ஆசைகள் வீண் மாயையல்ல என்பது எப்படித் தெரியும்? நம் வீட்டுக்குத்தான் திரும்பிப் போகிறோம் என்று அறியாதவனே மரணத்தைக் கண்டு நடுங்குவான் என்கிறீர்களே; இது எப்படி?' என்று நான் கேட்டபோது, அவர் சில விஷயங்கள் எடுத்துரைத்தார்.

" 'ஐ என்று ஒரு தேசம் இருந்தது. அந்தத் தேசத்துப் பாளையக்காரனின் மகள் தன் புக்ககம் செல்ல வேண்டி வந்தது. கணவன் வீட்டுக்கு மகிழ்ச்சியுடன் செல்ல வேண்டிய மகள், துயரமுற்றுக்

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: தீபாவளி மலர்),
20-ஏ, லால்பாக் ரோட், பெங்களூர்.

கண்ணீர் பெருக்கி எல்லோரையும் துக்கத்தில் ஆழ்த்தினுள். ஆனுல், கணவன் வீடு சேர்ந்து இல் வாழ்க்கை இன்பங்களையும், சுக போகங்களுடன் காத்திருந்த கணவனையும் கண்ட மாத்திரத்திலே அவளுடைய துக்கமெல்லாம் பறந்து போய் மகிழ்ச்சி பொங்கியது. தன் பேதைமையை எண்ணித் தானே வெட்கமுற்ருள். சாவும் அப்படித் தான். சாக மனம் இல்லையானுல் அப்போதும் எதைக் குறித்தும் வருந்த வேண்டியதில்லை; கவலைப் பட வேண்டியதுமில்லை. என் பிறந்தோம் என்றே ஒருவேளை வருத்தம் உண்டாகுமோ என்னவோ, யார் கண்டது?' என்ருர்.''

இந்த விவரங்களைக் கூறும் குவாங்ஸேயைப்பற்றி மற்றெருவர் பின் வருமாறு எழுதுகிருர்: "குவாங்ஸே ஒரு சமயம் குதிரை மீதேறி எங்கேயோ போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு தலை துண்டிக்கப்பட்டு வெயிலில் உருண்டு கிடந்தது. ஆனுலும் அதன் முகம் விகாரம் அடையவில்லை. அவர் குதிரையை விட்டுக் கீழே இறங்கினுர். கையில் இருந்த பிரம்பால் அந்தத் தலையை நகர்த்தி உருட்டி இரண்டு அடியும் அடித்தார். சிரித்துக்கொண்டே, 'என்ன, ஐயா? வாழ்க்கையில் என்ன துராசைகளுக்கு ஆளாகி விவேகமில்லாமல் இந்தக் கதியை அடைந்து தவிக்கிறீர்? அல்லது, செய்யக்கூடாத காரியம் செய்து கத்திக்கு இரையானீரா? பெற்ருேர் மனத்தையும் மனையாளின் மனத்தையும் புண்படுத்தி இந்தக் கதிக்கு வந்தீரா? அல்லது, வாழ்க்கையின் கொடுமை தாங்காமல் உம்மையே தியாகம் செய்து கொண்டீரா? கடவுள் வகுத்த விதி தான் இப்படி மூண்டதா?' என்று பலவாருகக் கேள்வி கேட்டுவிட்டு, அந்தத் தலையைக் கையில் எடுத்துப் பார்த்தார். சிறிது நேரத்துக்குள்ளேயே அதைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்துத் தூங்கிவிட்டார். நடு இரவில் கனவில் அந்தத் தலை அவருடன் பேசியது. பெரிய வேதாந்தியைப் போலப் பேசியது. 'வாழ்க்கையில் நிகழக் கூடிய இவ்வளவு விஷயங்கள் பற்றியும் கேட்டாய் நீ. மரணத்துக்குப் பிறகு இவை பற்றி நமக்குக் கவலையே இல்லை. இரண்டொரு விஷயங்கள் கூறுகிறேன், கேட்கிருயா? கேட்க விருப்பம் உண்டா?' என்றது. 'சொல், கேட்கிறேன்' என்ருர் குவாங்ஸே. தலை சொல்ல ஆரம்பித்தது: 'மரணத்துக்குப் பிறகு, அரசன் ஏழை என்ற வேற்றுமை அற்றுப் போகிறது. எல்லோரும் சமம் ஆகி விடுகிருர்கள். இரவு பகல் இல்லை; ருதுக்கள் இல்லை. எப்போதும் சுகம்; எப்போதும் சாந்தி. மரணத்துக்குப்பின் நாம் அநுபவிக்கும் ஆனந்தம் வேறு எங்குமே கிடைக்காது. இதை நீ உணர்வாயா?' என்றது.

"குவாங்ஸேக்கு இதில் நம்பிக்கை இல்லை. 'உன் பூத உடலை உனக்குத் திரும்பவும் கொடுத்து உன் பழைய வாசனைகளையும் நினைவுகளையும் மூட்டி உன்னை எழுப்பிவிட்டால், நீ மறுபடி வாழ விரும்ப மாட்டாயா?' என்று கேட்டார்.

"இதைக் கேட்டதும் தலைக்குப் பிரமாதமான கோபம் பொங்கிவிட்டது. புருவத்தை நெறித்துக் கொண்டு, 'சாந்தியும் சுகமும் நிறைந்து ததும்பும் இந்த இடத்தை விட்டுத் துயரக்கடலிலே மீண்டும் வந்து விழ யாருக்குத்தான் மனம் வரும்? ஒருகாலும் மாட்டேன்' என்று சொல்லிற்று.

"குவாங்ஸேயின் மனைவி உயிர் துறந்த சமயம். எல்லோரும் துக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். குவாங்ஸேயின் நண்பர் ஹூயிஸே என்பவர், தம் நண்பருக்கு ஆறுதல் கூற வந்தார். குவாங்ஸேயைப் பார்த்ததும், அவர் வியப்படைந்தார். துணைவியை இழந்த குவாங்ஸே சிறிதும் துயரமடையவில்லை. மனைவியின் உடலருகே தரையில் உட்கார்ந்து பாட்டுப் பாடிக்கொண்டிருந்தார். ஒரு பாத்திரத்தைத் தம் கால்களிலே இடுக்கிப் பிடித்துத் தாளம் போட்டுக்கொண்டிருந்தார். 'இதுவரையில் உன் வாழ்க்கைத் துணைவியாக இருந்த ஒருத்தியைக் கண் மூடி மௌனியாகக் கண்டு உன் மனம் துடிக்கவில்லையா? அவளுக்காக நீ இரண்டு துளிக் கண்ணீராவது வடிக்காவிட்டால், அவளுடைய ஆத்மா சாந்தியடையுமா? வயிற்றில் பிறந்த பிள்ளை கண்ணீர் விட்டுக் கதறும்போது, நீ இப்படித் தாளம் போட்டுக்கொண்டு பாடுகிறாயே? என்ன அநியாயம் இது!' என்றார் நண்பர்.

"அதற்கு இப்படிப் பதில் சொன்னார் குவாங்ஸே: 'அப்படி ஒன்றும் இல்லை. அவள் உயிர் நீத்த சமயம் எனக்குச் சங்கடந்தான் உண்டாயிற்று. ஆனால் அவள் பிறப்பதற்கு முன்பு வானத்திலும் காற்றிலும் கலந்து ஆனந்தமாக உலாவிக் கொண்டுதானே இருந்திருப்பாள் என்ற நினைவு வந்தது. அவள் எங்கே எதிலிருந்து வந்தாளோ, அங்கே அதில் இப்போது கலந்துவிட்டாள்; பஞ்சபூதங்களுடன் கலந்துவிட்டாள். இதுதான் மறுபிறப்பு என்ற உண்மை எனக்கு உதயமாயிற்று. எல்லையில்லாத ஆனந்தத்திலே மூழ்கி அவள் சுகித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் நாம் ஏன் அவளுக்காகப் புலம்ப வேண்டும்? அப்படிப் புலம்புகிறவன் இயற்கையின் உண்மையை அறியாதவன் அல்லவோ? இந்த உண்மையை நீயே யோசித்துப் பார்' என்றார்.

"குவாங்ஸே கிழவராகிவிட்டார். அவர் காலமானால் அவருடைய ஈமக் கிரியைகளை எப்படிச் செய்வது என்பது பற்றிச் சிலருக்குக் கவலை உண்டாயிற்று. அவர் உயிர் நீத்தால் அவருடைய பூத உடலுக்கு எல்லா ஸம்ஸ்காரங்களும் மிக்க விமரிசையாகவும் ஆடம்பரமாகவும் நடத்த வேண்டும் என்று அவர்கள் திட்டம் போட்டார்கள். இது குவாங்ஸேயின் காதுக்கு எட்டியது. 'பூமியும் ஆகாயமுமே என் சவப்பெட்டகமும் அதன் மேல்மூடியும். சூரியசந்திரரும் நட்சத்திரங்களுமே என்னைச் சூழ்ந்து வரும் தீபங்கள். மாநிலப் படைப்பு அனைத்துமே என் சமாதிக்கு வரும் பரிவாரம். என் அந்திமக் கிரியைகளுக்கு இப்படிச் சகலமும் சித்தமாகக் காத்திருக்கும்போது நீங்கள் எதற்காகக் கவலைப்படுகிறீர்கள்?' என்றார் குவாங்ஸே.

"அவருடைய சொல்லைக் கேட்டு, அனைவரும் பிரமித்துவிட்டார்கள். 'எங்கள் குருவின் தேகத்தைக் கழுகுக்கும் நரிக்கும் இரையாக்க எங்கள் மனம் ஒப்பவில்லை' என்றார்கள்.

"அதற்கும் அவர் சரியான பதில் அளித்தார். சிரித்துக்கொண்டே, 'நான் பூமிக்கு மேலே கிடந்தால் கழுகுக்கும் நரிக்கும் உணவு; பூமிக்கு அடியில் போனாலோ பூச்சி புழுவுக்கு உணவு. ஆசையோடு இரை தேடி வரும் பிராணிகளிலே ஒன்றின் வாயிலிருந்து பிடுங்கி மற்றொன்றின் வாயில் என்னைத் திணிப்பதில் என்ன சிறப்பு? சொல்லுங்கள்' என்றார்."

ஸேலாயீ என்பவர் மற்றொரு வேதாந்தி. அவர் மரணத் தறுவாயில் இருந்த சமயத்தில், பக்கத்

திலே மனைவி மக்கள் அமர்ந்து அழத் தொடங்கினார்கள். அப்போது அவருடைய நண்பர் ஒருவர் அவரைக் காண வந்தார். அழுதுகொண்டிருந்தவர்களைத் தேற்றி, "நித்தியானந்த நிலையை அடையப் போகிறவருக்கு இடையூறு செய்யாதீர்கள்" என்றார். "தந்தையின் கதி என்ன ஆகுமோ? அவர் மீண்டும் என்ன பிறவி எடுப்பாரோ? எப்படிக் கஷ்டப்படுவாரோ? அவருக்கு மறுபடியும் நல்ல ஜன்மம் கிடைக்க வேண்டுமே?" என்று கவலைப்பட்ட மக்களைப் பார்த்து, படுக்கையிலிருந்த ஸேலாயீ சொன்னார்:

"தந்தை மகனை அழைத்து, 'கிழக்கே போ, வடக்கே போ' என்று எந்தத் திக்கைக் குறிப்பிட்டுச் சொன்னாலும் அந்தத் திக்கிலே செல்ல வேண்டியதுதான் மகனின் கடமை. நான் பிறந்த போதே இயற்கை எனக்கு ஒரு முற்றுப் புள்ளி போட்டு வைத்திருக்கிறது. இன்று அந்தப் புள்ளி நெருங்கி விட்டது. இதற்கு வருத்தப்படுவானேன்? வாழ்நாள் எவ்வளவு அற்பமாக இருந்தால் என்ன? படைத்தவன் கொடுத்த தேகத்தைப் போஷித்து வளர்த்தேன். அதனோடு வாழ்ந்த நாளெல்லாம் உழைத்துப் பிழைத்தேன். உழைப்பால் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. நான் உயிர் துறக்கும் தறுவாயிலும் சாந்தியைப் பெற்றிருக்கிறேன். வாழ்க்கையில் எதை நான் விரும்பினேனோ, எது எனக்குப் பிரியமாக இருந்ததோ, அதுவே இப்போதும் எனக்குப் பலமும் நன்மையும் அளிக்கிறது. ஒருவரும் கவலைப்பட வேண்டாம். எனக்கு வேண்டியதை நான் செய்துகொண்டுவிட்டேன்."

மேலும் அவர் சொன்னார்: "உலோகத்தை உருக்கி வார்ப்பவன் தனக்குத் தேவையான பண்டத்தை வார்த்து எடுத்துக் கொள்ளவே அதை அப்படி உருக்கி வார்க்கிறான். உருகிக்கொண்டிருக்கும் உலோகம், 'என்னைப் பெரிய கத்தியாகப் படைத்துவிடு' என்று சொல்லுமானால், கன்னான் அயர்வு கொள்ளுவான்; இதில் ஏதோ கிரக சேஷ்டையோ சூதோ மாயையோ இருக்கிறதென்று எண்ணிவிடுவான். இதைப் போலவே கருப்பையை அடையப்போகும் ஓர் உயிர், 'நான் மானிடனாக உயர் பிறவிதான் எடுக்கவேண்டும்' என்று சொல்லுமானால், படைப்பவன் திடுக்கிட்டுப் போவான்; அந்த உயிருக்கும் நன்மை உண்டாகாது. ஆண்டவனே ஜீவராசிகளை உருக்கி வார்க்கும் கன்னான்; பூமியும் ஆகாசமுமே அவன் வார்க்கும் அச்சுக்கள். இதை நாம் உணர்ந்தோமானால் நமக்குக் கவலையே இல்லை. நாம் எங்கே சென்றால் என்ன? என்ன ரூபம் கொண்டால் என்ன? எல்லா ரூபங்களும் அந்த அந்தச் சமயத்துக்கு ஏற்றவையாகவே இருக்கும். நம் ரூபத்தைப் பற்றி உண்மையிலே நாம் கவலைப்படுவதும் இல்லை. இருக்கும் ரூபத்தைத்தான் நம்முடையது என்று எண்ணுகிறோம். சாந்தி நிலவும் துயிலினின்று நாம் உருவாகிறோம். மரணத்துக்குப் பிறகும் அதே துயிலிலேயே கலக்கிறோம்."

நகைச்சித்திரம்

"அக்கா, அத்திம்பேருக்கு உன்னை விட என்கிட்டத்தான் அதிகப் பிரீதி. எனக்கு முத்தம் கொடுக்கிறது மாத்திரம் இல்லே; சாக்கலேட்டும் வாங்கிக் கொடுக்கிறார்!"

—வஸந்த்.

கனவான்: என்னப்பா கொடுக்க வேண்டி வரும்?

மெஷின் சொந்தக்காரன்: ரொம்ப இல்லே, எஜமான்! முள் கிரயந் தான் கொடுக்கவேண்டி வரும்.

—வஸந்த்.

*　*　*　*



கேட்ட முத்தம்



கொடுத்த முத்தம்

—ஸ்திரீ.

கணவன்: நாளைக்கே நான் செத்தாலும், உன் கண்ணிலே ஒரு பொட்டுக் கண்ணீர் வராதே.

மனைவி: இந்தாருங்கள்! உங்கள் அநுபவத்திலே பார்த்துவிட்டு எதையும் சொல்லுங்கள்; வீணாய் ஒன்றும் சொல்லாதீர்கள்.

—ஸ்திரீ.



மின்சார விசிறி முதலாளி.

—குறவஞ்சி.



“அடே! ஜல்தி! ஜல்தி! அஞ்சு நிமிஷத்திலே ஸ்டேஷனுக்குப் போகணும்.”

—மனோஹர்.



எலி பிடிக்கும் கருவி வியாபாரம். —வஸந்த்.

சரக்கின் உண்மையைச் சொன்னால் விற்காது என்ற எண்ணம் பலருக்கு உண்டு. அவர்கள் இந்த விசித்திரத்தைப் படிக்கவேண்டும்.

வியாபார யுக்தி

★

வியாபாரம் என்றால் என்ன? வாங்குபவனும் விற்பவனும் ஒருவனை ஒருவன் ஏமாற்ற முயலும் சாமர்த்தியப் போட்டியாகவே, வியாபாரம் உலகெங்கும் நடக்கிறது. சரக்கின் உண்மை நிலவரத்தை வாங்குகிறவனுக்கு விற்பவன் ஒருநாளும் தெரிவிக்க மாட்டான். விற்பவன் தன் சரக்கைப் புகழ்ந்து சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும், வாங்குகிறவனுக்குப் பரம சந்தேகம். இதற்கு நேர் மாறாக அமெரிக்காவில் சில வியாபாரங்கள் நடக்கின்றன.

“இன்று நம் கடையிலுள்ள தக்காளிப் பழங்கள் தானம் வாங்கக் கூடத் தகுதியற்றவை. தக்காளி வேண்டுவோர் நாளைவரைக்கும் காத்திருப்பது நலம்” என்று ஹாலிவுட் கறி காய் மார்க்கட் விளம்பர அதிகாரி விளம்பரம் செய்கிறார்.

இந்த மார்க்கட்டை 1934-ஆம் ஆண்டு ஆரம்பித்தார்கள். பிரெட் பெக் என்பவரே இதன் விளம்பர அதிகாரி. ரேடியோவைத் தமது முதல் விளம்பரத்துக்கு அவர் உபயோகித்துக் கொண்டார். ரேடியோவிலே குடியானவர்களைக் கூப்பிட்டார். “நமது புதிய மார்க்கட்டுக்கு முதல்தரமான சின்னச் சின்னப் பழங்களையும் கறிகாய்களையும் கொண்டுவாருங்கள். நல்ல சரக்குக் கொண்டு வராவிட்டால், உங்களுக்கும் ஒரு கல்தா, உங்கள் கறிகாய்களுக்கும் ஒரு கல்தாக் கிடைக்கும்” என்று சொன்னார். இந்த விளம்பரப் பிரசங்கத்தைக் கேட்ட குடியானவர்கள் தங்கள் தங்கள் முதல் தரமான காய்கறிகளை இந்த மார்க்கட்டுக்குக் கொண்டு வந்தார்கள். இதே பிரசங்கத்தைக் கேட்ட குடித்தனப் பெண்களும் கூட்டங் கூட்டமாய் இங்கே காய்கறி வாங்கவந்தார்கள். சாயங்காலத்துக்குள் ஒரு காய்கறிகூட மிச்சமில்லை; அத்தனையும் விற்றுவிட்டது.

இந்த மார்க்கட்டின் விளம்பர அதிகாரி பெக், அன்று மாதிரியே தான் இன்றும் வெட்டவெளிச்சமாய் விளம்பரம் செய்கிறார். ‘லாஸ் ஏஞ்செல்ஸ் டைம்ஸ்’ என்ற பத்திரிகையில் இவர் செய்யும் விளம்பரத்தை ஏராளமான வாசகர்கள் படிக்கிறார்கள். வால்டர் லிப்மான், டொராதி தாம்ஸன் என்ற பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகளை விட இவருடைய விளம்பரத்தைத் தான் அதிகமான வாசகர்கள் படிக்கிறார்கள்.

“குடித்தனப் பெண்களே, இன்று நம்மிடம் பட்டாணி வாங்காதீர்கள்”

ஆதாரம்: ராய் எஸ். டர்ஸ்டைன் எழுதிய கட்டுரை: அட்வெர்டைஸிங் அண்ட் ஸெல்லிங், நியூ யார்க்.

என்று இவர் ஒரு நாள் உபதேசிப்பார். "இரண்டு வகையான ஆரஞ்சுகள் உண்டு. நல்ல ஆரஞ்சுகள் ஒரு வகை; நம்மிடம் வந்துள்ள பிளாரிடா ஆரஞ்சுகள் மறு வகை" என்று இன்னொரு நாள் தமாஷ் செய்வார்.

இவருடைய விளம்பரத்தின் அபார சக்தியைச் சில வருஷங்களுக்குமுன் ஒரு பெரிய ஸ்டுடியோ முதலாளி கண்டார். இவரிடம் வந்தார். "மிஸ்டர் பெக், நீர் வாரத்துக்கு வாரம் எங்கள் படங்களைப் பற்றிப் பத்திபத்தியாய் விளம்பரம் எழுதித் தாரும். வாரம் ஒன்றுக்கு 5,000 டாலர் உமக்குச் சம்பளம் தருகிறோம். வருஷம் முழுவதற்கும் இந்த மார்கெட்டில் நீர் பெறும் சம்பளம் 25,000 டாலர்தானே. எங்களிடம் வந்துவிடுமே" என்றார்.

சரி என்று ஒப்புக் கொண்டார் பெக். ஸ்டுடியோவுக்கும் போய்ச் சேர்ந்தார்.

"ஆமாம். நீர் எங்கள் விளம்பரங்களில் என்ன சொல்லப் போகிறீர்?" என்று கேட்டார் ஸ்டுடியோ முதலாளி.

"என்ன சொல்வது? உண்மையைத்தான் சொல்லுவேன். உங்கள் படத்தில் ஒன்று மட்டமாயிருப்பதாக வைத்துக் கொள்வோம். உடனே அதைப்பற்றி என் விளம்பரத்தில் இப்படிச் சொல்வேன்: 'ஏ ஜனங்களே, எங்களுடைய இந்தப் படத்தை நீங்கள் பார்க்காதிருப்பதுதான் மேல். வீட்டிலேயே உட்கார்ந்து ரேடியோவைத் திருப்பிக்கொண்டிருங்கள்.' ஆனல், உங்களுடைய ஒரு படம் நல்லதாயிருந்தால், 'கூட்டங் கூட்டமாய்க் கொட்டகைக்கு வந்து சேருங்கள். அருமையான படம்' என்று விளம்பரம் செய்வேன்" என்றார் பெக்.

முதலாளி நடுநடுங்கினர். "அதிருக்கட்டும். நாங்கள் கடைசியாக எடுத்திருக்கும் படத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

பெக் தமது கட்டை விரலால் மூக்கை அமுக்கி, ஆள்காட்டி விரலை மேலே தூக்கி, சங்கு ஊதிவிட்டார்.

மறுநாள் அவர் மீண்டும் தமது கறிகாய் மார்க்கட் விளம்பரத்துக்கே திரும்பிவிட்டார்.

* * *

ஆர்லிங்டன் என்னும் இடத்தில், வீடுகளும் நிலங்களும் வாங்கிக் கொடுக்கும் தரகின் மூலம் பிரமாதமாகச் சம்பாதித்துள்ள பர்ட்டென் இம்மென் என்ற ஒருவர் இருக்கிறார்.

ஓர் இடத்தைப்பற்றி அவர் செய்யும் விளம்பரம் இவ்விதம் இருக்கும்: "இந்தச் சொத்தைப்பற்றி ஏதாவது இரண்டு நல்ல வார்த்தை சொல்ல வேண்டும் என்று நாங்களுந்தாம் இருபது நிமிஷநேரம் யோசித்து யோசித்துப் பார்த்தோம். அத்தனை நேரமும் வியர்த்தமேயாயிற்று. இங்கே கொஞ்சம் நல்ல காற்று வரும். அதைத் தவிர வேறு ஒரு சுகமும் இல்லை."

இன்னொரு வீட்டைப் பற்றி, "வீடு பெரிய வீடுதான். ஆனல், ஒரே ஒரு சம்சாரத்தோடுதான் இங்கே வாழ முடியும்" என்று வர்ணிப்பார்.

"வீட்டை வாங்குகிறவர் வந்து குடியேறும் சமயத்தில், எவையேனும் கோழிக்குஞ்சுகள் வீட்டிலே குளம் பறித்துக்கொண்டிருந்தால், அந்தக் குஞ்சுகளின் கிரயம் பிரத்தியேகம்" என்றும் அவர் எச்சரிப்பார்.

"நல்ல கற்பனு சக்தியும் துணிச்சலும் உள்ளவர்களுக்கு அவற்றை உடபயோகிக்க இந்த வீட்டிலே அபாரமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும்" என்று கிண்டல் செய்வார்.

* * *

இவர்கள் செய்யும் விளம்பர யுக்தி புதிதல்ல. ஏற்கனவேயும் இப்படிச் சிலர் செய்திருக்கிருர்கள். நியூ யார்க் நகரில் உள்ள பிரசித்த மான ஜான் வான்மேக்கர் என்ற கம்பெனியார் ஒரு சமயம், "எங்களிடம் ஒரு காசுகூடப் பெருத ரெயின் கோட்டுகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை ஒன்று ஒரு டாலர் 49 செண்ட் விகிதம் விலைக்கு விற்கப் போகிருேம்" என்று விளம்பரம் செய்தார்கள். அடுத்த நாள் ஒரே ஒரு ரெயின் கோட்கூட மிஞ்ச வில்லை.

அதே நகரில் உள்ள ஸாச் குவா விட்டி ஸ்டோர்ஸ் என்ற கம்பெனியார் ஒரு குறிப்பிட்ட சரக்கைப் பற்றி, "தெரியாத்தனமாக இந்தச் சரக்கை அதிக விலை கொடுத்து ஏராளமாக வாங்கி விட்டோம். ஏமாந்து போனோம்" என்று ஒரு நாள் விளம்பரம் செய்தார்கள். அடுத்தாற் போல் இருந்த இன்னும் ஒரு விளம்பரப் பாராவில், "இந்தச் சரக்கு மிகவும் சுகமாயிருக்கும். ஆனல், பார்ப்பதற்கு விகாரந்தான். 140 டாலர் விலை கொடுத்து வாங்கி விட்டால், அப்படி வாங்குகிறவருக்குக் கொஞ்சம் அழகாகத் தோன்றுமோ என்னவோ" என்று கண்டிருந்தது.

இவ்விதம் தங்கள் வியாபாரப் பொருளை இழிவு படுத்தியோ குறைத்தோ கூறுவதன் மூலம், வாடிக்கைக்காரர்களின் பூர்ண நம்பிக்கையை இந்த வியாபாரிகள் சம்பாதித்து விடுகிருர்கள். ஆகவே, இவர்கள் நல்லது என்று சொல்லும் பொருள் உடனே விற்பனையாகி விடுகிறது. அதுமட்டும் அல்ல; தாங்கள் குறை கூறும் பொருளையுங்கூட, சற்றுக் குறைந்த விலையில் சுலபமாக இவர்கள் விற்றுவிடுகிருர்கள்.

அடைகாக்கும் பெட்டை

கோழி வளர்ப்புப் பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு ஒரு பெண்மணி எழுதிய கடிதத்தில், "பெட்டை எவ்வளவு காலம் முட்டையை அடைகாக்கவேண்டும்?" என்று கேட்டிருந்தாள். "கோழிக் குஞ்சு பொரிக்க மூன்று வாரம்; வாத்துக் குஞ்சு பொரிக்க நான்கு வாரம்" என்று ஆசிரியர் பதில் எழுதினர்.

மூன்று வாரங்களுக்குப் பிறகு அந்தப் பெண்மணியிடமிருந்து ஆசிரியருக்கு மற்ரெரு கடிதம் வந்தது: "உங்கள் யோசனைக்கு நன்றி. முட்டைகளைப் பெட்டை மூன்று வாரங்கள் அடைகாத்தது. கோழிக்குஞ்சு பொரிக்கவில்லை. எனக்கு வாத்துக்குஞ்சு தேவையில்லை. ஆகையால் பெட்டையைக் கூட்டிலிருந்து விரட்டிவிட்டு முட்டைகளை விற்றுவிட்டேன்" என்று அவள் அதில் எழுதியிருந்தாள்!

—ஸக்ஸெஸ்புல் பாரம்.

ஐ.நா.வில் கம்யூனிஸ்ட்

★

இந்தியாவில் இந்திய சர்க்கார்களும் மாகாணச் சர்க்கார்களும் இன்று கம்யூனிஸ்டுகளின் தொல்லை பொறுக்காமல் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஐ. நா. ஸ்தாபனத்திலும் கம்யூனிஸ்டுகள் முட்டுக்கட்டையே போடுகிறார்கள். இந்தக் கம்யூனிஸ்ட் தொல்லையை ஒழித்து, ஐ. நா. ஸ்தாபனத்தைப் பலப்படுத்த என்ன வழி என்று கூறுகிறது இந்தக் கட்டுரை. ஜேம்ஸ் பர்ன்ஹாம் என்ற பிரபல ஆசிரியர் எழுதியுள்ள ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்துக்கு நோய் பிடித்திருக்கிறது.

இந்த ஸ்தாபனம் ஏற்பட்டதன் முக்கிய நோக்கங்கள் மூன்று. அவையாவன: (1) சர்வதேச சமாதானத்தைப் பாதுகாப்பது; (2) மனித சுதந்தரத்தைப் பாதுகாத்து, விரிவு படுத்துவது; (3) மனிதவர்க்கத்தின் க்ஷேமத்தை வளர்ப்பது. இந்த மூன்று லட்சியங்களையும் உரைகற்களாகக் கொண்டு பார்த்தால், ஐ. நா. ஸ்தாபனம் அடியோடு தோற்றுப் போயிற்று என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்று சீனா, இந்தோனீசியா, லட்டீன் அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், கிரீஸ், இந்தோ சீனா, மஞ்சூரியா ஆகிய நாடுகளிலெல்லாம் யுத்தம், புரட்சி, படுகொலை முதலியவை நடந்து கொண்டிருக்கின்றன. ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில் உள்ள நாடுகளை ஸோவியத் ருஷ்யாவின் சேனை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. அங்கெல்லாம் அந்தச் சேனையின் உதவி கொண்டு, சிறுபான்மைக் கட்சியினரான கம்யூனிஸ்டுகள், இதர பெரும்பான்மைக் கட்சியினரையெல்லாம் கொன்றோ சிறைப்படுத்தியோ ஒழித்து வருகிறார்கள். பிரான்ஸிலும், இதாலியிலும் ஆயுதந்தாங்கிய கம்யூனிஸ்டுகள் உள்நாட்டு யுத்தங்களைக் கிளப்பிவிட முயன்று வருகிறார்கள். ஸோவியத் யூனியனில் கோடிக்கணக்கான மக்கள் அடிமைகளைப்போல் வேலை செய்யும் முகாம்களில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். ஐரோப்பாவில் அநேக இடங்களில் பல செல்வர்களுடைய சொத்தைப் பிடுங்கி, அவர்களையும் முள்கம்பி வேலி போட்ட முகாம்களிலே அடைத்திருக்கிறார்கள். ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் எங்கெங்கும் உண்ண உணவும், வசிக்க வீடும், ஜீவிக்க வேலையும் இல்லாமல் எண்ணற்ற மக்கள் தவிக்கிறார்கள். விஞ்ஞானிகளோ மகா குரூரமான புதுப் புதுப் போர்க் கருவிகளைத் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார்கள்.

இந்தப் பிரச்னைகளில் சிலவற்றைப்பற்றி, ஐ. நா. ஸ்தாபனம் பேசிப் பேசிச் சச்சரவிட்டுக்கொண்

டிருக்கிறதே யல்லாமல் ஒன்றையும் தீர்த்தபாடில்லை. அது தீர்க்காமற் போனாலும் பரவாயில்லை; உபத்திரவம் வேறு விளைத்திருக்கிறது. விஷின்ஸ்கியும் அவருடைய கம்யூனிஸ்ட் தோழர்களும் தீக் கக்குகிறார்கள். சமாதான உணர்ச்சியைப் பரப்பவில்லை; வெறியைக் கிளப்பி விடுகிறார்கள். நாடுகள் தனித்த முறையில் தாங்களாகவே ராஜதந்திரிகளின் தூது மூலம் தங்கள் பிரச்னைகளை நட்புமுறையில் தீர்த்துக் கொள்ள முடியாதபடி கேடு தான் இந்த ஐ. நா. ஸ்தாபனத்தால் விளைந்திருக்கிறது.

இதற்கெல்லாம் ஐ. நா. ஸ்தாபன அமைப்புச் சாஸனத்தில் உள்ள ஒரு குறைதான் காரணம். ஐ. நா. ஸ்தாபன அதிகாரங்கள் அனைத்தையும் இரண்டே இரண்டு முக்கிய சபைகள் தாம் அமல் செய்கின்றன. சமாதானத்தையும் பத்திரத்தையும் பாதுகாக்கும் தீர்மானங்களை நிறைவேற்றுவது செக்யூரிட்டி கவுன்ஸில். மனித உரிமைகளையும் க்ஷேமத்தையும் பற்றிய பிரச்னைகளைக் கவனிப்பது ஜெனரல் அசெம்பிளி. உலக சமாதானம், பாதுகாப்பு ஆகியவை பற்றி இந்த அசெம்பிளி விவாதித்து, கவுன்ஸிலுக்குச் சிபார்சுகளும் செய்யலாம்.

கவுன்ஸிலில் உலகத்தின் ஐந்து முக்கிய வல்லரசுகள் நிரந்தர அங்கத்தினர்களாகப் பதவி வகிக்கின்றன. கொஞ்சகாலத்துக்கு ஒரு முறை சிறிய நாடுகளின் பிரதிநிதிகளிலிருந்து, வேறு ஆறு அங்கத்தினர்களையும் கவுன்ஸிலுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையை, நிரந்தர அங்கத்தினர்களில் ஒரே ஒருவர் மறுத்துத் தடை ஓட் செய்தால் போதும். மற்றப் பத்துப்பேரும் ஒரே முகமாய் அதை ஆதரித்தாலும் பயனில்லை; அந்த நடவடிக்கை நிராகரிக்கப்பட்டுவிடும். சீனா, பிரான்ஸ், ஸோவியத் யூனியன், பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா இந்த ஐந்துந் தாம் அந்த நிரந்தர அங்கத்தினர்கள். அசெம்பிளி சென்ற அக்டோபரில் கூடிய காலத்தில், இப்படி 24 தடவை தடை ஓட்டின் அட்டகாசம் நிகழ்ந்திருக்கிறது. ஐ. நா. ஸ்தாபனம் இன்று சக்தியற்றுக் கிடப்பது மாறிச் சக்தி பெறவேண்டுமானால், இந்தத் தடை ஓட் முறையைத் தொலைத்தாக வேண்டும். ஆனால், இந்தத் தடை ஓட் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது என்று, ஸோவியத் யூனியன் ஆட்சேபிக்கிறது. 24 முறை விழுந்த தடை ஓட்டில் 23 முறை ருஷ்யாவே அந்த உரிமையைச் செலுத்தியது; ஒரே ஒரு முறை பிரான்ஸ் அதைச் செலுத்தியது. ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா இந்த நாலும் பெரும்பாலும் ஒற்றுமையாகவே வேலை செய்துவருகின்றன.

இதிலிருந்து இன்னோர் அபாயத்தை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. உலகெங்கும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ளுக்குள்ளே கம்யூனிஸ்ட் ஐந்தாம் படை இருந்து கொண்டு வேலைசெய்து வருவது தான் அந்த அபாயம். கிரீஸ், துருக்கி, ஈரான், சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் தொல்லைகளெல்லாம் கம்யூனிஸ்ட் ஐந்தாம் படையின் வேலையே யாகும்.

இந்த ஐந்தாம் படையின் முழு உண்மையையும் ஆராய்ந்தறிய, ஐ. நா. அசெம்பிளிக்கு அதன் அமைப்புச் சாஸனப்படி உரிமையும் கடமையும் உண்டு. ஆனால்,

போலண்ட், உக்ரேன், பையெலோ-ருஷ்யா, யுகோஸ்லாவியா, ஜெக்கோஸ்லாவியா ஆகிய நாடுகளிலிருந்து வந்திருக்கும் கம்யூனிஸ்ட் சூத்திரப் பொம்மைகளான பிரதிநிதிகளை ஸோவியத் ருஷ்யப் பிரதிநிதிகள் துணை சேர்த்துக்கொள்கிறார்கள். அசெம்பிளியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாதபடி தடை செய்துவிடுகிறார்கள். தடைஓட் செய்ய அசெம்ப்ளியிலே எந்த அங்கத்தினருக்கும் உரிமை கிடையாது. என்றாலும், பிரசங்க சாமர்த்தியத்தாலும், பார்லிமெண்டரி தந்திரங்களாலும், இப்படி அவர்கள் தடுத்துவிடுகிறார்கள். அசெம்பிளியில் இது பலிக்காவிட்டால், கமிட்டிகளைப் பகிஷ்கரிக்கிறார்கள்; கமிட்டிகளில் புகுந்தாலும் பின்னால் வாபஸ் ஆகிறார்கள்; கமிட்டிகளின் முடிவுகளுக்குக் கட்டுப்பட மறுத்துவிடுகிறார்கள்.

இவ்விதம் ஒரு சிறுபான்மைக் கோஷ்டியார் தன்னை மிரட்டிக்கொண்டேயிருக்க ஐ. நா. ஸ்தாபனம் இடங்கொடுத்துக்கொண் டிருக்கிற வரையில், அந்த ஸ்தாபனத்தால் உருப்படியான காரியம் எதுவும் செயய முடியாது.

கம்யூனிஸ்டுகள் அல்லாத மற்றத் தேசங்களோடு அமெரிக்கா சேர்ந்துகொண்டு, ஐக்கியமாய் வேலை செய்ய வேண்டும்; கம்யூனிஸ்ட் எதிர்ப்பை லட்சியம் செய்யாமல் தற்போதைய சாஸனப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்; ருஷ்யாவும் அதன் துணை நாடுகளும் வெளியேறவோ அவற்றை வெளியேற்றவோ நேர்ந்தாலும் பரவாயில்லை என்று துணிந்து, தடைஓட் உரிமையைக் குறுக்கிவிட வேண்டும். அப்போதுதான் ஐ. நா. ஸ்தாபனம் உருப்படியாகக் காரியம் செய்ய முடியும்.

ஸோவியத் ருஷ்யா விலகிவிட்டால்தான் என்ன மோசம்? அது விலகுமானால், அத்தனைக்கு அத்தனை ஐ. நா. ஸ்தாபனம் வலுப்பட்டு, சமாதானத்துக்கு நன்மையே ஏற்படும்.

கம்யூனிஸ்டுகளிடமிருந்து பகிரங்கமாகப் பிளவு பட்டோமானால், புதிய உலக யுத்தம் ஒன்று வந்துவிடுமோ என்று சிலர் பயப்படுகிறார்கள். உலகத்திலே ஏற்கனவே அந்தப் பிளவு இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதைப் பகிரங்கம் செய்வதால், எவ்வித அபாயமும் வராது. பிளவினால் ஏற்படும் புண்ணை ஆற்றிவிடத்தக்க நடவடிக்கைகளை அப்போது நாம் கைக்கொள்ள முடியும்.

புதிய யுத்தம் நேரக்கூடிய அபாயம் இப்போதே தோன்றியுள்ளது. அந்த அபாயத்தைத் தடுக்கக்கூடிய சக்தி இல்லாமல் தவிக்கிறது, இன்று ஐ. நா. ஸ்தாபனம். அது திறமையாக வேலை செய்யத் தொடங்குமானால் தான் இப்போதுள்ள அபாயத்தை அது தீர்க்க முடியும்.

கம்யூனிஸ்ட் நாடுகள் ஐ. நா. ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட்டாலுங்கூட, பின்னும் அதில் உலகத்தின் மிகப் பெரும்பாலான நாடுகள் அங்கம் வகித்திருக்கும். அதனால் அந்த ஸ்தாபனம் நல்ல வலிமை பெற்றே இருந்து வரும்.

இது கொஞ்சம் உலக ஐக்கியப் பாதையை விட்டு விலகுவது போல் தோன்றினாலும், முடிவான லட்சியம் ஒன்றேயாகும். உலக ஐக்கியத்தைப் பிளவுபடுத்துவது நம் நோக்கம் அல்ல; ஐ. நா. ஸ்தாபனம் நிச்சயமாக உலக சமாதானத்தைப் பாதுகாக்கக் கூடிய காவலனாக விளங்க வேண்டும் என்பதே நம் நோக்கம்.

உலக அதிசயங்களில் ஒன்று என்று வியக்கிருர்கள் தாஜ்மஹலை. அது தோன்றியது ஒரு மன்னனின் சோகத்திலே.

துயரத்தில் தோன்றிய மாளிகை

என். லட்சுமண ராவ்

மும்தாஜ் மஹலின் ஞாபகார்த்தமாக, அவளுடைய காதல் கணவன் ஷாஜஹான் கட்டிய கட்டிடமே தாஜ்மஹல். ஆக்ராவில் யமுனு நதிக்கரையில் அழகும் கம்பீரமும் துலங்க அது நிற்கிறது.

உலக அதிசயங்களில் ஒன்று என்று அதை எல்லோரும் மதிக்கிருர்கள். இந்தத் தாஜ்மஹல் பிறந்த கதை சோகமும் துக்கமும் நிறைந்த ஒன்ருகும்.

சக்கரவர்த்தினியின் சகோதரன் ஆஸப் கானின் மகள் ஆர்ஜுமந்த் பானு பேகம் என்பவள் ஷாஜஹானை 1612-ஆம் ஆண்டு மணந்துகொண்டாள். அவள் தன் கணவனிடம் பக்தியும் அன்பும் சொரிந்தாள். கணவருக்கு ஆபத்தும் துன்பமும் வந்த வேளைகளில், அவருக்கு நம்பிக்கையும் வலிமையுமூட்டிய தூணுக விளங்கினுள். சக்கரவர்த்தியுடன் பானுபேகம் பத்தொன்பது வருஷகாலம் வாழ்ந்து, பதினுலு குழந்தைகளைப் பெற்ருள்; 1631-ஆம் ஆண்டு காலமானுள். அப்போது, அவளுடைய குழந்தைகளில் ஏழு பேர் உயிருடன் இருந்தார்கள்.

தான் மரணமடையப் போவதாக முன்கூட்டியே மும்தாஜுக்கு ஒரு துர்க்குறி தென்பட்டதாம். தன் கருவில் இருக்கிற குழந்தை அழுத அழுகுரல் அவளுக்குக் கேட்டதாம். இப்படிக் கருவிலுள்ள குழந்தையின் அழுகுரலைக் கேட்ட தாய் எவளும் பிழைக்கமாட்டாள் என்று ஓர் ஐதிகம் உண்டு. தான் இவ்விதம் தன் குழந்தையின் அழுகுரலைக் கேட்ட செய்தியைத் தன் கணவரிடம் மும்தாஜ் தெரிவித்தாள். இரண்டு வேண்டுகோள்களும் செய்துகொண்டாள்: "ஒன்று, நீங்கள் என் மரணத்துக்குப் பிறகு வேறு ஒருத்தியை மணம் செய்துகொள்ளக் கூடாது; இரண்டு, என் ஞாபகார்த்தமாக ஒரு கட்டிடம் கட்டவேண்டும்" என்ருள்.

1630-ஆம் ஆண்டு பர்ஹாம்பூரில் கான் ஜஹான் லோதியின் மீது ஷாஜஹான் போர் புரிந்துகொண்டிருந்தார். அதில் அவர் வெற்றியடையும் வேளை. அதே சமயத்தில், அவரது வாழ்க்கையிலேயே பேரிடி போன்ற இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. ஆக்ராவிலிருந்து தக்ஷிணத்துக்கு ஷாஜஹானுடன்கூடவே அவர் மனைவியும் சென்ருள். அவளுக்கு அவர் மும்தாஜ் மஹல் (அரண்மனையின் மகுடம்) என்ற பெயர் சூட்டியிருந்தார். 1631-ஆம் ஆண்டு ஜுலை மீ 7-ஆம்தேதி அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாயின் உயிருக்கே அபாயமாய் விளைந்த அந்தக் குழந்தையின் பெயர் தஹர்-ஆரா (ஜௌஹர்- ஆரா).

ஷாஜஹான் அளவிறந்த வேதனையும் துயரமும் அடைந்தார். மும்தாஜின் அழகை அப்படியே பிரதிபலிக்கக் கூடிய ஒரு ஞாப

காப்பிரைட்: ஓரியெண்ட் (ஆங்கிலம்: 28-3-'48) 93-ஏ, தரம் தோலா தெரு, கல்கத்தா.

கார்த்தக் கட்டிடத்தை அமைப்ப தென்று சக்கரவர்த்தி தீர்மானித்தார். உலகத்திலேயே வேறு எந்த ராணியின் ஞாபகார்த்தமாகவும் அமையாத அவ்வளவு அபூர்வமான ஒரு கட்டிடத்தை அவர் கட்டினார். அதுவே தாஜ்மஹல். இதைக் கட்டியதன் மூலம் தமது பெயரையும் தம் காதலியின் பெயரையும் பிற்கால சந்ததியார் என்றென்றும் ஞாபகத்தில் வைக்கும்படி செய்துவிட்டார் ஷாஜஹான்.

மாசு மறுவற்ற இந்தக் கட்டிடத்தை 1632-ஆம் ஆண்டு அவர் கட்டத் தொடங்கினார். மாஸ்டர் எபாடி என்ற இணையற்ற சிற்பி அந்தக் கட்டிட வேலையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். முகலாயர்களின் ஆட்சி உச்சநிலையில் இருந்தபோதே, இந்தக் கட்டிட வேலையை ஷாஜஹான் தொடங்கினார். ஷாஜஹானின் சாம்ராஜ்யத்தில் அப்போது அவருக்கு 20-கோடி ரூபாய் வருஷவருமானம் வந்தது. ஆகையால், வேறெந்த இந்திய அரசனும் எண்ணவும் துணியாத செல்வத்தை இந்தக் கட்டிடத்தில் அவர் கொட்டினார். 20,000 ஆட்கள் 22 வருஷகாலம் இதைக் கட்டுவதற்கு ஓயாமல் உழைத்தார்கள். சிற்பிகள், கொத்தர்கள், திட்டம் போடுவோர், சுவர் எழுப்புவோர், நவரத்தினம் இழைப்போர் ஆகிய எத்தனையோ பேர் உழைத்தார்கள். கட்டிடத்தைக் கட்ட மொத்தம் 50-லட்ச ரூபாய் செலவழிந்ததாக மதிப்பிடுகிறார்கள்.

தாஜ்மஹாலைக் கட்ட ஷாஜஹான் எங்கெங்கெல்லாமிருந்தோ தளவாடங்களை வாங்கிவந்தார் என்பதை முகலாய சரித்திராசிரியர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். வெள்ளைச் சலவைக்கல் மக்ரானுவிலிருந்து வந்தது. பாறைக்கல் பதேப்பூர் சிக்ரியிலிருந்து வந்தது. மஞ்சள் சலவைக்கல் நர்மதை நதிக் கரையிலிருந்து வந்தது. நவரத்தினங்களும் இப்படியே, பல நாடுகளிலிருந்து வந்தன. பாக்தாதிலிருந்தும் நைல் நதிக்கரையிலிருந்தும் மரகதங்களும், இந்து மகாசமுத்திரத்திலிருந்து முத்தும் பவழமும், காந்தாரத்திலிருந்து சிவப்புக் கற்களும், இலங்கையிலிருந்து நீலக்கற்களும், புந்தேல்கண்டிலிருந்து வைரீயங்களும், பாரசீகத்திலிருந்து ஊதாக்கற்களும் வந்தன. இவையெல்லாம் தாஜ்மஹாலிலே பதிக்கப் பெற்று, அதன் அழகை மேலும் பொலியச் செய்கின்றன.

தாஜ்மஹாலின் உச்சியில் மகுடம் வைத்தது போல்ஒரு கும்பம் துலங்குகிறது. கட்டிடத்தின் நாலு புறமும் ஒவ்வொன்றாக நாலு அழகான ஸ்தூபிகள் நிற்கின்றன. கும்பவட்டத்தின் குறுக்களவு 58அடி; உயரம் 210 அடி. இந்தக் கும்பத்துக்குத் திட்டம் போட்டவர் துருக்கியிலிருந்து வந்த இஸ்மேல்கான். கும்பத்தில் எழும் எதிரொலி மகா இனிமையாய், தூய்மையாய், நீண்ட நேரம் ஒலிக்கிறது.

1666-ஆம் ஆண்டு ஷாஜஹான் காலமானார். அவர் மரணப்படுக்கையில் இருக்கும்போது, "உங்களுடைய கடைசி ஆசை என்ன?" என்று நண்பர்கள் அவரைக் கேட்டார்கள். "என்னை நான் சிறை இருந்த மல்லிகைக் கோபுரத்துக்கு எடுத்துச் செல்லுங்கள்" என்று அவர் கூறினார். அங்கே படுத்து, தாம் எழுப்பிய மாசுமறுவற்ற தாஜ்மஹாலை நோக்கியபடியே, சக்கரவர்த்தி தம் ஆயுளின் கடைசி நிமிஷங்களைக் கழித்தார்.

முயல்

ரஜத்ஸேன்

கூட்டினுள்ளிருந்து நிர்மல் ஒரு முயலை எடுத்தபோது அது தனக்கு நேரப்போகும் கதியை எண்ணியோ என்னவோ தத்தளித்தது. கூட்டை மூடி வெகு நேரமாகியும் அதனுள்ளிருந்த மற்ற முயல்கள் அசைவற்றிருந்தன. தங்கள் கூட்டத்தை விட்டுப் போன முயல் திரும்பி வராதென்பதை அவை உணர்ந்திருந்தன.

அறைக்கதவைத் தாழிட்டுவிட்டு, நிர்மல் மருந்து அலமாரியைத் திறந்தான். அதில் கத்தி, கத்தரி முதலிய பல கருவிகள் பளபளத்தன. 'ஸ்டவ்' ஜோ என்று எரிந்துகொண்டிருந்தது. அதன்மேல் அலுமினியம் கிண்ணத்தில் ஜலம் கொதித்தது. இரண்டொரு கத்திகளை அதில் போட்டான். அறையின் மத்தியிலுள்ள மேஜையின் பக்கங்களில் பல ரகமான தோல் வார்கள். ஒரு வாரினால் முயலின் கால்களைக் கட்டினான். ஜன்னலுக்கு அருகில் இருந்த குட்டி மேஜையிலுள்ள 'மைக்ராஸ்கோப்'பைக் கண்ணில் வைத்துச் சரி பார்த்துக்கொண்டான். மேஜை 'டிராயரி'லிருந்து புது 'ஸ்லைட்' ஒன்றை எடுத்து வெளியே வைத்தான். பிறகு கைக்குச் சோப்புப் போட்டுக் கழுவிக்கொண்டான். 'ஸ்டவ்'வை அணைத்துவிட்டுச் சிமிட்டாவினால் கிண்ணத்திலிருந்து இரண்டு கத்திகளை எடுத்துக்கொண்டான். முயலை விருப்பு வெறுப்பற்றவனாய் ஒரு தரம் பார்த்துவிட்டு அதன் நெஞ்சில் நிதானமாகக் கத்தியைப் பாய்ச்சினான். உஷ்ணமான ரத்தத்தினால் மேஜை நனைந்தது; முயலின் உடல் சில தரம் நடுங்கியது. பிறகு அசைவற்றுவிட்டது. அதன் கால்வரை கிழித்துச் சுடச்சுட இருக்கும் அதன் உட்பாகத்திலிருந்து கொஞ்சம் மாமிசத்தைத் துண்டித்து எடுத்தான். கணக்கற்ற ஜீவ அணுக்கள் நெளிவது 'மைக்ராஸ்கோப்' மூலம் தெரிந்தது. நிர்மல் சீழ்க்கை அடிக்க ஆரம்பித்தான்.

* * *

“இன்னும் ஒன்று தீர்ந்தது. இல்லையா, நிமு?” என்று கேட்டாள் அவன் தாய்.

“கொல்லாவிட்டால் எப்படி? இது ஒன்று போவதால் எத்தனையோ மனிதர்களைப் பிழைக்க வைக்கலாமே. மனிதர்களையே சோதனை பண்ணலாம் என்று பார்த்தேன். அது எப்படி முடியும்?

ரவீந்திரநாதருக்குப் பிறகு மறுமலர்ச்சி எழுத்தாளர் கோஷ்டி ஒன்று வங்காளத்தில் தோன்றியுள்ளது. 'பூர்வாசா'வைச் சேர்ந்த அந்தக் கோஷ்டியில் டாக்டர் ஹுமாயூன் கபீர், தாராசங்கர் பானர்ஜி போன்ற பிரபல எழுத்தாளர்கள் வெவ்வேறு துறைபற்றிய விஷயங்களை எழுதி வருகிறார்கள். அவர்களுள் ரஜத் ஸேன் சிறுகதைகள் எழுதுவதில் சிறந்து விளங்கும் ஒருவர். இவரது சிறுகதைத் தொகுதி ஒன்றும் ஏற்கனவே வெளியாகியிருக்கிறது.

காப்பிரைட்: பூர்வாசா (வங்காளி: மே '47), கணேஷ் அவென்யூ, கல்கத்தா.

முயலை அறுத்து இப்படிப் பரிசோதிக்கும் அவன், மனிதரிலேயே ஒருவர் தன் பரீட்சைக்கு அகப்படமாட்டாரா என்று ஏங்கிக்கொண்டிருந்தான். ஒருத்தி அகப்பட்டுவிட்டாள்!

அதனால்தான் முயலை வதைக்க வேண்டியிருக்கிறது.''

"மனிதர்களையா? என்னடா? உனக்குப் புத்தி கெட்டுவிட்டதா என்ன? அதனால்தான் உன்னைத் தேடிக்கொண்டு நோயாளிகள் யாரும் வருவதில்லை! இதெல்லாம் வேண்டாம். ஜுரமானால் மருந்து கலக்கிக் கொடு; கட்டியானால் ஆபரேஷன் பண்ணு; இரண்டொருவராவது அப்போதுதான் வருவார்கள். இவ்வளவு நன்றாகப் படித்துவிட்டு இப்படி வாழ்நாள் முழுதும் முயலைத்தான் அறுத்துக்கொண்டிருக்கப்போகிறாயா? - உன் சின்ன மாமா கூப்பிட்டானே, அங்கே போய் வருகிறதுதானே?'' என்றாள் தாய்.

"அங்கே போனால் பெரிய டாக்டர்களின் பின்னால் நான் திரிய வேண்டியதுதான். நோயாளி பிழைத்தானானால் அவர்களுக்குக் கீர்த்தி. அங்கே உழைக்கிற ஆட்டு மந்தைகளோடு என்னால் சேர்ந்திருக்க முடியாது. என் வழியில் என் இஷ்டப்படி போகப் போகிறேன்'' என்றான் நிர்மல்.

"போதுமடா! நிறுத்து. உன் தலையில் எழுதியிருக்கிறதே அவதிப்படவேண்டுமென்று; பட்டால் தானே தெரியும்!''

"கிடக்கட்டும், அப்படிப் பட வேண்டுமென்றிருந்தால் நான்தானே அநுபவிக்கப்போகிறேன். அப்போது யாரும் எனக்காக அழ வரவேண்டாம், போயேன்.''

* * *

அந்திப்பொழுது; நிர்மல் தாலதாலாவிலுள்ள தன் 'டிஸ்பென்ஸரி'யில் தனியாக அமர்ந்து வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். அந்த வாரம் இரண்டே நோயாளிகள்தாம் அங்கே வந்தார்கள். எலும்புக்கூடே நடந்து வருகிற மாதிரி ஒரு ஹிந்துஸ்தானிக்காரி முதலில் வந்தாள். நிர்மல் அவளைப் பரீட்சித்துப் பார்த்துவிட்டு, "நல்ல ஆகாரமாகச் சாப்பிடு; உடம்புக்கு ஒன்று

மில்லை. பசியினுல்தான் வயிற்று வலி'' என்ருன். அவள், "இங்கே நான் வந்ததே தப்பு. யாராவது பெரிய டாக்டரிடம் போயிருக்க வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டு போய்விட்டாள்.

இரண்டாவது ஆசாமி மோட்டாரில் அடிபட்டவன். அவனுக்கு வெளிக்காயம் படவில்லை யாகையால் நிர்மல் 'பாண்டேஜ்' போடவில்லை. "ஒத்தடமாவது கொடுக்கவேண்டாமா?'' என்று அவன் கேட்டதற்கு, நிர்மல் "அதுவும் அவசியமில்லை'' என்ருன். "இதற்காகவா உம்மிடம் வந்தேன்?'' என்ருன் அந்த இளைஞன். அதற்கு நிர்மல், "வாஸ்தவமாகவே உடம்பு சரியாக இல்லாவிட்டால்தான் நான் வைத்தியம் பண்ணுவது வழக்கம்'' என்று சொல்லி அவனை அனுப்பி விட்டான்.

அந்தப் பேட்டையில் நிச்சப்தம் குடிகொண்டது. எப்போதாவது சர்க்குலர் ரோடிலிருந்து டிராம் ஓசை கேட்கும். நிர்மல் கதவைப் பூட்டிக்கொண்டு போக வெளியே வந்தான். "சற்று இருங்கள்'' என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். உயரமாய் ஒட்டி உலர்ந்த ஒரு பெண் அரை இருட்டில் நிழல்போல் நின்றுகொண்டிருந்தாள். "நாழிகை ஆகிவிட்டதே. என்னைப் பார்க்க முடியுமா?'' என்ருள்.

"இங்கேயா, வேறெங்கேயாவது வரவேண்டுமா?''

அவள் ஜன சந்தடியற்ற வீதியை ஒரு தரம் நோக்கிவிட்டு, "இன்றைக்கு வேண்டாம்; நாளைக்குத் தயைசெய்து இந்த இலக்கத்துக்கு வந்து பாருங்கள்'' என்று ஒரு காகிதத் துண்டை அவனிடம் கொடுத்தாள்.

மறுநாள் போய்த் தேடி அந்த வீட்டைக் கண்டுபிடிப்பதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்ருகிவிட்டது. சிறிய இரண்டடுக்கு வீடு. பல நாளாகக் கவனிக்காததால் எங்கும் ஒரே தும்பும் தூசுமாக இருந்தது. ஆயினும் அந்த வீட்டார் கௌரவமாக வாழ்ந்தவர்கள் என்பதற்கு அடையாளம் இராது போகவில்லை. வீட்டெதிரே தோட்டம் என்று பெயருக்குச் சில மரங்கள் இருந்தன. தோட்டத்தைச் சுற்றிச் சுவர்கள் இடிந்து விழுந்துகொண்டிருந்தன.

அந்தப் பெண்ணுக்கு வயது 25க்கு மேல் இருக்கும். தானே வந்து வழி காட்டினுள். அவன் நாற்காலியில் அமர்ந்ததும் கைப்பெட்டியை இறக்கிவைத்தாள். ஒரு மூலையில் 'பியானே' ஒன்று விலை உயர்ந்த துணியால் மூடப்பட்டுக் கிடந்தது. ரேகை உண்மையில் உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் ஒரு மெல்லிய ரேகையாகவே காட்சியளித்தாள். அவளுடைய நீண்ட கண்களைச் சுற்றிக் கருவளையம் இட்டிருந்தது. பார்வையில் அதிகச் சோர்வு தென்பட்டது. முகம் சுண்டியிருந்ததால் மூக்கு விகாரமாக நீண்டிருந்தது. கொக்குப்போல் கழுத்து. கழுத்தின் அடிப்பாகம் தெரியும்படி ரவிக்கை. பெண்மைக்கு உரிய அங்க லட்சணங்கள் இருப்பதாகவே தெரியவில்லை. ஆயினும் கைவிரல்கள் இன்னும் அழகாகவே இருந்தன. தண்ணிசை ஓய்ந்த பின்பும் அதன் கடைசி இன்னொலி கேட்டுக்கொண்டிருப்பது போல், ஜீவவேகம் இன்னமும் அந்த மேனியில் துள்ளி ஓடியது.

தேக அசௌக்கியம் ஏற்பட்ட விதத்தை அவள் ஆதியோடந்தம் சொல்லலானுள் :

"அப்பா இறந்த பிறகு சம்சார பாரம் என் தலையில் விழுந்தது. நான் அப்போது காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். என் தம்பி படிப்பை விட்டுவிட்டுத் துஷ்ட சகவாசத்தில் இறங்கினன். சொத்து எல்லாவற்றையும் கரைத்துவிட்டான். என் தங்கை லேகாவைச் சினிமாவில் சேர்த்துவிடப் பார்த்தான்; ஆனால் நான் இடங்கொடுக்கவில்லை. பள்ளிக்கூட வாத்தியார் அம்மாள் வேலையை ஏற்றுக்கொண்டேன். லேகாவின் கல்யாணத்துக்குப் பணம் சேர்க்க வேண்டும். நடுநடுவில் அந்தக் குடியன்-என் தம்பி ஹிமாம்சுதான்- அவனுக்குச் சீட்டாடத் துட்டுக் கொடுத்தாக வேண்டும்; இல்லாவிட்டால் என்னைச் சும்மா இருக்க விடமாட்டான். கடைசியில் வியாதி வந்துவிட்டது" என்று சொல்லும் போது கண்ணீரை அடக்கியதால் அவள் தொண்டை அடைத்தது; உடல் நடுங்கியது. "ஆனாலும் செத்துப்போக எனக்கு இஷ்டமில்லை. ஒரு காலத்தில் அழகாக இருந்தேன். மறுபடியும் அந்த இளமையைப் பெறவேண்டும். என்னைப் பிழைக்க வையுங்கள்" என்றாள்.

அவள் உடலைப் பரீட்சித்துப் பார்த்ததும் நிர்மல் வியப்புற்றான். இவள் இன்னும் எப்படி உயிரோடிருக்கிறாள்! தன் பரிசோதனைக்கு இதைப்போல் ஒரு 'ஸ்பெஸிமென்' (மாதிரி) அகப்படாதா என்று தான் அவன் காத்திருந்தான். "வைத்தியம் செய்தாலும் உடம்பு தேற ஒரு வருஷத்துக்குமேல் ஆகும். ஒன்று கேட்கிறேன். யோசித்துப் பதில் சொல்லவேண்டும். என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள உனக்குச் சம்மதமா?" என்று நிர்மல் கேட்டான்.

அந்தப் பெண்ணைப் பார்க்க அப்போது பரிதாபமாக இருந்தது. அச்சமுற்ற பறவை சிறகடித்துக் கொள்வதுபோல் இருந்தது அவள் நிலை. தன் தங்கை லேகாவையும் தாயையும் குறித்து அவள் கவலைப்படவே, அவர்களைக் கவனித்துக் கொள்வதாக நிர்மல் தெரிவித்தான். "சம்மதந்தான்" என்று சொல்லி அவள் அப்படியே நாற்காலியில் ஒடிந்து விழுவது போல் சாய்ந்து விட்டாள். "என் பரிசோதனைகளுக்கு ஒத்தாசையாகவும் இருக்கவேண்டும்" என்று நிர்மல் சொன்னதற்கு, "அப்படியே" என்று பதில் கூறினாள் அந்தப் பெண்.

* * *

பெண்ணைப் பார்க்கப் போன போது, நிர்மலின் தாய் ஹேமாங்கினி கையைப் பிசைந்துகொண்டாள். மருமகளை ஏற இறங்கக்கூடப் பாராமலே வளையல்களை அவளுக்குப் போட்டாள். "நமஸ்காரம் பண்ணு" என்று பெண்ணைப் பார்த்து நிர்மல் சொன்னபோது, சரேலென்று காலை இழுத்துக்கொண்டுவிட்டாள் அவன் தாய் ஹேமாங்கினி.

கல்யாணச் சந்தடி அடங்கியதும், இரவு அறையில் ரேகா தனியாக வெகு நேரம் உலாவிக்கொண்டிருந்தாள். பிறகு மெல்லிய நீல ஒளி வீசும் மேஜை விளக்கின் வெளிச்சத்தில் தன்னை அலங்கரித்துக்கொண்டாள். கிண்ணத்தில் இருந்த பாலைப் பருகினாள். இதுவரை இல்லாத சந்தோஷமும் இனிமையும் அவள் உடலில் ஊறின. படுக்கையில் தலையணையில் சாய்ந்தபடி யாருடைய வரவையோ எதிர்பார்த்திருந்தாள். பூக்கிண்ணத்தில் இருவாட்சிப் பூவை யாரோ செருகிவைத்திருந்தார்கள்.

திடீரென்று மின்வெட்டுப் போல் உடம்பில் ஒரு வேதனை. தலையணை

யை இறுகப் பிடித்துக்கொண்டு உடலைச் சுருக்கிக்கொண்டாள். இது அவளுக்குப் புதியதல்ல. ஆனால் இது இன்று வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. பல் கிட்டிக் கொண்டது. ரவிக்கை நனைந்துவிட்டது. மூச்சுவிட முடிய வில்லை. நிர்மல் வந்து அவளைத் தொட்டு அழைத்தபோது பதில் கொடுக்கச் சக்தி இல்லை அவளுக்கு.

அலமாரியிலிருந்து மருந்துப் பெட்டியைத் திறந்து, தான் தயாரித்த மருந்தை இஞ்செக்ஷன் குழாயில் எடுத்துக்கொண்டான். இதுவரையில் இதை அவன் இன்னும் பரீட்சித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. இதன் கடுமையைச் சகித்துக் கொள்ளச் சக்தி யாருக்காவது இருந்தால், உடலில் அந்த வியாதியின் அணு துளிக்கூட இராதபடி செய்துவிடலாம் என்று அவன் நம்பினன். அசைவற்றிருந்த அவளது தோளில் 'ஆல்கஹால்' தடவி ஊசியை ஏற்றினன். அவளைச் சரியாகப் படுக்க வைத்து ரவிக்கைப் பித்தானைத் திறந்தான். புடைவையைச் சற்றுத் தளர்த்திக் கொடுத்தான். வேகமாக மின்சார விசிறியை வீச விட்டான். பிறகு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான். சிகரெட் பற்றவைத்துப் புகையை இழுத்தவண்ணம், "முயலின் உடம்பைக் 'கான்ஸர்' அணு என் அவ்வளவு வேகமாக அரிக்க வேண்டும்? என் அந்த அணு அப்படித் துள்ளுகிறது?" என்றெல்லாம் எண்ணமிட்டபடி தூங்கி விட்டான்.

* * *

ஒரு வருஷகாலம் ரேகாவை நிர்மல் பரிசோதனைசெய்துவந்தான். வாழ்வுக்கும் சாவுக்கு மிடையே, விஞ்ஞானத்துக்கும் வாழ்க்கைக்கு மிடையே போராட்டம் நிகழ்ந்தது. ரேகாவின் ஜீவசக்தியைக் கண்டு அவன் ஆச்சரியம் அடைந்தான். அவளுடைய யௌவனம் மீண்டும் கிளர்ந்தெழுந்தது; அவனது விஞ்ஞான அறிவுக்கு அதன் உண்மை புலப்பட்டதோ இல்லையோ, யார் அறிவார்?

சரத்காலம் வந்தது. ரேகா இப்போது பதினறு வயது மங்கையாகக் காட்சியளித்தாள். இரவு போல் இருண்டு விளங்கிய கூந்தல். கண்களில் மின்னல் விளையாடியது. கன்னம் சிவந்து தோன்றியது. மார்பகம் விம்மிப் புடைத்தது. தோள்கள் தாமரைத் தண்டென விளங்கின. இந்த அடைமொழிகளெல்லாம் தனக்கு ஞாபகம் வந்ததும், அவள் சிரித்துத் தீர்த்து விட்டாள். "இன்று டாக்டர் வந்ததும் ஹ்ருதயபரீட்சை பண்ண வேண்டும்" என்று புன்சிரிப்புடன் சொல்லிக்கொண்டாள். அவள் மனத்தில் பியானேவின் பழைய இன்னிசை சஞ்சரித்துக்கொண்டிருந்தது. நிர்மலின் தாய் கங்காஸ்நானம் பண்ணப் போயிருந்தாள். ரேகா குளித்துவிட்டுப் பெரிய நிலைக்கண்ணாடிக்கு எதிரே வந்து நிற்கும்போது நிர்மலின் காலடியோசை கேட்டது. தலைப்பைச் சற்று ஒதுக்கி ரவிக்கையில் கை நுழைத்தபடி ஒயிலாக நின்றாள் ரேகா. கண்ணாடியில் அவள் உடல் நெளிவைக் கண்டு கணநேரம் மயங்கியது நிர்மலின் மனம். மேஜை மேல் பெட்டியை வைத்துவிட்டு அவன் அவளை உற்று நோக்கினன். ரேகா ரவிக்கைப் பித்தானைப் போட்டுக்கொண்டிருந்தாள். "இன்னும் கொஞ்சம் 'இஞ்ஜெக்ஷன்' கொடுக்கட்டுமா?" என்று அவன் கேட்டான்.

"மறுபடியும் எதற்கு? நான்தான் தேறிவிட்டேனே?"

"அதனுல்தான் சொல்கிறேன்: புதிதாக ஒரு வியாதியை உடம்பில் புகுத்தவேண்டியது அவசியம்."

"என் உடம்பு சொஸ்தமாக இருக்கிறதே! இது வேறு எதற்கும் பிரயோஜனப்படாதா?" என்று சொல்லி அற்புதமான நெளிவுடன் நின்ருள் ரேகா.

நிர்மல் அந்த நெளிவுக்கு முன் தோற்றுவிட்டான் என்றே சொல்ல வேண்டும். ரேகாவைவிட எதுவும் உயர்வு இல்லை; வாஸ்தவந்தான். ஆனுலும் விஞ்ஞானத்தை அவனுல் எப்படி விட முடியும்?

அவன் பதிலை எதிர்பார்த்த வண்ணம் தன்னைச் சமாளித்துக் கொள்ள முடியாமல் நின்ருள் ரேகா. ஆனுலும் புத்தி தடுமாற வில்லை. "மார்பைத் தொட்டுப் பாருங்கள்! என்னவோ செய்கிறது" என்று கூறிக் கட்டிலின் மேல் சாய்ந்தாள். ரவிக்கைப் பித்தானைக் கழற்ற ஒரு கணம் பிடித்திருக்கும் அவளுக்கு. மேலாடையை விலக்கிக் கண்களை மூடிக் கொண்டாள். 'ஸ்டெதாஸ்கோப்'பை அவள் மார்பில் வைக்கும்போது நிர்மல் சற்றுத் தயங்கினுன். 'என்ன அபூர்வ அழகி இவள்! இவளை நாம் அல்லவோ ஓர் உருவாக்கினேம்!' என்று பெருமை கொண்டான். ஆனுலும் அவன் தோல்வி அடைய விரும்பவில்லை. 'ஸ்டெதாஸ்கோப்'புக்குப் பதில் 'இஞ்ஜெக்ஷன்' ஊசியை எடுத்தான்.

ஊசி தன் உடலில் ஏறியதை ரேகா உணர்ந்தாள். ஆனுலும் அவள் பதில் பேசவில்லை. மருந்தின் குணவிசேஷத்தைக் கண்டறிவதற்காக, நிர்மல் அசையாமல் அவளையே கவனித்துக்கொண்டிருந்தான். ரேகாவின் முகம் முதலில் சிவந்தது. திட்டுத்திட்டாக அவள் உடலில் வடுக்கள் தோன்றின. ரேகா பெருமூச்சு விடலானுள். கையால் மின்சாரவிசையைத் தட்டி முடுக்கப் பார்த்தாள். மூடிய அவள் கண்ணிதழ்கள் வேகமாகத் துடித்தன. அவள் சரீரம் கோணிக் குறுகிவிட்டது. முகத்தைத் தலையணையில் செருகிக்கொண்டு குப்புறக் கவிழ்ந்தாள் ரேகா.

நிர்மல் அவசரம் அவசரமாக அவளை நன்ருகப் படுக்கவைப்பதற்காக, அவள் மார்பில் கையைக் கொடுத்தான். அப்போது அவன் கையில் ஸ்டெதாஸ்கோப்போ, இஞ்ஜெக்ஷன் ஊசியோ எந்தக் கருவியும் இல்லை. உஷ்ணமான அந்த ஸ்பரிசத்தால் ஒருவித மின்வெட்டு அவன் உடலில் பாய்ந்தது. ஜீவ வேகத்தின் முன் அவன் எம்மாத்திரம்? மருந்து மிகுதியாக இருக்கும் அந்தப் புட்டியை மற்ருெரு கையால் ஜன்னல் வழியாக வெளியே வீசி எறிந்தான். ரேகாவைப் படுக்கையில் சரியாகப் படுக்கவைத்தான். ஆனுல் ஏனே, அந்த ரவிக்கைப் பித்தானை மூட அவனுக்குத் துணிவு வரவில்லை.

தண்ணீர் பாலத்தின் கீழே ஓடிக்கொண்டே இருக்கிறது; அதனடியில் தங்கி நிற்பதில்லை. அதுபோல் பணமும் பிறர்க்கு உதவும் இயல்புடையோர் கரங்களின் வழியே சென்றுவிடுகிறது; அவர்கள் அதைச் சேமித்து வைப்பதில்லை.

—ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

எது சரி?

(1) வீரமா முனிவர்: (அ) தண்டகாரணிய வாசிகளில் ஒருவர் (ஆ) பெஷி என்ற இத்தாலி நாட்டுப் பாதிரி (இ) ராஜ ராஜன் காலத்து வீரரில் துறவியான ஒருவர் (ஈ) விசுவாமித்திரர்.

(2) தாளசமுத்திரம்: (அ) ராமேசுவரத்துக்கு அருகிலுள்ள கடற்பகுதி (ஆ) திருநெல்வேலி ஜில்லாவில் ஓர் ஊர் (இ) ஒரு தமிழ்நூல் (ஈ) எப்போதும் தாளம் போடுவதுபோல ஒலிக்கும் ஏரி.

(3) அலைவாய்: (அ) திருச்செந்தூர் (ஆ) ஆற்றின் இடைக்குறை (இ) எப்போதும் பேசிக்கொண்டிருக்கும் வாய் (ஈ) ஒரு மலை.

(4) மூவர் முதலிகள்: (அ) செல்வராக இருந்த மூன்று வீரர்கள் (ஆ) ஒருவகைச் சாதி (இ) மும்மூர்த்திகள் (ஈ) தேவாரம் பாடிய மூவர்.

(5) மலைபடுகடாம்: (அ) புரியாத பாஷை (ஆ) ஒரு சங்க நூல் (இ) தர்க்கசாஸ்திரத்தில் வரும் பரிபாஷை (ஈ) யானையின் மதம்.

இதுதான் சரி

1. ஆ 2. இ 3. அ 4. ஈ 5. ஆ



படத்திலுள்ள ஒவ்வொரு பசுவும் நாட்டிலுள்ள ஒரு கோடி பசுக்களைக் குறிக்கிறது. ஒரு சட்டி ஒரு கோடி டன் பாலைக் குறிக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பசுக்கள் எவ்வளவு, அவை கறக்கும் பால் எவ்வளவு என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

—கிர்லோஸ்கர்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

கண்டு எழுதுங்கள்

'குழந்தைகள் குறும்பு' என்ற பகுதி வாசகர்களின் மனத்தைப் பெரிதும் கவரும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். அது முற்றும் சரியாயிற்று. நூற்றுக் கணக்கான நண்பர்கள் 'குழந்தைகள் குறும்பு'களை எழுதியனுப்புகிறார்கள். அவர்களுடைய உத்சாகம் எங்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. அந்த உத்சாகத்தை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், ஒரு விஷயம். அதைச் சொல்லத்தான் கொஞ்சம் தயங்கவேண்டியிருக்கிறது; தயங்கினாலும் சொல்லித்தான் ஆகவேண்டும்: நண்பர்கள் அனுப்பும் 'குழந்தைகள் குறும்பு'களில் நாலைந்துகூட ஒரு மாதத்தில் தேறவில்லை.

யாரும் தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து, இந்தக் 'குழந்தைகள் குறும்பு'களை அனுப்பவேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம். ஆனால், ஏற்கனவே பத்திரிகைகளிலோ வழக்கிலோ அடிபடும் விகடத்துணுக்குகளையே பெரும்பாலான நண்பர்கள் எடுத்து எழுதியனுப்பிவிடுகிறார்கள். ஒரே வாரத்தில் ஒரே துணுக்கை வடக்கே டில்லியிலிருந்து தெற்கே திருநெல்வேலி வரையில் உள்ள இருபது முப்பது பேர் எழுதி அனுப்பி யிருந்தார்கள்! இன்னும் சில பேர் அனுப்புபவை 'குழந்தைகள் குறும்பு'களாகவே இல்லை; 'கோட்டான்கள் குறும்புக'ளாக இருக்கின்றன. இதன் காரணம் என்ன? நம் குழந்தைகளுக்குக் குறும்பும் நகைச்சுவையும் இல்லையா? அல்லது அதைக் கண்டறிந்து அநுபவிக்க நமக்குத்தான் உத்சாகமும் சக்தியும் இல்லையா?

"ஒவ்வொரு குழந்தையும் மனித சமூகத்திலே தோன்றி நடமாடும் ஒரு புதிய சக்தி" என்று வர்ணிக்கிறார் ஓர் ஆசிரியர். 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்' என்றார் வள்ளுவர். குழந்தைகளின் சொல்லும் செயலும் அநேக சமயங்களில் புதுமையாயிருக்கும்; நாம் நினையாத ஞான ஒளி வீசும்; கள்ளமற்றிருக்கும்; அத்தனையும் கரும்பு போன்ற ஹாஸ்யமாக இருக்கும். 'இன்பக்கதை களெல்லாம் உனைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ?' என்கிறாரே நம் புதுமைக்கவி பாரதியார். அது முற்றும் உண்மை அல்லவா? 'குழந்தைகள் குறும்பு'ப் பகுதிக்கு ஏடுகளை ஏன் நாம் தேடவேண்டும்? குழந்தைகளையே தேடி, சுவையான சொல்லையும் செயலையும் நண்பர்கள் திரட்டி அனுப்பவேண்டுகிறோம். நல்ல நல்ல துணுக்குகளை எதிர்பார்க்கிறோம். அவை கிடைக்கக் கிடைக்க, இந்தப் பகுதியை இன்னும் அழகாக்கி விரிவுபடுத்த வேண்டுமென்பதே எங்கள் ஆவல்.

— ஆசிரியர்.

Regd. No. M. 4975

மஞ்சரி ‍ ‍ ‍ ‍ எப்ரல் '48

இந்தியாவில் நான் கண்டது	காரவான்	1
படித்த பெண்கள் சம்பாதிக்கலாமா?	வஸந்த்	6
ஜல உஷா	போரம்	10
பிள்ளையின் கம்பெனி	இந்தியா	13
இந்தியாவின் பிஸ்மார்க்	ஸ்வதந்த்ரா	16
பலசாலியின் உணவு	ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம்	21
பசுவும் எருமையும்	விசால பாரத்	23
அலங்காரப் பொருள்கள்	க்ருஹலட்சுமி	26
ருஷ்யரின் இரும்புத் திரை	பம்பாய் கிரானிகிள்	29
காந்தீயும் அரவிந்தரும்	மாத்ருபூமி	31
மிருகங்களின் கூத்து	இந்தியன் ரிவ்யூ	33
கண்டெடுத்த விக்கிரகங்கள்	மாடர்ன் ரிவ்யூ	37
எஞ்சின்களின் விஷமம்	வஸந்த்	41
கத்தி விளையாட்டு	ஸபின்ஸ் டைஜஸ்ட்	46
சுகப் பிரசவம்	பேரெண்ட்ஸ் மகஸீன்	48
கட்டாய ஆசிரியர் சேவை	அமிர்த பஜார்	52
வாசகர் எப்படி?	பாய்ஸ் வீக்லி	55
நாக பஞ்சமி	ப்ரீ இந்தியா	57
கல்யாண வேடிக்கைகள்	க்ருஹலட்சுமி	62
கண்டதே காட்சி	க்ருஷ்ணமிச்ரர்	65
அழியாத ஆத்மா	பிரஜாமதம்	68
வியாபார யுக்தி	அட்வெர்டைஸிங் அண்ட் ஸெல்லிங்	74
ஐ. நா. வில் கம்யூனிஸ்ட்		77
துயரத்தில் தோன்றிய மாளிகை	ஓரியெண்ட்	80

விசேஷப் பகுதிகள்

பாபுராவ் பதில் சொல்லுகிறார்	19
சொல் பொருந்துமா?	25
காந்தி: வாழ்வும் வாக்கும்	44
குழந்தைகள் குறும்பு	61
நகைச் சித்திரம்	72
சிறுகதை: முயல்	82
எது சரி?	38